ACT NO. XV OF 1920.

The Madras Village Panchayat Act.

1920-ம் வருஷத்திய 15-வது

கிராம பஞ்சாயத்து ஆக்ட்டும்.

1920-ம் வருஷத்திய 2-வது ஆக்ட்டால் திருத்தப்பட்ட

கிராமக் கோர்ட்டுகள் ஆக்ட்டும்.

(நாளது தேதி வரையில் திருத்தப்பட்டது.)

லா பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

அச்சிட்டது.

மதுகரவேணி விலாஸம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதறாஸ்.

M. V. Press, Vepery-Madras.

Price Rs. 1-4-0] [Postage Extra.

ACT NO. XV OF 1920.

The Madras Village Panchayat Act.

1920-ம் ஹூலத்திய 15-வது.

கிராம பஞ்சாயத்து ஆக்ட்டும்.

1920-ம் ஹூலத்திய 2-வது ஆக்ட்டால் திருத்தப்பட்ட

கிராமக் கோர்ட்டுகள் ஆக்ட்டும்.

(நாளது தேதி வரையில் திருத்தப்பட்டது.)

லா பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

அச்சிட்டது.

மதுகரவேணி விலாஸம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதறாஸ்.

M. V. Press, Vepery-Madras.

Price Rs. 1-4-0] [Postage Extra.

தமிழ்லா கெஜெட்.

ஹைக்கோர்ட் தீர்ப்புகளடங்கியது.

இதில் சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத், பஞ்சாப், பாட்ணா, ரெங்கூன் முதலிய விடங்களிலுள்ள ஹைகோர்ட் ஜட்ஜ்களால் பரிசீலனைசெய்து எழுதுகிற தீர்ப்புகளில் முக்கியமானவைகளையும், கிங்ஸ் அப்பீல் என்கிற பிரிவி கவுன்சில் தீர்ப்புகளையும், வக்கீல்களின் உபயோகத்துக்கு இங்கிலீஷில் பிரசுரமாவதைத் தமிழில் தர்ஜுமாசெய்து பிரதிமாதம் பிரசுரித்து வரப்படுகிறது.

விவகார ஞானமுள்ளவர்கள், வக்கீல் குமஸ்தாக்கள், பஞ்சாயத்து கோர்ட் மெம்பர்கள், ப்ரைவேட் வக்கீல்கள், பத்திரம் எழுதுகிறவர்கள் முதலியவர்கள் ஹைகோர்ட் தீர்ப்புகளை யறிந்து அதன்படி நடவடிக்கை நடத்துவது சுலபமாயிருக்கும்.

முன்பணமாக வருஷசந்தா ரூ. 3—8—0

ஒரு வருஷத்துக்குக்குறைந்த சந்தாதாரர்களை ஒப்புக்கொள்ளமுடியாது.

ஏனென்றால், அந்தந்த வருஷகேசுகளின் தீர்ப்புகள் அந்தந்த வருஷப்புஸ்தகத்தில் அடங்கி விடுவதால் ஒரு வருஷத்துக்குக் குறைந்த சந்தாதாரருக்கு பூர்த்தியாய் தீர்ப்புகள் கிடைக்காது.

மானேஜர்,
லாகெஜெட் ஆபீஸ்,
டாங்க்வியு, புரசைபாக்கம்,
வேபரிபோஸ்டு, மதராஸ்.

அட்டவணை.

சென்னபட்டணம் 1920-ம் வருஷத்து 15-வது கிராம பஞ்சாயத்து ஆக்ட்.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பிரிவு.

1. பெயர்.
2. பிரதேச வியாபகம்.
3. அர்த்தம்.

2-ம் அத்தியாயம்.

பஞ்சாயத்துகளின் அமைப்பு.

4. பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதும் எடுத்துவிடுவதும்.
5. பஞ்சாயத்துகளிலுள்ள மெம்பர்களின் சங்கியையும், அவைகளின் அமைப்பையும்.
6. வோட்டர்களின் யோக்கியதாம்சங்கள்.
7. அபேட்சகர்களின் யோக்கியதாம்சங்கள்.
8. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டைத்தெரிந்தெடுக்கவேண்டுமென்பது.
9. ப்ரெஸிடென்டின் அதிகாரங்களைப் பஞ்சாயத்துதாரருக்குச்சிறிது காலத்துக்குப் பிரித்துக்கொடுப்பது.
10. பஞ்சாயத்துதாரர், ப்ரெஸிடென்ட் ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு.
11. பஞ்சாயத்துதாரரையாவது ப்ரெஸிடென்டையாவது நீக்கிவிட அதிகாரம்.
12. உத்தியோகத்துக்கு ராஜிநாமா கொடுப்பதும் காலிஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதும்.
13. பஞ்சாயத்தால் நடத்தப்பட்ட காரியமானது காலி அல்லது கிர

பிரிவு.

மப்பிரகு நேரிட்டிருப்பது காரணமாக சட்டசம்மதமற்றதாக மாட்டாதென்பது.

14. பஞ்சாயத்துகள் சட்டப்படி சேர்ந்த சபைகளாவது.

3 - ம் அத்தியாயம்.

அலுவல்களும் அதிகாரங்களும்.

15. பஞ்சாயத்துகளின் அலுவல்கள்.

16. இன்ன அலுவல்களைச் செய்யும்படி லோகல்போர்டார் பஞ்சாயத்துக்கு அதிகாரம் கொடுக்கலாமென்பது.

17. கிராமக் காடுகளைப் பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

18. நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகள் சம்பந்தமான அலுவல்களை ட்ரான்ஸ்பர் செய்வது.

19. ஸ்தாபனங்கள் அல்லது கட்டுவேலைகள் பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படலாமென்பது.

20. பஞ்சாயத்தின் அலுவல்களை அதிகப்படுத்த கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

21. கம்மிட்டிகளை நியமிப்பது.

22. கூட்டுக் கம்மிட்டிகள்.

23. பஞ்சாயத்தின் அலுவல்களைச் செய்துமுடிக்க அதற்குள்ள அதிகாரங்கள்.

24. பிரவேசிப்பதற்கான அதிகாரம்.

25. பஞ்சாயத்து அதன் சகாயச்சட்டங்கள் செய்துகொள்வதும், அதன் சிப்பந்தியை நியமித்துக்கொள்வதும்.

4 - ம் அத்தியாயம்.

பஞ்சாயத்து நிதி.

26. பஞ்சாயத்து விதிக்கக்கூடிய வரிகளும் கட்டணங்களும்.

27. பஞ்சாயத்தின் தீர்மானம் இல்லாமல் வரி அல்லது கட்டணம் விதிக்கக்கூடாதென்பது.

28. வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பதைக்குறித்துப் பிரசித்தம் பண்ணுவது.

29. வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பது.

30. வரி விதித்திருப்பதைத் திருத்தும்படி விண்ணப்பம் செய்துகொள்வது.

பிரிவு.

31. வரிகளையும் கட்டணங்களையும் வசூல்செய்வது.

32. பஞ்சாயத்து நிதியும் அதை உபயோகிப்பதும்.

---

5 - ம் அத்தியாயம்.

மேல் விசாரணை.

33. பஞ்சாயத்தின் நடவடிக்கைகளைச் சிறிதுகாலத்துக்கு நிறுத்தி வைப்பது அல்லது ரத்துசெய்வது.

34. பஞ்சாயத்தின் ரெகார்டுகள், வேலைகள் அல்லது சொத்தைப் பார்வையிடுவது.

35. பஞ்சாயத்தைக் கலைத்துவிட கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

36. கலைத்துவிடுவதனால் இன்னது உண்டாகுமென்பது.

37. ரெஜிஸ்ட்ராரை நியமிப்பதும், அவருடைய கடமைகளும், கவர்ன்மென்டாருடைய அதிகாரங்களை அவருக்குப் பிரித்துக்கொடுப்பதும்;

38. கவர்ன்மென்டாரின் அதிகாரங்களை இதர நபர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது.

39. ஒருமுறை பிரித்துக்கொடுக்கப்பட்ட அதிகாரங்களை ரத்துசெய்வது அல்லது மாற்றுவது.

6 – ம் அத்தியாயம்.

வியாஜ்ஜியங்கள், பிராதுகள், விதிகள் முதலியவை.

40. சொத்து நஷ்டம், சேதம் அல்லது துர்விநியோகம் நேரிட்டால் மெம்பர்கள் உத்தரவாதிகளாவது.

41. பஞ்சாயத்தின்மேலாவது, அதன் மெம்பர், உத்தியோகஸ்தர், ஊழியக்காரர் அல்லது ஏஜென்டின்மேலாவது வியாஜ்ஜியங்கள் தொருடவது.

42. பஞ்சாயத்துக்காவது அதன் ஏஜென்டுகளுக்காவது தடங்கல் உண்டுபண்ணினல் தண்டனை.

43. பாக்கியை வசூலிக்க வியாஜ்ஜியம் வரி விதித்திருப்பது முதலியவைகளைக் குறித்து தோஷம் சொல்லக்கூடாதென்பது.

44. விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

பிரிவு.

45. நோடிஸ்கள் இன்ன மாதிரியாய் இருக்கவேண்டுமென்பது.
46. சகாயர்சட்டங்களைப் பிரசித்தஞ்செய்வது.
47. யாதொன்றைச் செய்யக்கூடாதென்பதைப்பற்றியாகிலும் இடங்களைப் பிரத்தியேகமாய் விட்டுவைத்திருக்கிறதென்பதைப்பற்றியாகிலும் நோடிஸ்.
48. தஸ்தவேஜுகளைச் சேர்ப்பிக்கும் விதம்.

A. ஷெட்யூல்.

வேலைகளும் வர்த்தகங்களும் தொழில்களும்.

கிராமபஞ்சாயத்து ஆக்டின்படிக்கான விதிகள்.

1920-ம் வருஷத்து 2-வது ஆக்ட்டால் திருத்தப்பட்ட 1889-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

1 - ம் அத்தியாயம்.

பிரிவுகள்.

1. சுருக்கமான பெயரும் வழங்கத்தொடங்குவதும்.
2. ரத்துசெய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.
3. நடந்துகொண்டிருக்கும் வியாஜ்ஜியங்கள் அல்லது டிக்ரிகளுக்கு ஆக்ட் பிரயோகப்படுவது.
4. ஆக்ட் பிரயோகப்படுவதினின்றும் நிவர்த்தி செய்யப்பட்ட பிரதேசத்தில் முடிவாகாமல் நடந்துகொண்டிருக்கும் வியாஜ்ஜியங்கள் விஷயத்திலும் டிக்ரிகள் விஷயத்திலும் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை.
5. அர்த்தம் சொல்லும் பகுதி.
   "கிராமம்."
   "கிராமக்கோர்ட்."
   "கிராம முனிஸிப்."
   "டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்."
   "நிர்ணயிக்கப்பட்ட."
   "கையெழுத்து செய்ய."

பிரிவுகள்.

2-ம் அத்தியாயம்.

6. கிராமக்கோர்ட்டுகளை ஏற்படுத்துவது.
7. கிராம முன்ஸிபை நியமிப்பது.
8. கிராமமுன்ஸிபை ஸஸ்பெண்ட் பண்ணுவது அல்லது தள்ளிவிடுவது.
9. பஞ்சாயத்து கோர்ட்டுகளின் அமைப்பு.
மெம்பர்களின் உத்தியோக கால அளவு.
ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பது.
க்வோரம் ஏற்படுத்துவது.
பஞ்சாயத்துக்கோர்ட்டுகளைக் கலைத்துவிட பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்
10. வியாஜ்ஜியங்களைப்பற்றிய ரெஜிஸ்டர் வைக்கவும் நடவடிக்கைகளை எழுதவும் கிராம கர்ணம் முன்ஸிபுக்கு உதவிசெய்வது.
11. கிராம ஊழியக்காரன் ஸம்மன் முதலியதைச் சேர்ப்பிப்பது.
12. கிராம கர்ணம், கிராம ஊழியக்காரன் இவர்களுக்கு பர்த்தியாகவாவது இவர்களோடுகூடாவாவது யாதொரு நபரைக் கலெக்டர் நியமிக்கலாமென்பது.

3-ம் அத்தியாயம்.

13. கிராமக்கோர்ட்டுகள் வியாஜ்ஜியங்களை விசாரணை செய்வது.
விலக்கு.
14. சம்மதியின்பேரில் 200 ரூபாய் வரையிலுள்ள வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்ய அதிகாரம்.
15. இன்ன கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரவேண்டுமென்பது.
16. கிராம முன்ஸிப் நேராய்ப்பற்றுள்ளவராயிருக்கும் வியாஜ்ஜியம்.
17. மெம்பர் நேராய்ப் பற்றுள்ளவாராயிருக்கிற வியாஜ்ஜியம்.
தீர்மானமாயிருக்கிற விஷயங்கள்.
18. வியாஜ்ஜியத்தில் தாவா முழுமையையும் சேர்ப்பது.
தாவாவில் ஒரு பாகத்தைத் தள்ளிவிடுவது.
19. கிராமக் கோர்ட்டுகளால் விசாரணை செய்யப்படக்கூடாத விஷயங்களை இடையில் தீர்மானிப்பது.
20. கால நிர்ணயம்.
20-A. கிராமக்கோர்ட்டாரால் 'பரிசீலனை செய்யப்படத்தக்க வியாஜ்ஜியங்கள் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபால் 'பரிசீலனை செய்யப்படும் வியாஜ்ஜியங்களின் செலவு.
21. வியாஜ்ஜியங்களை வேறொரு கோர்ட்டுக்கு அனுப்புவது.
நடவடிக்கைகள் நடத்துவதை நிறுத்திவைக்கும்படி டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் உத்தரவு செய்வது.

பிரிவுகள்.

4-ம் அத்தியாயம்.

22. வியாஜ்ஜியத்தை ப்ளெய்ன்ட் கொடுத்து அதன்மூலமாய் ஆரம்பிப்பது.
23. ப்ளெய்ன்டில் எழுதவேண்டிய விவரங்கள்.
24. நேராக ஹாஜராவது அல்லது ஏஜென்டை ஹாஜர்ப்படுத்துவது.
25. பிரதிவாதிக்கு ஸம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.
26. ஸம்மன் சேரவொட்டாமல் பிரதிவாதி தப்பித்துக்கொண்டிருக்கும் போது அதை இன்னபடி சேர்ப்பிப்பது.
27. கோர்ட்டின் அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியில் பிரதிவாதியிருந் தால் ஸம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.
28. பிரதிவாதி ஹாஜராகாவிட்டால் நடவடிக்கை.
வியாஜ்ஜியத்தைக்குறித்து இரண்டாவது நோடீஸ் கொடுக்கவேண் டுமென்று பிரதிவாதி சுதந்தரித்துக் கேட்கலாமென்பது.
29. யாருக்காக கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த கட்சிக்காரருடைய செலவில் அதைச் சேர்ப்பிப்பது.
30. வாதி ஹாஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொள்ளாவிட் டாலும் வாதியினுடைய தவறுதலினாலே ஸம்மன் சேர்க்கப்படாவிட் டாலும் நடவடிக்கை.
31. வாதி ஹாஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொண்டால் நட வடிக்கை.
32. 30 அல்லது 31-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை காரணம் தெரிவிக்கப்படுவதன்மேல் ரத்துசெய்வது.
33. பிரதிவாதியின்மேல் ஒருதலையாக செய்யப்பட்ட டிக்ரியை ரத்து பண் ணுவது.
34. எதிர் கட்சிக்காரருக்கு நோடீஸ் கொடாமல் எந்த டிக்ரியையும் ரத்து பண்ணக்கூடாதென்பது.

5-ம் அத்தியாயம்.

35. இருகட்சிக்காரர்களும் ஹாஜராவதன்மேல் நடவடிக்கை.
36. வியாஜ்ஜியத்தை தள்ளிக்கொள்வது.
37. இன்னபடிக்கானால் வியாஜ்ஜியத்தைப் பிரமாணத்தின்மேல் பைசல் செய்யலாமென்பது.
38. எதிர்க்கடன்.
39. ஹாஜராயிராத சாட்சிகளை ஸம்மனனுப்பி வரவழைப்பது.
40. சாட்சிகளுக்கு இன்னவிதமாய் ஸம்மன் சேர்ப்பிப்பது.
இன்ன விஷயங்களில் சவால்கள் அனுப்புவது.
41. ஹாஜராகி சாட்சியம் சொல்லவாவது தஸ்தவேஜைக் கொண்டுவந்து காட்டும்படியாவது ஸம்மன் பிறப்பிப்பது.
42. சில ஸ்திரீகளும் வேறே சில நபர்களும் நேராய் ஹாஜராக வேண்டிய தில்லையென்று நிவாரணை.

பிரிவுகள்.

43. சாட்சிகளை விமரிசைபண்ணுவது.

44. ராஜியாய்ப் போகும்பொருட்டாவது வேறே காரணத்தினாலாவது வியா ஜ்ஜியத்தை நிறுத்திவைப்பது.

6-ம் அத்தியாயம்.

45. விசாரணை செய்துமுடிந்தபின்பு கோர்ட்டார் டிக்ரி பிறப்பிப்பது.

46. டிக்ரியில் எழுதவேண்டியவை.

47. டிக்ரியில் வட்டி தீர்மானிக்கலாம் அல்லது வாயிதாக்களாக செலுத்தும் படி உத்தரவு செய்யலாமென்பது.

48. இன்ன கோர்ட்டாரால் டிக்ரி நிறைவேற்றப்படலாமென்பது.

49. குறித்த யாதொரு அசையும்பொருளைப்பற்றிய டிக்ரியை இன்னபடி நிறைவேற்றுவது.

50. டிக்ரியின்படியாவது வேறே ஒழுங்கு ஏற்பாட்டின்படியாவது பணம் செலுத்துவதை முன்ஸிபுக்கு எதிரில் செலுத்துவது அல்லது ரெகார்ட் பண்ணுவது.

51. தீர்ப்பான கடனாளியைப் பிடிக்கவும் அசையாப்பொருளை ஜப்திபண்ண வுங்கூடாதென்பது.

52. அசையும்பொருளை ஜப்திபண்ணுவது.

53. தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிருந்தால் இன்னபடி ஜப்திபண்ணுவது.

54. தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிராவிட்டால் இன்னபடி ஜப்திபண்ணுவது.

55. கடன் தொகைகளை இன்னபடி ஜப்திபண்ணுவது.

56. ஜப்தி செய்யப்பட்டபின்பு பொருளை உள்ளுக்குள்ளாகப் பராதீனஞ் செய்வது செல்லாதென்பது.

57. ஜப்திசெய்யப்பட்ட பொருளின்மேல் கொண்டுவரப்பட்ட தாவாவைக் குறித்து விசாரணைபண்ணுவது.

58. ஜப்திசெய்யப்பட்டபின்பு பதினைந்துதினங்களுக்குக் குறையாமல் ஒரு தினத்திலே பொருளை விற்பதும்விற்பனையைப் பிரசித்தப்படுத்துவதும். விலக்கு.

59. விற்பனையில் நடவடிக்கை.

60. விற்பனையை நிறுத்திவைக்க அதிகாரம்.

61. கிராம முன்ஸிபும் மற்ற உத்தியோகஸ்தர்களும் விற்கப்படும்பொருளை விலைகேட்கவாவது விலைக்குவாங்கவாவது கூடாதென்பது.

62. பாக்கித்தொகையும் செலவும் செலுத்தக் கொண்டுவரப்பட்டால் விற்பனையை நிறுத்துவது.

63. விற்றுவந்த பணத்தைப் பகிர்ந்து கொடுப்பது.

64. நேராய்க்கைப்பற்றப்பட்ட பொருளைக்கிரயதாரருக்கு ஒப்பித்துவிடுவது

65. மற்ற விஷயங்களில் இன்னபடி கிரயதாரருக்குப் பொருளை ஒப்பித்து. விடுவது.

66. நிறைவேற்றுவதற்காக டிக்ரியை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கு அனுப்பலாமென்பது.

67. யாதொரு டிக்ரியை நிறைவேற்றும் அலுவலை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் வரவழைத்துக்கொள்ளலாமென்பது.

பிரிவுகள்.

7 - ம் அத்தியாயம்.

68. வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த கட்சிக்காரர் இறந்துபோவதன்மேல் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால், இறந்துபோனவருடைய சட்டசம்மதமானபிரதிநிதியை ரெகார்டில் பதிவுசெய்துகொள்ளலாமென்பது.

69. விண்ணப்பம் செய்துகொள்ளப்படாவிட்டால் வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடுவது.

70. வாதிகள் அல்லது பிரதிவாதிகள் ஒருவருக்கு மேற்பட்டிருந்தால், ஜீவித்திருக்கிறவர் கேட்டுக்கொள்ளுவதனுலாவது அவர்மேலாவது வியாஜ்ஜியம் நடப்பது.

71. டிக்ரிபெற்றவர் இறந்துபோனுல் அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியை அவருக்கு பர்த்தியாகச் சேர்க்கலாமென்பது.

72. தீர்ப்பான கடனாளி இறந்துபோனுல், அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியின்மேல் டிக்ரியை நிறைவேற்றலாமென்பது.

73. கிராமக் கோர்ட்டாருடைய நடவடிக்கைகளை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் புனராலோசனை பண்ணுவது.

74. டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜூக்கு ரிபோர்ட் பண்ணலாமென்பதும் சில விஷயங்களில் ரிபோர்ட் பண்ணவேண்டுமென்பதும்.

75. நமூனுக்கள் ஏற்படுத்த ஹைகோர்ட்டாருக்கும், ரெகார்டுகளைப் பரிசோதனைசெய்ய டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜூக்கும் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கும் அதிகாரம்.

8 - ம் அத்தியாயம்.

76. (1) சில குற்றங்களைப்பிடித்துப் பரிசிலனைசெய்ய பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குப் பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கலாமென்பது.

2. அபராதம் விதிப்பதும் அதற்கு வரையறையும்.

3. அபராதம் செலுத்துவதும் தவறினதற்காக தண்டனையும்.

4. க்ரிமினல் சம்பந்தமான பரிசிலனைகளில் நடவடிக்கை முறை.

5. பிராதுதாரருக்காகவாவது குற்றம் சாட்டப்பட்டவருக்காகவாவது நியாயவாதி ஹாஜராகக்கூடாதென்பது.

6. பஞ்சாயத்து கோர்ட்டிலிருந்து கேஸுகளை எப்போதுமாற்றலாமென்பது.

7. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது சப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டின் விசேஷ அதிகாரம்.

8. அப்பீல்.

9. பஞ்சாயத்துகோர்ட்டுகளால் பிடிக்கப்படக்கூடிய கேஸுகளை மாற்றுவது.

77. க்ரிமினல் ப்ரொஸிஜர்கோட் 403-வது பிரவு கிராமக்கோர்ட்டுக்குப் பிரயோகப்படத் தக்கதாவது.

9 - ம் அத்தியாயம்.

கிராமக்கோர்ட்டின் ஆக்டை யனுசரித்த விதிகள்செய்ய அதிகாரம்.

சென்னபட்டணம் 1920-ம்ஹூத்திய 15-வது

கிராம பஞ்சாயத்து ஆக்ட்.

பீடிகை. கிராம காரியங்களை கிராமத்தாரே நிர்வாகம் செய்துகொள்ளுவதற்காக சரியான நிபந்தனை ஏற்படுத்துவதும் அதன் மூலமாய் சென்னை ராஜதானியைச்சேர்ந்த கிராமப் பிரதேசங்களில் சுய ஆட்சி முறையை விருத்திசெய்வதும் யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்தியா கவர்ன் மெண்டுக்குச் சம்பந்தமான 1915-ம்ஹூத்து ஆக்ட் 79-வது பிரிவின் படி இந்த ஆக்டை ஜாரிசெய்வதற்காக கவர்னர் ஜெனரல் அவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்ருல் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பெயர். **1.** இந்த ஆக்டை, 1920-ம்ஹூத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டென்று சொல்லலாம்.

பிரதேச வியாபகம். **2.** இது-சென்னை ராஜதானிபட்டணமும், 1920-ம்ஹூத்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டும் 1920-ம்ஹூத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டும் முறையே பிரயோகப்படுகிற மியுனிஸிபாலிடிகளும் யூனியன்களும் நீங்கலாக சென்னை ராஜதானி முழுவதுக்கும் வியாபிக்கும்.

அர்த்தம். **3.** இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,

(1) 'கட்டிடம்' என்பதில் - யாதொரு வீடு, (ஷாப்) கடை, கிடங்கு, வேலைச்சாலை, குடிசை, கொட்டகைஎன்பவையும் அடங்கும் ;

(2) 'காடு' என்பதில் - கவர்ன்மெண்டாருடைய ஆதீனத்தி லிருக்கிற ரிஸெர்வ் செய்யப்படாத (காப்பாற்றிவைக்கப்படாத) நில மென்பதும், 1882-ம் வருஷத்திய சென்னபட்டணத்து காட்டைக்குறி த்த ஆக்டின்படி ரிஸெர்வ் செய்யப்பட்ட காடென்பதும் அடங்கும்.

(3) 'பஞ்சாயத்து' என்பது - இந்த ஆக்டின் சகல காரியங் களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட சங்கத்தார் என்று அர்த்தமாகும் ;

(4) 'பஞ்சாயத்துதாரர்' என்பது - யாதொரு பஞ்சாயத் தின் மெம்பரென்று அர்த்தமாகும் ;

(5) 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - இந்த ஆக்டின்படி செய் யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும் ;

(6) 'ரெவினியு கிராமம்' என்பது - ரெவினியு கணக்குகளில் கிராமமாக அங்கிகரிக்கப்பட்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீரண மென்று அர்த்தமாகும் ; மேலும்,

(7) 'கிராமம்' என்பது - இந்த ஆக்டின் காரியங்களுக்காக கிராமம் என்று பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படும் யா தொரு விஸ்திரணம் என்று அர்த்தமாகும்.

2-ம் அத்தியாயம்.

பஞ்சாயத்துகளின் அமைப்பு.

பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதும் எடுத்து விடுவதும்.

4. (1) பிரதேச கவர்ன்மெண்டார்—

(a) நிர்ணயிக்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக, இந்த ஆக்டின் சகல காரியங்களையு மாகிலும் அவைகளில் எதையாகிலும் நிறைவேற்றுவதற் காக யாதொரு கிராமத்துக்கு ஒரு பஞ்சாயத்தையாவது

பஞ்சாயத்துகளையாவது அமைக்கும்படி கட்டளையிடலாம்; மேலும்,

(b) அப்படிப்பட்ட விளம்பரத்தை எப்போதாகிலும் அம்மாதிரியாகவே திருத்தலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய தேதியன்றைக்கு சந்தர்ப்பத்துக்கேற்றபடி யாதொரு கிராமத்திலாவது அதன் யாதொரு பாகத்திலாவது செலாவணியாகத் தொடங்கவேண்டும், அல்லது அதற்குப் பிரயோகப்படுவது நின்றுபோகவேண்டும்.

பஞ்சாயத்துகளிலுள்ள மெம்பர்களின் சங்கியையும், அவைகளின் அமைப்பும்.

5. (1) யாதொரு பஞ்சாயத்தில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடுமோ அத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டும்; அந்த சங்கியையானது பதினைந்துக்கு மேற்படாமலும் ஏழுக்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட ரெவினியு கிராமங்களுக்காக யாதொரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ரெவினியு கிராமத்துக்காகவும் இத்தனை மெம்பர்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(3) மெம்பர்கள் நிர்ணயிக்கப்பட்ட விதமாய்த் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

வோட்டர்களின் யோக்கியதாம்சங்கள்.

6. (1) கிராமத்தில் குடியிருப்பவராய் இருபத்தைந்து வயது பூர்த்தியாயிருக்கும் ஒவ்வொரு புருஷரும்-பஞ்சாயத்துதாரர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நடக்கும் எலெக்ஷனில் வோட்கொடுக்க அர்ஹராவார்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின் காரியத்துக்காக யாதொரு நபரின் வயது அல்லது வாசஸ்தலம் விஷயமாய் விவாதம் ஏதாகிலும் உண்டானால், அது நிர்ணயிக்கப்பட்ட விதமாய்த் தீர்மானிக்கப்படும்.

அபேட்சகர்களின் யோக்கியதாம்சங்கள்.

7. பஞ்சாயத்துதாரர்களின் எலெக்ஷனில் வோட்கொடுக்க அர்ஹராயுள்ள ஒவ்வொரு நபரும் பஞ்சாயத்துதாரராய்த் தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவராவார்.

பஞ்சாயத்துப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது.

8. ஒவ்வொரு பஞ்சாயத்தும்-அதன் மெம்பர்களுக்குள் ஒருவரை அதன் ப்ரெஸிடென்டாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

ப்ரெஸிடென்டின் அதிகாரங்களைப் பஞ்சாயத்தாரருக்குச் சிறிதுகாலத்துக்குப் பிரித்துக்கொடுப்பது.

9. ப்ரெஸிடென்டானவர்-சிறிது காலத்துக்குத் தாம் ஊரில் இல்லாமலிருந்தாலும் (வேலை செய்ய) சக்தியற்றிருந்தாலும், அப்போது தம்முடைய அதிகாரங்கள் அல்லது அலுவல்களில் எதையாகிலும் எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு யாதொரு பஞ்சாயத்துதாரருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

ஆனால், அவர்-எந்த அதிகாரங்கள் அல்லது அலுவல்களைப் பிரித்துக்கொடுக்கக் கூடாதென்று பஞ்சாயத்து அவரை வெளிப்படையாய்த் தடுக்கிறதோ அப்படிப்பட்ட எந்த அதிகாரங்கள் அல்லது அலுவல்களையும் பிரித்துக்கொடுக்கக்கூடாது,

பஞ்சாயத்தாரர் ப்ரெஸிடென்ட் ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு.

10. (1) யாதொரு பஞ்சாயத்துதாரர் உத்தியோகம் வகிக்கும் கால அளவானது அவர் தெரிந்தெடுக்கப்பட்ட தேதி முதல் மூன்று வருஷமாகும்.

(2) யாதொரு ப்ரெஸிடென்டானவர்-தாம் பஞ்சாயத்துதாரராக இருக்கும் கால அளவு கழிவதன்மேலாவது, மற்றப்படி தாம் பஞ்சாயத்துதாரராய் இருப்பதை விட்டு நீங்குவதன்மேலாவது, தம்முடைய உத்தியோகத்தை காலிசெய்து விட்டவராக எண்ணப்படுவார்.

பஞ்சாயத்தாரரை யாவது ப்ரெஸிடென்டையாவது நீக்கிவிட அதிகாரம்.

11. (a) யாதொரு பஞ்சாயத்தாரருக்காவது ப்ரெஸிடென்டுக்காவது க்ரிமினல் கோர்ட்டாரால் தீவாந்தரசிட்சையாகிலும் ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்குக் காவல்தண்டனையாகிலும் விதிக்கப்பட்டிருந்து அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும் குற்றம் மன்னிக்கப்படாமலிருந்தாலும்,

(b) யாதொரு பஞ்சாயத்துதாரர் அல்லது ப்ரெஸிடென்ட் பிரவர்த்திக்க மறுத்தாலும் பிரவர்த்திக்கச் சக்தியற்றவராய்விட்டாலும்,

(c) அவர் தமது கடனிறுக்க வகையில்லாதவரென்றாவது கடன் தீர்க்கச் சக்தியற்றவரென்றாவது தீர்மானம் செய்யும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்தப்படி தீர்மானஞ் செய்யப்பட்டாலும்,

(d) 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்பிரகாரம் நல்ல நடத்தைக்காக ஜாமீன் சவதரிக்கும்படி அவருக்கு உத்தரவு செய்யப்பட்டிருந்தாலும்,

(e) அவர் தம்முடைய அலுவல்களைச் செய்கையில் தகாதபடி நடந்துகொண்டதாக அவர்மேல் குற்றம் ஏற்பட்டிருந்தாலும்,

அவரை அவருடைய உத்தியோகத்தினின்றும் பிரதேச கவர்ன்மெண்டார் நீக்கிவிடலாம்.

உத்தியோகத்துக்கு ராஜிநாமா கொடுப்பதும் காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதும்.

12. (1) யாதொரு பஞ்சாயத்துதாரராவது ப்ரெஸிடெண்டாவது - பஞ்சாயத்துக்கு நோடிஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்துக்கு ராஜிநாமா கொடுத்துவிடலாம்.

(2) பஞ்சாயத்துதாரரின் அல்லது ப்ரெஸிடெண்டின் உத்தியோகம் காலியானால், முந்திய நிபந்தனைகளை அனுசரித்துப் புதிதாய் ஒரு பஞ்சாயத்துதாரரையாவது ப்ரெஸிடெண்டையாவது தெரிந்தெடுக்கவேண்டும்.

பஞ்சாயத்தால் நடத்தப்பட்ட காரியமானது காலி அல்லது கிரமப்பிசகு நேரிட்டிருப்பது காரணமாக சட்டசம்மதமற்றதாக மாட்டாதென்பது.

13. யாதொரு பஞ்சாயத்தானது எந்தக் காரியத்தையாகிலும் நடத்திய காலத்தில் பஞ்சாயத்துதாரர்களின் சங்கியையானது அதில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அதைக் காட்டிலும் குறைவாயிருந்ததென்னும் காரணத்தினாலேயாகிலும், யாதொரு பஞ்சாயத்துதாரரையாவது ப்ரெஸிடெண்டையாவது தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட எலெக்ஷனில் யாதொரு கிரமப்பிசகு இருந்ததென்னும் காரணத்தினாலேயேயாகிலும், பஞ்சாயத்தால் நடத்தப்பட்ட அந்தக் காரியமானது சட்டசம்மதமற்றதாய் விட்டதாக எண்ணப்படமாட்டாது.

பஞ்சாயத்துக்கள் சட்டப்படி சேர்ந்த சபைகளாவது.

14. ஒவ்வொரு பஞ்சாயத்தும்-பிரதேச கவர்ன்மெண்டாரால் நிச்சயிக்கப்படும் பெயரால் சட்டப்படி சேர்ந்த ஒரு சபையாயிருப்பதுமல்லாமல், நிரந்தரமாய் ஒருவருக்குப் பின் ஒருவர் வரும் பாத்தியதையையும் பொதுவான முத்திரையையும் உடையதுமாகும்; மேலும். அந்தப் பெயரால் பஞ்சாயத்தானது மற்றவர்கள்மேலும் மற்றவர்கள் அதன்மேலும் வியாஜ்ஜியம் தொடரலாகும். அன்றியும், இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் எந்த விதிகளுக்காகிலும் உட்பட்டு, பஞ்சாயத்தானது - அசையும்பொருளையும் அசையாப்பொருளையும் அடையவும் அல்லது வைத்திருக்கவும் அல்லது ட்ரான்ஸ்பர் செய்யவும், ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும், இந்த ஆக்டின் காரியங்களுக்கு அவசியமான மற்ற எல்லாக் காரியங்களையும் நடத்தவும் அதிகாரம் உடையதாகும்.

---

3 - ம் அத்தியாயம்.

அலுவல்களும் அதிகாரங்களும்.

பஞ்சாயத்துகளின் அலுவல்கள்.

15. பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு யாதொரு பஞ்சாயத்தானது-கீழே குறிப்பிட்ட அதிகாரங்களைச் செலுத்துவதுமல்லாமல் அலுவல்களையும் செய்யலாம் :—

(i) கிராம ரஸ்தாக்களையும், கல்வர்ட்டுகளையும் (சிறு பாலங்களையும்), வாராவதிகளையும், கட்டிடங்களையும் ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(ii) தெருக்களுக்கும் பொதுவான இடங்களுக்கும் விளக்கு போடுவது ;

(iii) ஜலதாரைகள் ஏற்படுத்துவதும், வடிகால் நீரையும் சாக்கடைத் தண்ணீரையும் ஒருவகை செய்வதும் ;

(iv) தெருக்களை சுத்திசெய்வதும், குப்பைக்குவியல்களையும் தாமாகவே அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் செடி கொடிகளையும் சப்பாத்துக்கள்ளியையும் அப்புறப்படுத்துவதும், உபயோகிக்கப்படாத

கிணறுகளையும் சுகாதாரக் கேடான குளங்கள்-குட்டைகள்-வடிகால்கள்-குழிகள் அல்லது பள்ளங்களையும் தூர்த்துவிடுவதும் கிராமத்தின் சுகாதார நிலைமையை இதரவழிகளில் சீர்திருத்துவதும் ;

(v) பொதுவான மலஜலபாதை மறைவிடங்கள் ஏற்படுத்துவதும், பொதுவான அல்லது சொந்த மலஜலபாதை மறைவிடங்களை சுத்திபண்ணுவதற்காக ஏற்பாடுகள் செய்வதும் ;

(vi) (பிரேதங்களை) தகனஞ்செய்யும் இடங்களையும் புதைக்கும் இடங்களையும் ஏற்படுத்தி பராமரித்துவருவதும் ;

(vii) கிணறுகள் எடுப்பதும் அவைகளுக்கு மராமத்து செய்வதும், குடிக்கும் காரியங்களுக்காகவும் துணிதோய்க்கும் அல்லது சுத்திசெய்யும் காரியங்களுக்காகவும் ஸ்நானம் செய்யும் காரியங்களுக்காகவும் வேண்டிய தண்ணீருக்காக குட்டைகள் அல்லது குளங்கள் தோண்டுவதும், அவைகளுக்கு மராமத்து செய்வதும் அவைகளைப் பராமரித்துவருவதும் ஸ்நானம் செய்யும் துறைகளைக் கட்டுவதும் ;

(viii) கால்நடை தொட்டிகள் களத்துமேடுகள், தோப்புகள் முதலிய சமுதாயப் புறம்போக்குகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவது ;

(ix) சாவடிகள் - சத்திரங்கள் தங்கும் இடங்கள் - பொதுவாய் கிராமத்தார்களுக்குச் சொந்தமான இதர சொத்துக்கள் ஆகிய இவைகள் விஷயமாய் மேல் விசாரணை புரிவது ;

(x) கிராம நத்தங்களைப் பெரிதாக்குவதும், கட்டிடவிஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் ;

(xi) அம்மை குத்திக்கொள்ளும்படி நிர்ப்பந்திப்பது ;

(xii) ஜனனமரணங்களை ரெஜிஸ்டர் செய்வது ;

(xiii) கிராம (லைப்ரெரிகளை) புஸ்தகசாலைகளை ஏற்படுத்துவதும் பராமரித்துவருவதும் ;

(xiv) பவுண்டுகள் (கால்நடைகளை அடைத்துவைக்கும் தொட்டிகள்) விஷயமாய் மேல்விசாரணை புரிவது ;

(xv) கிராமப் பாதுகாப்பு ;

(xvi) கிராமத்தார்களின் க்ஷேமத்தையாவது சௌக்கியத்தையாவது சுகத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவ

தற்கு அனுகுணமாயிருக்கும் பொதுஜன உபயோகத்துக்கடுத்த இதர ஏற்பாடுகள்.

இன்ன அலுவல்களைச் செய்யும்படி லோகல் போர்டார் பஞ்சாயத்துக்கு அதிகாரங்கொடுக்கலாமென்பது.

16. யாருடைய அதிகார வரம்புக்குள் பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது தாலூகா போர்டாராவது-பஞ்சாயத்தின் சம்மதத்தைப் பெற்றும், (இருதிறத்தாராலும்) ஒப்புக்கொள்ளப்படக்கூடிய நிட்டங்களுக்குட்பட்டும், 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி அந்த டிஸ்ட்ரிக்ட் போர்டாரே அல்லது தாலூகா போர்டாரே செய்யக்கூடிய அடியிற்கண்ட அலுவல்களில் எதையாயினும் செய்யும்படி அந்த பஞ்சாயத்துக்கு எப்போதாகிலும் அதிகாரம் கொடுக்கலாம்; அதன்மேல் அந்த பஞ்சாயத்தானது அப்படிப்பட்ட அலுவலைச் செய்வது சட்ட சம்மதமாகும்:—

(i) மார்க்கெட்டுகளையும், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும், பாரவண்டிகள் நிற்கும் இடங்களையும் ஏற்படுத்துவதும், அவைகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவதும்;

(ii) பொதுஜனங்கள் கூடும் திருவிழாக்களுக்காக சுகாதார சம்பந்தமான ஏற்பாடுகள் செய்வது;

(iii) சந்தைகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவது;

(iv) மீன்பிடிக்கும் துறைகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவது;

(v) ரஸ்தாக்களில் மரங்கள் வைப்பதும், அவைகளைக் காப்பாற்றிவருவதும்;

(vi) மூலாதார பாடசாலைகள் ஏற்படுத்துவதும் அவைகளைப் பராமரித்துவருவதும், மூலாதாரக்கல்வி சம்பந்தமான இதர விஷயங்களும்;

(vii) வைத்திய சிகிச்சைக்காக ஏற்பாடு செய்வது.

கிராமக்காடுகளை ப்பஞ்சாயத்துக்கு

17. பிரதேச கவர்ன்மெண்டார்-தங்களால் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும், தங்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய சகாயத்தொகை-எதையாகிலும் பஞ்சா

ட்ரான்ஸ்பர் செய்வது.

யத்தார் செலுத்துவதற்குட்பட்டும், விறகுக்காகவும் கால்நடைத் தீனிக்காகவும் விட்டுவைக்கப்பட்டோ இதர காரியங்களுக்காக விட்டுவைக்கப்பட்டோ உள்ள கிராமக்காடுகளை நிர்வாகஞ்செய்யும் விஷயத்தையும் பாதுகாக்கும் விஷயத்தையும் பராமரித்துவரும் விஷயத்தையும் யாதொரு பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர் பண்ணலாம்.

நீர்ப்பாய்ச்சல் கட்டு வேலைகள் சம்பந்தமான அலுவல்களை ட்ரான்ஸ்பர் செய்வது.

18. பிரதேச கவர்ன்மெண்டார்-யாதொரு கிராம நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலையைப் பாதுகாப்பதையும் பராமரித்து வருவதையுமாவது, நீர்ப்பாய்ச்சும் முறைகள் விஷயமாய் மேல்விசாரணைபுரிவதையாவது, குடிமராமத்து ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதையாவது, யாதொரு நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலையிலிருந்து அதை நம்பி பயிரிடப்படும் புலங்களுக்குத் தண்ணீரைப் பகிர்ந்துகொடுக்கும் விஷயத்தை ஒழுங்குபடுத்துவதையாவது தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு யாதொரு பஞ்சாயத்துக்கு ட்ரான்ஸ்பர்செய்யலாம்.

ஸ்தாபனங்கள் அல்லது கட்டுவேலைகள் பஞ்சாயத்துக்குட்ரான்ஸ்பர் செய்யப்படலாமென்பது.

19. பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, யாதொரு டிஸ்ட்ரிக்ட் போர்டாராவது தாலூகா போர்டாராவது கலெக்டராவது ஸர்க்காரைச் சேராத யாதொரு தனி நபராவது யாதொரு கூட்டத்தாராவது-எந்த விஸ்தீர்ணத்தின் விஷயமாய் யாதொரு பஞ்சாயத்துக்கு மேல் விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்துக்குள் யாதொரு ஸ்தாபனத்தை நிர்வாகஞ்செய்யும் விஷயத்தையாகிலும், யாதொரு கட்டுவேலையைச் செய்துமுடிக்கும் விஷயத்தையாகிலும், பராமரித்துவரும் விஷயத்தையாகிலும், யாதொரு வேலையைச் செய்யும் விஷயத்தையாகிலும், பஞ்சாயத்தின் சம்மதத்தைப்பெற்று (இருதிறத்தாராலும்) ஒப்புக்கொள்ளப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்கு மாற்றலாம்.

பஞ்சாயத்தின் அலுவல்களை அதி

20. பிரதேச கவர்ன்மெண்டார் தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு 15, 16, 17, 18, 19-வது பிரிவுகளில் குறிப்பிட்டவைகளல்லாத வேறே எந்த அலுவல்களையாகிலும் செய்யும்படியோ எந்தக் கட

கப்படுத்த கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

மைகளையாகிலும் நிறைவேற்றும்படியோ யாதொரு பஞ்சாயத்துக்குப் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் அதிகாரம் கொடுக்கலாம்.

கம்மிட்டிகளை நியமிப்பது.

21. (1) யாதொரு பஞ்சாயத்தானது-இந்த ஆக்டினுலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளினுலாவது பஞ்சாயத்தின் தீர்மானத்துக்காக விட்டுவைக்கப்பட்டிருக்கிற குறித்த யாதொரு பரிபாலன பிரிவுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பைசல்செய்வதற்காக அதிகாரம் பிரித்துக்கொடுத்து, அதன் மெம்பர்களிலிருந்தே கம்மிட்டிகள் நியமிக்கலாம்; அல்லது, அப்படிப்பட்ட எந்த விஷயங்களைக் குறித்தாகிலும் விசாரித்து ரிபோர்ட் செய்வதற்காக தனித்தனி பஞ்சாயத்துதாரர்களையாவது பஞ்சாயத்துகாரர்கள் சேர்ந்த கம்மிட்டிகளையாவது நியமிக்கலாம்.

(2) பஞ்சாயத்துதாரர்களா யிராவிட்டாலும் யாதொரு கம்மிட்டியில் மெம்பர்களாயிருப்பதற்கு வேண்டிய விசேஷ யோக்கியதாம்சங்கள் பெற்றிருப்பதாக பஞ்சாயத்து அபிப்பிராயப்படக்கூடிய எந்த நபர்களையாகிலும் ஷை பஞ்சாயத்தானது அப்போதைக்கப்போது தீர்மானமூலமாய், பஞ்சாயத்து குறிப்பிடக்கூடிய கால அளவுக்கு அந்தக் கம்மிட்டியின் மெம்பர்களாக நியமிப்பது சட்டசம்மதமாகும்; மேற்படி பஞ்சாயத்தில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அதில் பாதிக்குக் குறையாதவர்களால் அந்தத் தீர்மானம் ஆதரிக்கப்படவேண்டும். பஞ்சாயத்துதாரர்களின் கடமைகள்-அதிகாரங்கள்-பொறுப்புகள் ஆகிய இவைகள் சம்பந்தமாய் இந்த ஆக்டில் கண்டசகல நிபந்தனைகளும்-கூடுமானவரையில் அப்படிப்பட்ட நபர்களுக்குப் பிரயோகப்படத்தக்கவைகளாகும்.

கூட்டுக்கமிட்டிகள்.

22. (1) பஞ்சாயத்துகளாவது, பஞ்சாயத்துகளும் இதர பிரதேச அதிகாரசபைகளுமாவது சேர்ந்து,—

(a) அவர்களுக்குக் கூட்டாய் அக்கறையுள்ள யாதொரு காரியத்துக்காக தங்கள் தங்கள் சபையிலிருந்து ஒரு கூட்டுக் கமிட்டியை நியமிக்கலாம்;

(b) கூட்டாய்ச் செய்யும் யாதொரு கட்டுவேலையை அமைப்பது விஷயமாகவும் பின்னால் அதைப் பராமரித்துவருவது விஷயமாகவும் அப்படிப்பட்ட ஒவ்வொரு அதிகார சபையாரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஷரத்துகளை ஏற்படுத்துவதற்கான அதிகாரத்தையும், ஷெ அதிகாரசபைகளில் யாதொரு சபையாரால் செலுத்தப்படக்கூடிய எவ்வித அதிகாரத்தையும் அப்படிப்பட்ட கம்மிட்டிக்குப் பிரித்துக் கொடுக்கலாம்; மேலும்,

(c) அந்த கமிட்டியின் அமைப்பையும் அதன் மெம்பர்களின் உத்தியோக கால அளவையும் நிர்ணயிப்பதற்காகவும், எதற்காக அந்தக் கம்மிட்டி நியமிக்கப்படுகிறதோ அந்தக் காரியத்தின் விஷயமாய் அந்தக் கம்மிட்டியாரால் நடத்தப்படும் நடவடிக்கைகளைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் விதிகளைத் தயாரித்துத் திருத்தலாம்.

(2) இந்தப் பிரிவின்படி பிரவர்த்திக்கிற பிரதேச அதிகார சபையார்களுக்குள் யாதொரு அபிப்பிராய பேதம் உண்டானால், அதைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும்; அதன்மேல் அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

பஞ்சாயத்தின் அலுவல்களைச் செய்து முடிக்க அதற்குள்ள அதிகாரங்கள்.

23. (1) இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டும், 15, 16, 17, 18, 19, 20-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், யாதொரு பஞ்சாயத்துக்கு அதனிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாயும் அது சம்பந்தமாயும் செய்யவேண்டியிருக்கும் சகல காரியங்களையும் செய்வதற்கு அதிகாரம் உண்டு; மேலும், முக்கியமாய்—

(a) 15-வது பிரிவைச்சேர்ந்த (i) முதல் (iv) வரையிலுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாய், (ப்ரைவேட்) சொந்த சொத்தாயிராமலும் பிரதேச கவர்ன்மெண்டாராலாவது டிஸ்ட்ரிக்ட் போர்டாராலாவது தாலூகா போர்டாராலாவது செய்யப்பட்ட யாதொரு உத்தரவு மூலமாய்ப் பிரத்தியேகமாக விலக்கப்

பட்டிராமமேனும் யாதொரு பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குள் இருக்கும் சகல ரஸ்தாக்கள், கல்வெர்ட்டுகள், வாராவதிகள், ஜலதாரைகள், ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகள், கால்வாய்கள் அல்லது தண்ணீர் பாய்ச்சிக்கொள்வதற்கான வாய்க்கால்களல்லாத வேறே தண்ணீர்க்கால்கள் ஆகிய இவைகள் விஷயமாய்ப் பஞ்சாயத்துக்கு மேல் விசாரணை அதிகாரம் உண்டு; மேலும், பஞ்சாயத்தானது-அவைகளைப் பராமரித்துவருவதற்காகவும் அவைகளுக்கு மராமத்து செய்வதற்காகவும் அவசியமான சகல காரியங்களையும் செய்வதல்லாமல்,—

(i) புதிய ரஸ்தாக்களை ஒழுங்காய் அமைத்து ஏற்படுத்தலாம்;

(ii) புதிய வாராவதிகளையாவது கல்வெர்ட்டுகளையாவது கட்டலாம்;

(iii) யாதொரு ரஸ்தாவையாகிலும் வாராவதியையாகிலும் விசாலப்படுத்தலாம், திறக்கலாம், பெரிதாக்கலாம் அல்லது வேறே விதமாய் சீர்ப்படுத்தலாம்;

(iv) ஜலதாரைகளையும் ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகளையும் கட்டலாம்;

(v) தண்ணீர்க்கால்களை ஆழமாக்கலாம் அல்லது மற்றப்படி சீர்படுத்தலாம்;

(vi) அதன் விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் யாதொரு ரஸ்தாவுக்காவது பொதுவான இடத்துக்காவது விளக்கு போடுவதற்காக ஏற்பாடு செய்யலாம்.

(b) கிராமத்தின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் சுகாதார நிலைமையைச் சீர்படுத்தும் பொருட்டு—

(i) யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது நோடிஸ் கொடுத்து, அதன் மூலமாய் நியாயமான ஒரு கால அளவுக்குள் அந்தக் கட்டிடத்துக்காக சொந்தத்தில் ஜலதாரைகள் கட்டும்படியாகிலும், அதற்காகச் சொந்தத்தில் கட்டப்பட்டிருக்கும் ஜலதாரைகளை மாற்றும்படியாகிலும் எடுத்துவிடும்படியாகிலும் உத்தரவு பண்ணவும்,

(ii) தேக ஆரோக்கியத்துக்குக் கெடுதி உண்டாக்கத்தக்கதாகவோ அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுக்கு அருவருப்பு உண்டாக்கக் கூடியதாகவோ மற்றப்படி அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாவதற்குக் காரணமாகவோ இருக்கும் யாதொரு கிணறு, சிறுகுட்டை, வடிகால் குழி, குட்டை அல்லது குளம் அடங்கியிருக்கிற அல்லது அதைச் சேர்ந்தாற்போலிருக்கிற யாதொரு நிலத்தின் அல்லது கட்டிடத்தின், அல்லது மேலேகண்டபடி கெடுதி உண்டாக்கத்தக்கதாகவோ அருவருப்பு உண்டாக்கக்கூடியதாகவோ அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாவதற்குக் காரணமாகவோ இருக்கும் யாதொரு சாக்கடைத்தண்ணீராகிலும், அசுத்தங்களாகிலும், தேங்கிக்கொண்டிருக்கும் தண்ணீராகிலும் இருக்கிற அல்லது அப்படிப்பட்ட தண்ணீர் முதலியவைகளைச் சேர்த்து வைப்பதற்காக உபயோகிக்கப்படுகிற யாதொரு இடத்தின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நோடிஸ் கொடுத்து அந்த நோடிஸில் நியாயமான கால அளவு ஏற்படுத்தி, அந்தக் கிணறு முதலியவைகளைத் தூர்த்துவிடும்படியோ சுத்தப்படுத்தும்படியோ ஆழமாக்கும்படியோ செய்யவேண்டுமென்றாவது, அவைகளிலுள்ள தண்ணீரை அவைகளிலிருந்து அப்புறப்படுத்தும்படியோ வடித்துவிடும்படியோ செய்யவேண்டுமென்றாவது, மேற்படி அசங்கியம் அல்லது சங்கடத்தை நீக்குவதற்கு அவைகள் விஷயமாய் வேறே என்ன நடவடிக்கை நடத்துவது அவசியமென்று பஞ்சாயத்தால் எண்ணப்படக்கூடுமோ அப்படிப்பட்ட நடவடிக்கை நடத்தவேண்டுமென்றாவது உத்தரவு பண்ணவும்,

(iii) எவ்விதமாகவேனும் தேக ஆரோக்கியத்துக்குக் கெடுதியுண்டாக்கத்தக்கதாகவாகிலும், பொது ஜனங்களுக்கு அபாயகரமாகவாகிலும், அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுக்கு அருவருப்பு உண்டாக்கக்கூடியதாகவாகிலும் இருக்கிற செடிவகைகளாவது, களைப்பூண்டு முதலியவைகளாவது, சப்பாத்துக்கள்ளியாவது, குறுந்தூறாவது அதிகமாய் முளைத்திருக்கிற யாதொரு நிலத்தின் சொந்தக்காரருக்காயினும் அனுபோகதாரருக்காயினும் நோடிஸ்கொடுத்து, அதில் நியாயமான கால அளவு ஏற்படுத்தி, மேற்படி நிலத்தில் முளைத்திருக்கும் செடிவகைகளையோ களைப்பூண்டு முதலியவைகளையோ சப்பாத்துக் கள்ளியையோ குறுந்தூற்றையோ எடுத்துவிடச்செய்யும்படி உத்தரவு பண்ணவும்,

(iv) சுத்தஞ் செய்யவேண்டியதாயிருக்கும் யாதொரு நிலத்தின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரருக்காகிலும் அநுபோகதாரருக்காகிலும் நோடிஸ் கொடுத்து, அதை நியாயமான ஒரு கால அளவுக்குள் சுத்தம்செய்விக்கவேண்டுமென்றுவது அதற்கு மேற்படி கால அளவுக்குள், சுண்ணாம்பு அடிக்கும்படிச் செய்யவேண்டுமென்றுவது உத்தரவு பண்ணவும்,

(v) பஞ்சாயத்தால் கொடுக்கப்படும் லைலென்ஸின்படிக்கல்லாமல் மற்றப்படி, பருக்கைக்கல்-மண் அல்லது மணலுக்காக (பூமியைத்) தோண்டக்கூடாதென்றோ அல்லது கல் வெட்டி எடுக்கக்கூடாதென்றோ தடுக்கவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

(c) 15-வது பிரிவைச்சேர்ந்த (vii) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாய், யாதொரு பஞ்சாயத்தானது-பொதுக்காரியங்களுக்காகவும் (ஜனங்களின்) சொந்தக் காரியங்களுக்காகவும் கிராமத்தில் போதுமானமட்டில் சரியாய்த் தண்ணீர் கிடைப்பதற்காக ஏற்பாடுசெய்யலாம்; மேலும், அந்தக் காரியங்களுக்காக—

(i) குளங்கள் அல்லது கிணறுகள் ஏற்படுத்தி அவைகளுக்கு மராமத்துசெய்து அவைகளைப் பராமரித்துவருவதற்கும், நீரோட்டங்கள் அல்லது தண்ணீர்க்கால்களைப் பரிஷ்கரித்துவைப்பதற்கும்,

(ii) யாதொரு குளத்தையாவது கிணற்றையாவது நீரோட்டத்தையாவது தண்ணீர்க்காலையாவது கிரயத்துக்கு வாங்குவதற்கும் அல்லது குத்தகை மூலமாகவாகிலும் தான மூலமாகவாகிலும் அடைவதற்கும், சொந்தக்காரரின் சம்மதத்தைப்பெற்று அதை சுத்திபண்ணுவதற்கும் அல்லது அதற்கு மராமத்துசெய்வதற்கும், அல்லது அதிலிருந்து தண்ணீர் கிடைக்கும்படிச் செய்வதற்காக சௌகரியங்கள் ஏற்படுத்துவதற்கும்,

(iii) பெருவாரி வியாதிகள் கண்டிருக்கும்போது யாதொரு ஜலாதாரத்தைக் குடிக்கும் அல்லது சமையல்செய்யும் காரியங்களுக்காவது துணி தோய்ப்பதற்காவது உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பதற்கும்,

(iv) குடிக்கும் அல்லது சமையல்செய்யும் காரியங்களுக்காக யாதொரு பொதுவான ஜலாதாரத்தைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்ட ஜலாதாரத்தில் எவரும் ஸ்நானம் செய்யாதபடியும் துணி தோய்க்காதபடியும் பிராணிகளைக்கழுவாதபடியும் அதை வெகுசாய்க் கெடுக்கக்கூடிய இதர காரியங்களைச் செய்யாதபடியும் அம்மாதிரியே தடுப்பதற்கும்,

பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு:

ஆனால், தண்ணீர் பாய்ச்சுவதற்காக உபயோகிக்கப்படும் யாதொரு கால்வாய் அல்லது வாய்க்காலின் மேல்விசாரணை வகிக்கும் அதிகாரியின் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், அந்தக் கால்வாய் அல்லது வாய்க்காலை பாதிக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் இந்தப் பகுதியின்படி செய்யக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (c) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட (iii) அல்லது (iv) குறிப்பிட்ட உட்பகுதியின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவின் பிரகாரம் எவராகிலும் நடக்காவிட்டால், அவர் மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அவருக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (b) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட (i) முதல் (iv) வரையிலுள்ள உட்பகுதிகளின்படி கொடுக்கப்பட்ட நோடிஸின் பிரகாரம் செய்யவேண்டியதாயிருக்கும் எந்த வேலையாவது அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள்செய்து முடிக்கப்படாவிட்டால், பஞ்சாயத்தானது-தானே அந்த வேலையைச் செய்துமுடிக்கும்படிச் செய்யலாம்; மேலும், அந்த வேலைக்காகப் பிடிக்கும் செலவையாவது அதன் ஒரு பாகத்தையாவது அது நிலத்தீர்வை பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே மேற்படி உட்பகுதிகளில் குறிப்பிடப்பட்ட சொந்தக்காரரிடத்திலிருந்தாகிலும் அனுபோகதாரரிடத்திலிருந்தாகிலும் வசூல்செய்யலாம்.

பிரவேசிப்பதற்கான அதிகாரம்.

24. 23-வது பிரிவிற்கண்ட காரியங்களுக்காகவாவது அந்தப் பிரிவை அனுசரித்தாவது ஏதையாகிலும் பார்வையிடும்பொருட்டோ எந்தக் காரியத்தையாகிலும் செய்து முடிக்கும்பொருட்டோ யாதொரு பஞ்சாயத்தைச் சேர்ந்த எந்த மெம்பராவது உத்தியோக

ஸ்தராவது ஊழியக்காரராவது துணைவர்கள் அல்லது வேலையாள்களுடன் கூடவாகிலும் அவர்கள் இல்லாமலாகிலும் யாதொரு கட்டிடத்துக்குள் அல்லது நிலத்தில் பிரவேசிக்கலாம் :

ஆனால்—

(a) சூரியாஸ்தமனத்துக்கும் சூரியோதயத்துக்கும் இடையில் அந்தப்படி எவரும் பிரவேசிக்கக்கூடாது :

(b) யாதொரு குடியிருப்பு வீட்டில் அதில் குடியிருப்பவருடைய சம்மதியுடன் பிரவேசித்தாலொழிய, அந்தப்படி பிரவேசிக்க உத்தேசித்திருப்பதாய் ப்ரெஸிடென்டாலாவது இது விஷயமாய் அவரால் கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராலாவது கையெழுத்து செய்யப்பட்டு நியாயமானபடியிருக்கும் நோடிஸ் ஒன்றை முன்னதாய்க் கொடுக்காமல் அந்த வீட்டில் மேலேகண்டபடி பிரவேசிக்கக்கூடாது ; மேலும்,

(c) அந்தப்படி பிரவேசிக்கும்போது, பிரவேசிக்கும் வளவில் குடியிருப்பவர்களின் சமூக சம்பந்தமாகவும் மத சம்பந்தமாகவுமுள்ள ஆசாரங்களைத் தக்கபடி கவனித்துப் பிரவேசிக்கவேண்டும்.

பஞ்சாயத்து அதன் சகாயச் சட்டங்கள் செய்துகொள்வதும், அதன் சிப்பந்தியை நியமித்துக்கொள்வதும்.

25. இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, யாதொரு பஞ்சாயத்தானது—

(a) அதன் வேலை நடந்தேறுவதற்காகவும், இந்த ஆக்டிற்கண்ட காரியங்களைப் பொதுவாய் நிறைவேற்றுவதற்காகவும் சகாயச்சட்டங்கள் செய்துகொள்ளலாம் ; மேலும்,

(b) அதற்கு அவசியமாகத்தோற்றும் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அடங்கிய சிப்பந்தியை ஏற்படுத்தி, அந்த சிப்பந்திக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம் அல்லது வேறே பிரதிபலனை நிஷ்கரிஷை செய்யலாம்.

4-ம் அத்தியாயம்.

பஞ்சாயத்து நிதி.

பஞ்சாயத்து விதிக்கக்கூடிய வரிகளும் கட்டணங்களும்.

26. (1) பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்துக்குட்பட்டு, யாதொரு பஞ்சாயத்தானது அடியிற்கண்ட சகல வரிகளையும் கட்டணங்களையுமாவது அவைகளில் எதையாவது விதிக்கலாம் :—

(a) கிராமத்திலிருக்கும் கட்டிடங்களின் மூலதன மதிப்பின் மேல் வருஷவாரியில் வாங்கப்படும் ஒரு வரி ;

(b) A-ஷெட்யூலில் குறிப்பிட்டவைகளைப் போன்றதாய், கிராமத்தில் நடத்தப்படும் வேலைகளின்மேலும் வர்த்தகங்களின் மேலும் தொழில்களின் மேலும் வருஷவாரியில் வாங்கப்படும் ஒரு வரி ;

(c) கால்நடை தொட்டிகளையும், களத்துமேடுகளையும், கிராம நத்தங்களையும், இவைபோன்ற இதர சமுதாய புறம்போக்குகள் அல்லது பொதுவான இடங்களையும் அல்லது அவைகளின் பாகங்களையும் அனுபோகத்தில் வைத்திருப்பதற்காகக் கட்டணங்கள் ;

(d) பஞ்சாயத்தின் மேல்விசாரணையில் இருக்கும் பாரவண்டி நிற்கும் இடங்களையும், மார்க்கெட்டுகளையும், மார்க்கெட் கூடும் இடங்களையும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும் உபயோகிப்பதற்காகக் கட்டணங்கள் ;

(e) பஞ்சாயத்தின் மேல்விசாரணையில் இருக்கும் சாவடிகளையும், சத்திரங்களையும், பிரயாணிகள் தங்கும் இடங்களையும், இவைபோன்ற இதர பொதுக்கட்டிடங்களையும் அனுபோகத்தில் வைத்திருப்பதற்காகவும், வீடுகளைச்சேர்ந்த மலஜல பாதை மறைவிடங்களை சுத்தம் செய்வதற்காகவும், 23-வது பிரிவின்படி கல்வெட்டி எடுப்பதற்காகவோ (பூமியைத்) தோண்டுவதற்காகவோ கொடுக்கப்படும் லைசென்ஸுகளுக்காகவும் கட்டணங்கள் ;

(f) (கால் நடைகளை) மேய்ப்பதற்காகவாவது, விறகையாகிலும் இதர நாட்டு உற்பத்தியையாகிலும் எடுத்துக்கொண்டு போவதற்காகவாவது பெர்மிட்டுகள் (அனுமதிச் சீட்டுகள்) கொடுப்பதற்காகக் கட்டணங்கள்.

(2) மேலேகண்ட வரிகள் கட்டணங்கள் ஆகிய இவைகளில் எதனுடன் கூடவாவது எதற்கு பர்த்தியாகவாவது, யாதொரு பஞ்சாயத்தானது-கிராம சமூகத்தாருக்கு சௌகரியமாயிருப்பதாகவும் தகுதியாயிருப்பதாகவும் அதற்குத் தோற்றக்கூடிய வேறே யாதொரு வரி அல்லது கட்டணம் விதிப்பதற்காக பிரேரேபணைகள் தயார்செய்து பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கிகாரத்துக்கு அனுப்பலாம்; அவர்கள் அந்த பிரேரேபணைகளை ஒப்புக்கொண்டு, அந்தக் கிராமத்தில் மேற்படி வரி அல்லது கட்டணம் விதிப்பதற்கு அனுமதி கொடுக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி விதிக்கப்படத்தக்க சகல வரிகளும் கட்டணங்களும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளை அனுசரித்து விதிக்கப்படும்.

பஞ்சாயத்தின் தீர்மானமில்லாமல் வரி அல்லது கட்டணம் விதிக்கக்கூடாதென்பது.

27. யாதொரு வரி அல்லது கட்டணம் விதிப்பதற்கு பஞ்சாயத்தின் தீர்மான மூலமாய் அனுமதிகொடுக்கப்பட்டு, இந்தக் காரியத்துக்காகவென்றே பிரத்தியேகமாய் கூட்டப்பட்ட ஒரு சபையில் அந்த பஞ்சாயத்தில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறதோ அதில் பாதிக்குக் குறையாதவர்களால் அந்தத்தீர்மானம் ஆதரிக்கப்பட்டாலொழிய, 26-வது பிரிவின்படி மேற்படி வரி அல்லது கட்டணம் எதுவும் விதிக்கப்படக்கூடாது.

வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பதைக் குறித்து ப்பிரசித்தம் பண்ணுவது.

28 யாதொரு வரி அல்லது கட்டணம் விதிக்க பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கிகாரத்தின்பேரில் பஞ்சாயத்து அனுமதி கொடுத்துவிட்டால், அந்தப் பஞ்சாயத்தானது-இன்ன வீதப்படியும் இன்னதேதி முதற்கொண்டும் அப்படிப்பட்ட வரி அல்லது கட்டணம் விதிக்கப்படுமென்று, அந்த வரி அல்லது கட்டணம் விதிக்கப்படப்போகிற கிராமங்களில் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் உடனே பிரசித்தஞ்செய்யவேண்டும்.

வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பது.

29. 26-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட வரிகள் அல்லது கட்டணங்களில் எதையாகிலும் விதிக்கும்பொழுது, பஞ்சாயத்தானது 28-வது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விதங்களின்படி அல்லது தொகைகளின்படியும் அந்தப்படி குறிப்பிடப்பட்ட தேதிகளிலிருந்தும் அவைகளை விதிக்கவேண்டும்.

வரி விதித்திருப்பதைத் திருத்தும்படி விண்ணப்பம் செய்துகொள்வது.

30. 29-வது பிரிவின்படி யாதொரு வரி விதிக்கப்பட்டதைக் குறித்து எவராகிலும் அதிருப்தியடைந்தால், அவர்-அந்தப்படி வரி விதித்திருப்பதைத் திருத்தவேண்டுமென்று, நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள், வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது பஞ்சாயத்தைக் கேட்டுக்கொள்ளலாம்; அதன்மேல், பஞ்சாயத்து அந்த வரியைத் திருத்தலாம் அல்லது ஊர்ஜிதப்படுத்தலாம்.

வரிகளையும் கட்டணங்களையும் வசூல்செய்வது.

31. (1) வரித்தொகைகளும் கட்டணத்தொகைகளும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாய்ச் செலுத்தப்படவேண்டும்; அந்தப்படி செலுத்தப்படாத பட்சத்தில், அவை-பாக்கிதாரருடைய அசையும்பொருளை நிர்ணயிக்கப்பட்ட விதமாக ஜப்திசெய்து விற்பது மூலமாய் கிராமப் பெரியதனக்காரரால் வசூல் செய்யப்படும்; மேலும், அப்படிப்பட்ட பாக்கித் தொகையில் ஐந்தில் ஒரு பாகத்துக்குச்சரியான ஒருதொகையை அபராதமாக விதித்து அதுவும் ஷை பாக்கித்தொகையுடன் கூட வசூல்செய்யப்படும்.

(2) பஞ்சாயத்தானது 26-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (c), (d), (f) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களின் வசூலை, அதற்குத் தகுதியாகத் தோற்றுகிற திட்டங்களின்பேரில் ஏககாலத்தில் மூன்று வருஷத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்கு குத்தகைக்கு விடலாம்

பஞ்சாயத்து நிதியும் அதை உபயோகிப்பதும்.

32. (1) 31-வது பிரிவின்படி கிடைக்கும் சகலதொகைகளும், இந்த ஆக்டின்படி தண்டத்தொகைகளாகவாவது, அபராதங்களாகவாவது, கட்டணங்களாகவாவது, செலவுத்தொகைகளாகவாவது கிடைக்கும் சகல தொகைகளும்-ஸர்க்காரைச் சேராத யாதொரு

தனி நபரிடத்திலிருந்தாகிலும் சங்கத்தாரிடத்திலிருந்தாகிலும் கிடைக்கும் யாதொரு டொனேஷன் என்னும் நன்கொடைத் தொகையும், தாலூகா போர்டார் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டார் அல்லது கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து கிடைக்கும் யாதொரு சகாயத்தொகையும் உள்பட பஞ்சாயத்தின் சகலமான இராவரவுத்தொகைகளும்-'பஞ்சாயத்து நிதி' என்று சொல்லப்படும் ஒரு நிதியில் செலுத்தப்பட வேண்டும்; அந்த நிதியின் கணக்குகள் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் வைத்துவரப்படும்.

(2) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுகையில் பஞ்சாயத்துக்குப் பிடிக்கும் செலவுகள் பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படும்;

ஆனால், குறித்த எந்த காரியத்துக்காகவாவது யாதொரு பஞ்சாயத்தினிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள அல்லது யாதொரு பஞ்சாயத்துக்கு கிடைத்துள்ள சகல தொகைகளையும், அந்தக்காரியத்துக்காகவே முழுவதும் உபயோகிக்கவேண்டும்.

5-ம் அத்தியாயம்.

மேல்விசாரணை.

பஞ்சாயத்தின் நடவடிக்கைகளைச் சிறுகாலத்துக்கு நிறுத்திவைப்பது அல்லது ரத்துசெய்வது.

33. பஞ்சாயத்தின் யாதொரு தீர்மானமாகிலும், பஞ்சாயத்தாராலாவது அதன் ப்ரெஸிடென்டாலாவது பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவாகிலும் நோடிஸாகிலும், இந்த ஆக்டை அனுசரித்தாயினும் அதைச் சாக்கிட்டுக்கொண்டாயினும் செய்யப்படப்போகிற அல்லது செய்யப்பட்டுவருகிற யாதொரு காரியமாகிலும் ஸ்பஷ்டமாய் விபரீதமாயிருக்கிறதென்றாவது பஞ்சாயத்தின் அதிகாரங்களை மீறியிருக்கிறதென்றாவது, அப்படிப்பட்ட தீர்மானம், உத்தரவு, நோடிஸ் அல்லது காரியத்தை நிறைவேற்றுவதனால் சட்டப்படி வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு நபருக்குத் தடங்கல், தீங்கு அல்லது தொந்தரை வெகுசாய் ஏற்படக்கூடுமென்றாவது, மனிதர்களுடைய பிராணனுக்காகிலும் சௌக்கியத்துக்காகிலும் க்ஷேமத்துக்காகிலும் வெகுசாய் அபாயம் உண்டாகக்கூடுமென்றாவது, கலகம் அல்லது சண்டை வெகுசாய் உண்டாகக்கூடுமென்றாவது, பிரதேச கவர்ன்

மெண்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்-எழுந்து மூலமான உத்தரவைக்கொண்டு, ஷை தீர்மானம் உத்தரவு அல்லது நோட்டிஸை நிறைவேற்றவொட்டாதபடி சிறிதுகாலத்துக்கு நிறுத்திவைப்பதும் அல்லது ரத்துசெய்வதுமல்லாமல், மேற்படி காரியத்தைச் செய்யக்கூடாதென்றும் தடுக்கலாம்.

பஞ்சாயத்தின் ரெகார்டுகள் - வேலைகள் அல்லது சொத்தைப் பார்வையிடுவது.

34. இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கக்கூடிய யாதொரு உத்தியோகஸ்தராவது வேறே நபராவது பஞ்சாயத்தின் சகல புஸ்தகங்களையும் நடவடிக்கைக் குறிப்புகளையும் ரெகார்டுகளையும் (தஸ்தவேஜுகளையும்) பார்ப்பதற்கும், பஞ்சாயத்தின் அனுபோகத்திலிருக்கும் யாதொரு அசையாப்பொருளிலாகிலும் பஞ்சாயத்தின் உத்தரவுப்படி செய்யப்பட்டுவரும் யாதொரு வேலையிலாகிலும் அதன் மேல்விசாரணையிலிருக்கும் யாதொரு ஸ்தாபனத்திலாகிலும் பிரவேசித்து அதைப் பார்வையிடுவதற்கும் எல்லா வேளைகளிலும் அவருக்குப் பஞ்சாயத்து அனுமதி கொடுக்கவேண்டும்.

பஞ்சாயத்தைக் கலைத்துவிட கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

35. யாதொரு பஞ்சாயத்தானது இந்த ஆக்டினாலாவது இந்த ஆக்டின்படியாவது வேறே யாதொரு ஆக்டினாலாவது அதன்படியாவது அதற்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதில் பிடிவாதமாய்த் தவறிக்கொண்டேயிருக்கிறதென்றாகிலும் அதன் அதிகாரங்களைக் கெட்டவழிகளில் உபயோகித்துக்கொண்டேயிருக்கிறதென்றாகிலும் பிரதேசகவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்-பஞ்சாயத்தை ஏன் கலைத்துவிடக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்குப் போதுமான அவகாசம் பஞ்சாயத்துக்குக் கொடுத்தபிறகு, எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு பஞ்சாயத்தைக் கலைத்துவிடலாம்; அவர்கள் அந்தப்படி செய்வதற்குள்ள காரணங்களை மேற்படி உத்தரவில் குறிப்பிடவேண்டும்.

கலைத்து விடுவதனால் இன்னது உண்டாகுமென்பது.

36. 35-வது பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்து கலைத்துவிடப்படுவதன்மேல், பஞ்சாயத்தின் மெம்பர்கள் எல்லோரும்-உத்தரவு பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து அப்படிப்பட்ட மெம்பர்களாகத் தங்களுடைய உத்தியோகங்களை காலிசெய்யவேண்டும்; மேலும்,

பிரதேச கவர்ன்மெண்டார்-பஞ்சாயத்தின் பணத்தின் விஷயமாகவும் இதர சொத்தின் விஷயமாகவும் தங்களுக்கு தருமமென்றும் நியாயமென்றும் தோற்றுகிற உத்தரவுகளை ஜாரி செய்யவேண்டும்; அந்த உத்தரவுகள் முடிவானவைகளாகும்.

ரெஜிஸ்ட்ராரை நியமிப்பதும், அவருடைய கடமைகளும், கவர்ன்மெண்டாருடைய அதிகாரங்களை அவருக்குப் பிரித்துக் கொடுப்பதும்.

37. (1) பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த ஆக்ட் வியாபிக்கும் விஸ்தீர்ணத்துக்காவது அதன் யாதொரு பாகத்துக்காவது யாதொரு நபரைப் பஞ்சாயத்துகளின் ரெஜிஸ்ட்ராராயிருக்கும்படி நியமித்து, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற சம்பளத்தையும் சிப்பந்தியையும் அவருக்கு அப்போதைக்கப்போது ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

(2) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருக்காகவும் அவருடைய சிப்பந்திக்காகவும் பிடிக்கும் செலவானது பிரதேச கவர்ன்மெண்டாரின் வருமானங்களிலிருந்து கொடுக்கப்படும்.

(3) அந்தப்படி நியமிக்கப்பட்ட ரெஜிஸ்ட்ராரானவர்-அவருடைய அதிகாரவரம்புக்குள் இருக்கும் பஞ்சாயத்துகளின் அமைப்பைப்பற்றி கவனிப்பதுமல்லாமல், அவைகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடவும் வேண்டும்; மேலும், விளம்பரமூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும்போது, 44-வது பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரத்தைத் தவிர இந்த ஆக்டின்படி அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் சகல அதிகாரங்களையுமாவது அவைகளில் எதையாவது செலுத்தவேண்டும்.

கவர்ன்மெண்டாரின் அதிகாரங்களை இதர நபர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது.

38. யாதொரு கலெக்டராவது, டிஸ்ட்ரிக்ட் பாரெஸ்ட் ஆபிஸராவது, டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடெண்டாவது தாலூகா போர்ட் ப்ரெஸிடெண்டாவது, வேறே யாதொரு நபராவது கவர்ன்மெண்டாரின் கீழ் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தராயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அவர் யாதொரு பிரதேச விஸ்தீரணத்திலுள்ள யாதொரு பஞ்சாயத்தின் அல்லது யாதொரு வகுப்பைச்சேர்ந்த பஞ்சாயத்துகளின் விஷயமாகவாவது சகல பஞ்சாயத்துகளின் விஷயமாகவாவது, 37-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ரெஜிஸ்ட்ரார் செலுத்த அனுமதி பெறக்கூடிய பிரதேச கவர்ன்மெண்டாரின் சகல அதிகாரங்

களையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் மேற்படி விஸ்தீரணத்தில் செலுத்த அவருக்குப் பிரதேச கவர்ன்மெண்டார் பெயரைக்கொண்டோ உத்தியோகமுறைமையிலோ விளம்பர மூலமாய் அதிகாரம் கொடுக்கலாம்.

ஒருமுறை பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை ரத்துசெய்வது அல்லது மாற்றுவது.

39. பிரதேச கவர்ன்மெண்டார் - 37-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாவது 33-வது பிரிவின்படியாவது யாதொரு நபருக்குக்கொடுத்திருக்கக்கூடிய எந்த அதிகாரத்தை யாகிலும் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் ரத்துசெய்யலாம் அல்லது மாற்றலாம்.

---

6 - ம் அத்தியாயம்.

வியாஜ்ஜியங்கள், பிராதுகள், விதிகள் முதலியவை.

சொத்துநஷ்டம், சேதம்அல்லது துர்வினியோகம் நேரிட்டால் மெம்பர்கள் உத்தரவாதிகளாவது.

40. (1) அடியிற்கண்டபடி இல்லையென்று காரணங்காட்ட சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துதாரருக்குப் போதுமான அவகாசம் ஏற்படுத்திக்கொடுத்தபிறகு, யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமாயிருக்கும் அல்லது அதனிடத்தில் சங்கிரமித்திருக்கும் ஏதாவதுபணம் அல்லது இதர சொத்துக்கு அந்த பஞ்சாயத்துதாரர் தகாதபடி நடந்துகொண்டது காரணமாகவோ அல்லது முற்றிலும் அஜாக்கிரதையாயிருந்தது காரணமாகவோ நேரில் நஷ்டம் அல்லது சேதம் உண்டாயிற்றென்றுவது அது துர்வினியோகஞ் செய்யப்பட்டதென்றுவது பிரதேச கவர்ன்மெண்டார் தெரிந்து திருப்தியடைந்தால், அவர்கள் எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு, நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஒரு தேதிக்கு முன் மேற்படி நஷ்டம்-சேதம் அல்லது துர்வினியோகத்துக்காக ஈடு செய்வதற்குவேண்டிய தொகையைப் பஞ்சாயத்துக்குச் செலுத்தும்படி அந்த பஞ்சாயத்துதாரருக்குக் கட்டளையிடலாம்.

(2) மேற்படி தொகை அந்தப்படி செலுத்தப்படாவிட்டால், கலெக்டரானவர்-அதை நிலத்தீர்வை பாக்கியைப்போல் வசூல்செய்து பஞ்சாயத்து நிதிக்கு வரவுவைக்கவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்தாரின் உத்தரவாதத்தைக் குறித்தும் அவரிடத்திலிருந்து வசூலிக்கப்படவேண்டிய தொகையைக் குறித்தும் பிரதேச கவர்ன்மெண்டார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

பஞ்சாயத்தின்மேலாவது அதன்மெம்பர், உத்தியோகஸ்தர், ஊழியக்காரர் அல்லது ஏஜென்டின்மேலாவது வியாஜ்ஜியங்கள் தொடருவது.

41. (a) இந்த ஆக்டின்படியாகிலும் இதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாகிலும் நல்ல எண்ணத்துடன் செய்யப்படும் யாதொரு காரியத்தின் விஷயமாக பஞ்சாயத்தின் உத்தரவின்படி பிரவர்த்திக்கிற அதன் யாதொரு மெம்பர் அல்லது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் அல்லது ஏஜென்டின்மேல் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியம் அல்லது சட்டசம்பந்தமான வேறே நடவடிக்கை எதுவும் நிற்காது.

(b) இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு காரியத்துக்காக, யாதொரு பஞ்சாயத்தின்மேலாவது அதன் உத்தரவின்படி பிரவர்த்திக்கிற அதன் யாதொரு மெம்பர் அல்லது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் அல்லது ஏஜென்டின்மேலாவது, பஞ்சாயத்தின் ஆபீஸிலும், எவர்மேல் வியாஜ்ஜியம் கொண்டுவர உத்தேசிக்கப்படுகிறதோ அவர் பஞ்சாயத்தின் உத்தரவின்படி பிரவர்த்திக்கும் மெம்பராகவாவது உத்தியோகஸ்தராகவாவது ஊழியக்காரராகவாவது ஏஜென்டாகவாவது இருந்தால், அந்த நபருடைய வாசஸ்தலத்திலுங்கூட எழுத்து மூலமான நோடிஸ் கொடுக்கப்பட்ட பிறகாகிலும் சேர்ப்பிக்கப்பட்ட பிறகாகிலும் அடுத்தாற்போல் மூன்று மாதம் கழிகிற வரையில், வியாஜ்ஜியம் அல்லது சட்ட சம்பந்தமான வேறே நடவடிக்கை எதுவும் கொண்டுவரக்கூடாது. மேற்படி நோடிஸில் வியாஜ்ஜியமூலம், கோரப்படுகிற பரிகாரத்தின் தன்மை, ஈதந்தரித்துக் கேட்கப்படுகிற பிரதிபலன் தொகை, வியாஜ்ஜியம்கொண்டுவர உத்தேசிக்கும் நபரின்பெயர் வாசஸ்தலம் ஆகிய இவை கண்டிருக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட நோடிஸ் ருஜூ செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, கோர்ட்டார் பிரதிவாதி பட்சமாய்த் தீர்ப்புசொல்லவேண்டும்.

(c) அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்தையும், வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட பிறகு ஆறுமாத காலத்துக்குள் தொடங்கவேண்டுமே யொழிய அதற்குப் பிறகு தொடங்கக் கூடாது.

(d) (b) குறிப்பிட்ட பகுதியின்படி எந்த பஞ்சாயத்துக்கு அல்லது நபருக்கு நோடிஸ் கொடுக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு பஞ்சாயத்தாவது நபராவது வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுவதற்குமுன், வாதிக்கு போதுமான வரையில் பரிகாரம் செய்துகொடுப்பதாகச்சொல்லி அப்படி கொடுப்பதாகச் சொல்லப்பட்ட தொகையைக் கோர்ட்டில் செலுத்தினால், மேற்படி வாதியானவர்-அந்தப்படி கொடுப்பதாகச் சொல்லப்பட்ட தொகையைக்காட்டிலும் அதிகமாய் வசூலிக்கக்கூடாது. மேலும், வாதிகள்-மேலேகண்டபடி தொகை கொடுப்பதாகச் சொன்ன பிறகு பிரதிவாதிக்குப் பிடித்திருக்கும் சகல செலவுகளையும் கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்காவது அதன் ஏஜெண்டுகளுக்காவது தடங்கல் உண்டுபண்ணினால் தண்டனை.

42. எவராகிலும் பஞ்சாயத்தையாவது, அதன் யாதொரு மெம்பரையாவது, அதனுலாகிலும் அவராலாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு நபரையாவது, பஞ்சாயத்தாகிலும் மேற்படி மெம்பராகிலும் யாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறதோ அல்லது செய்துகொண்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு நபரையாவது, இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அதன் அல்லது அவருடைய கடமைகளைச்செய்யும்போது தடுத்தாலும் தொந்தரைசெய்தாலும், இந்த ஆக்டை அனுசரித்து யாதொரு நபர் செய்ய அதிகாரம் கொடுக்கப் பெற்றுள்ள அல்லது செய்யவேண்டியதாயிருக்கிற எதையாயினும் செய்யவொட்டாமல் அவரைத் தடுத்தாலும் தடுக்க முயன்றாலும், இந்த ஆக்டின்படி அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு வேலையைச் செய்துமுடிப்பதற்குச் சம்பந்தமான யாதொரு மட்டம் அல்லது திசையைக் காட்டும் பொருட்டு வைக்கப்பட்டுள்ள எந்த அடையாளத்தையாயினும் எடுத்து விட்டாலும், பஞ்சாயத்தாலாவது அதனல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படியாவது ஒட்டிவைக்கப்படும் அல்

லைது காட்டி வைக்கப்படும் யாதொரு நோட்டீசை எடுத்துவிட்டாலும், அழித்துவிட்டாலும், கெடுத்துவிட்டாலும், மற்றப்படி கலைத்துவிட்டாலும், அவர்-மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப் படுவதன்மேல், 50-ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படு வதற்குள்ளாவார்.

பாக்கியை வசூலிக்க வியாஜ்ஜியம்.

43. **(1)** இந்த ஆக்டின்படி பாக்கியாயிருக்கிற யாதொரு தொகைக்காக பஞ்சாயத்தானது வியாஜ்ஜியம் தொடருவதற்கு இதில் கண்டதெதனாலும் தடை உண்டாகமாட்டாது.

வரி விதித்திருப்பது முதலியவைகளைக் குறித்து தோஷம் சொல்லக் கூடாதென்பது.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில், யாதொரு நபருடைய பெயர்-வாசஸ்தலம் அல்லது தொழில் விஷயமாகவாவது, யாதொரு சொத்து அல்லது வஸ்துவின் விவரக்குறிப்பு விஷயமாகவாவது, விதிக்கப்பட்டோ, கேட்கப்பட்டோ அல்லது பொறுப்பேற்றப்பட்டோ இருக்கிற தொகைவிஷயமாகவாவது நேரிட்ட யாதொரு எழுத்துப்பிழை காரணமாகவாகிலும் யாதொரு பிசகு காரணமாகவாகிலும், இந்த ஆக்டினால் ஏற்படும் அதிகாரத்தைக்கொண்டு விதிக்கப்பட்ட யாதொரு வரியைக் குறித்தும் அல்லது செய்யப்பட்ட டிமாண்டைக் குறித்தும் ஏற்படுத்தப்பட்ட பொறுப்பைக்குறித்தும் தோஷம் சொல்லவுங்கூடாது, அப்படிப்பட்டதற்குபாதகம் உண்டாகவுமாட்டாது. மேலும் இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கைகளும் கிரமக்குறைவாயிருப்பது காரணமாகவே, அவை எந்த நியாய விசாரணைக் கோர்ட்டாராலும் ரத்துசெய்யப்படவுமாட்டா தள்ளிவிடப்படவுமாட்டா.

(3) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில், இந்த ஆக்டினால் ஏற்பட்ட அதிகாரத்தைக்கொண்டு வசூல்செய்யப்படும் யாதொரு தொகையை வாபஸ்பெறுவதற்காகிலும், ஷை அதிகாரத்தைக்கொண்டு யாதொரு வரி விதிக்கப்பட்டது அல்லது தொகை வசூலிக்கப்பட்டது காரணமாக நேரிடும் நஷ்டத்திற்காக ஈடுபெறுவதற்காகவாகிலும் எந்தக் கோர்ட்டிலும் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாது.

விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

44. (1) பிரதேச கவர்ன்மெண்டார் இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றவைகளாயிராமல் அதிற் கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக விதிகள்செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகம் இல்லாமலும், பிரதேச கவர்ன்மெண்டார்—

(a) இந்த ஆக்டின்படி நிர்ணயிக்கப்படவேண்டுமென்றுவது நிர்ணயிக்கப்படக்கூடுமென்றுவது வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கும் சகல விஷயங்களைக்குறித்தும்,

(b) ப்ரெஸிடென்ட், பஞ்சாயத்துதாரர்கள் ஆகிய இவர்களின் உத்தியோகங்களில் ஏற்படும் காலிகளைப்பற்றி தெரிவிப்பதற்காகவும், அப்படிப்பட்ட காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்கான இன்ன காலத்துக்குள் எலெக்ஷன் நடத்தப் படவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்வதற்காகவும், பொதுவாய் இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட சகல எலெக்ஷன்களைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அப்படிப்பட்ட எலெக்ஷன்கள் சம்பந்தமான விவாதங்களை இன்ன அதிகாரி தீர்மானிக்க வேண்டுமென்பதை நிச்சயிப்பதற்காகவும்,

(c) சொத்தை அடையவும் கைப்பற்றில் வைத்திருக்கவும் ட்ரான்ஸ்பர் செய்யவும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும் பஞ்சாயத்துகளுக்குள்ள அதிகாரங்களைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதைக்குறித்தும்,

(d) பஞ்சாயத்தின் பிரதான நிர்வாக உத்தியோகஸ்தர் என்னும் ஹோதாவில் ப்ரெஸிடென்ட் செலுத்தக்கூடிய அதிகாரங்களைக்குறித்தும்,

(e) பஞ்சாயத்துகளின் சபைகளை நடத்துவதைக்குறித்தும், இத்தனை மெம்பர்கள் ஹாஜராயிருந்தால் சபை நடத்தலாமென்பதைக் குறித்தும்,

(f) பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிப்பதைக்குறித்தும், அவர்களுடைய சம்பளங்களைக் குறித்தும்,

(g) பஞ்சாயத்துகள் வைத்துவரவேண்டிய கணக்குகளையும், அந்தக் கணக்குகளைத் தணிக்கைசெய்வதையும் பிரசித்தஞ் செய்வதையுங் குறித்தும், பஞ்சாயத்து நிதியை இன்ன மாதிரியாய்ப் போட்டுவைக்கவேண்டும், அது இன்னார் வசத்தில் இருக்கவேண்டுமென்பது சம்பந்தமாய் ஏற்பாடுகள் செய்வதைக் குறித்தும்,

(h) பஞ்சாயத்துகள் அனுப்பவேண்டிய ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகள், ஸ்டேட்மெண்டுகள், ரிபோர்ட்டுகள் ஆகிய இவைகளைக் குறித்தும்,

(i) பஞ்சாயத்துகளின் வரவு செலவுகளின் மதிப்பு கணக்குகளைத் தயார்செய்வதையும் ஜாரிசெய்வதையும் குறித்தும்,

(j) இந்த ஆக்டின்படிக்கான விளம்பரங்களையும் உத்தரவுகளையும் இன்னவிதமாய்ப் பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று நிர்ணயிப்பதைக் குறித்தும்,

(k) இந்த ஆக்டின் 37-வது, 38-வது பிரிவுகளில் கண்ட மேல் விசாரணை அதிகாரிகள் தங்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்தும்போது அனுசரித்து நடக்கவேண்டிய கற்பனைகளை நிர்ணயிப்பதைக் குறித்தும்,

(l) இந்த ஆக்டின்படிக்கான குற்றங்களை இன்ன வகுப்பைச் சேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரணைசெய்யவேண்டுமென்று நிர்ணயிப்பதைக்குறித்தும்,

(m) இந்த ஆக்டின்படி தீர்மானிக்கவேண்டியதாய் ஏற்படும் எந்த விஷயங்கள் சம்பந்தமாகவாவது எவையேனும் இரண்டு பஞ்சாயத்துக்குள்ளாகிலும் யாதொரு பஞ்சாயத்துக்கும் வேறே யாதொரு பிரதேச அதிகார சபைக்குமாகிலும் ஏற்படும் வித்தியாசங்களை அல்லது விவாதங்களைப் பைசல் செய்வதைக் குறித்தும்,

விதிகள்செய்ய அதிகாரம் உடையவர்களாவார்கள்.

(3) இந்த ஆக்டின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது (அவைகளை) முன்னதாகப் பிரசித்தஞ் செய்யவேண்டுமென்னும் திட்டத்துக்கு உட்பட்டதாகும்.

நோடிஸுகள் இன்னமாதிரியாய் இருக்கவேண்டுமென்பது.

45. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி கொடுக்கப்படும் அல்லது பிறப்பிக்கப்படும் சகல நோடிஸுகளும் எழுத்துமூலமாய் இருக்கவேண்டும்.

சகாயச்சட்டங்களைப் பிரசித்தஞ்செய்வது.

46. இந்த ஆக்டின்படி செய்யப்படும் ஒவ்வொரு சகாயச்சட்டமும்-இந்த ஆக்டின்படி வேறே ஒரு முறை நிர்ணயிக்கப்பட்டாலன்றி மற்றப்படியாகிலும், வேறே ஒரு முறையை அனுசரிக்கவேண்டுமென்று பஞ்சாயத்தால் கட்டளையிடப்பட்டாலன்றி மற்றப்படியாகிலும், கிராமத்தில் வழங்கும் பிரதான சுதேச பாஷையில் எழுதப்பட்டாவது மொழிபெயர்க்கப்பட்டாவது, பஞ்சாயத்தின் ஆபீஸில் வைத்துவைக்கப்படவேண்டும்; மேலும், அதன் பிரதி ஒன்றை அந்த ஆபீஸில் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்திலும், பஞ்சாயத்து கட்டளையிடக்கூடிய இதர இடங்களிலும் ஒட்டிவைக்கவேண்டும்; அல்லாமலும, அந்தப் பிரதி மேலேகண்டபடி ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறதென்றும், (அதன் அசலைப் பஞ்சாயத்தின் ஆபீஸில் பார்வையிடலாமென்றும் கிராம முழுவதிலும் தண்டோரா மூலமாகவோ மற்றப்படியோ பகிரங்கமாகப் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

யாதொன்றைச் செய்யக்கூடாதென்பதைப்பற்றியாகிலும் இடங்களைப் பிரத்தியேகமாய் விட்டு வைத்திருக்கிறதென்பதைப்பற்றியாகிலும் நோடிஸ்.

47. பஞ்சாயத்தானது இந்த ஆக்டின்படி அனுமதிகொடுத்திருக்கும் யாதொரு காரியத்துக்காக யாதொரு இடத்தைப் பிரத்தியேகமாய் விட்டுவைத்திருந்தாலும், யாதொரு இடத்தில் எதையாவது செய்யக்கூடாதென்று தடுத்திருந்தாலும், ப்ரெஸிடென்டானவர்-கிராமத்தில் வழங்கும் பிரதான சுதேச பாஷையில் அந்த இடத்திலோ அல்லது அதற்குச் சமீபத்திலோ உடனே நோடிஸ் ஒன்றை ஒட்டிவைக்கும்படிச் செய்யவேண்டும். அந்த இடம் இன்ன காரியத்துக்காகப் பிரத்தியேகமாய் விட்டுவைக்கப்பட்டிருக்கிறதென்றாவது அந்த இடத்தில் இன்ன காரியம் செய்யக்கூடாதென்றாவது மேற்படி நோடிஸில் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

தஸ்தவேஜைச் சேர்ப்பிக்கும் விதம்.

48. (1) யாதொரு நோடிஸாவது இதர தஸ்தவேஜாவது இந்த ஆக்டினாலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி-சகாயச்சட்டம் அல்லது உத்தரவினாலாகி

லும் யாதொரு நபருக்குச் சேர்ப்பிக்கப்படவோ அல்லது அனுப்பப் படவோ வேண்டியிருக்கும்போது, அதை—

(a) அந்த நபரிடத்தில் மேற்படி தஸ்தவேஜைக்கொடுத்தோ அல்லது பெற்றுக்கொள்ளும்படி காட்டியோ,

(b) அந்த நபர் அகப்படாவிட்டால், அந்த நபர் கடைசியாய் வசித்துக்கொண்டிருந்ததாகவோ தொழில் நடத்திக்கொண் டிருந்ததாகவோ தெரியவருகிற இடத்தில் மேற்படி தஸ்த வேஜைக் கொடுத்துவைத்தோ, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்த யாதொரு நபரிடத்திலாகிலும் வேலைக் காரனிடத்திலாகிலும் அதைக்கொடுத்தோ அல்லது பெற் றுக்கொள்ளும்படி காட்டியோ,

(c) மேற்படி நபர் கிராமத்தில் வசிக்காமலிருந்து வேறே இட த்தில் அவருடைய மேல்விலாசம் ப்ரெஸிடென்டுக்குத் தெ ரிந்திருந்தால், அதை ரெஜிஸ்டர் செய்து தபால் மூலமாய் அவருக்கு அனுப்பியோ,

(d) முன்சொல்லப்பட்ட உபாயங்கள் எதுவும் சாத்தியமாயி ராவிட்டால், அதை மேலேகண்ட வாசஸ்தலம் அல்லது தொழில் நடத்தும் இடத்தில் நன்றாய்த் தெரியும்படியான ஒரு பாகத்தில் ஒட்டியோ,

சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம்.

(2) மேற்படி நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகவாவது அனுபோகதாரராகவாவது இருந்தால், தஸ்த வேஜில் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரின் பெயரைக் குறிப் பிடவேண்டிய அவசியமில்லை; மேலும், கூட்டுச்சொந்தக்காரர்களின் விஷயத்திலும் கூட்டு அனுபோகதாரர்களின் விஷயத்திலும், அப்படிப் பட்ட சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களில் ஒருவருக்கு அதைச் சேர்ப்பிப்பதாவது அனுப்புவதாவது போதுமானதாகும்.

(3) இந்த ஆக்டின்படி சேர்ப்பிக்கப்படும் அல்லது அனுப்பப் படும் யாதொரு பில் (bill)-நோடிஸ் அல்லது இதர தஸ்தவேஜில் இன்ன கால அளவுக்குள் யாதொரு வரியையாவது வேறே தொகை யையாவது செலுத்தவேண்டுமென்றாகிலும் யாதொரு வேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்றாகிலும் எதையேனும் ஏற்படுத்தவேண்

டுமென்றாகிலும் ஒரு கால அளவு நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்தால், அந்தக் கால அளவானது-மேலே கண்டபடி சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படக் கூடாதென்று இந்த ஆக்டில் ஸ்பஷ்டமாய் யாதொரு நிபந்தனை ஏற்பட்டிராத பக்ஷத்திலே, அந்தத் தேதியிலிருந்தே கணக்கிடப்படும்.

A. ஷெட்யூல்.

வேலைகளும் வர்த்தகங்களும் தொழில்களும்.

[26-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (b) அடையாளமிட்ட பகுதி.]

பத்திரம் எழுதுகிறவர்களும், ஸ்டாம்பு விற்பவர்களும்.

லா ஏஜென்டுகள்.

குருக்கள் அல்லது புரோகிதர்கள்.

காஜிகள்.

அர்ச்சகர்கள்.

பொம்மலாட்டக்காரர்களும், ஹரிகதை காலக்ஷேபம் செய்கிறவர்களும். (ஆட்டம் அல்லது காலக்ஷேபம் ஒன்றுக்கு வரி.)

நாட்டியமாடுகிறவர்கள்.

சங்கீதக்காரர்கள்.

வாடகைக்கு ஓடும் பாரவண்டிகளின் அல்லது ஜட்காவண்டிகளின் சொந்தக்காரர்கள். (பாரவண்டி அல்லது ஜட்காவண்டி ஒன்றுக்கு வரி.)

போஜன விடுதிகள் அல்லது ஓட்டல்கள் அல்லது சாப்பாட்டு வீடுகள் அல்லது சிற்றுண்டியும் போஜனமும் வழங்கப்படும் வீடுகளையும் (ஷாப்) கடைகளையும் வைத்துக்கொண்டிருப்பவர்கள்.

நெசவுக்காரர்கள். (தறி ஒன்றுக்கு வரி.)

ரத்ன கம்பளம், கம்பளி அல்லது போர்வைகள் செய்பவர்கள்.

ஹகீம்கள் அல்லது வைத்தியர்கள்.

கள், சாராயம், கஞ்சா, அபினி, அந்நியதேச சாராயம் ஆகிய இவை விற்கும் கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள்.

கால்நடைகள், வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகளின் வியாபாரம்செய்பவர்கள். (விற்கப்படும் பிராணி ஒன்றுக்கு வரி.)

தானியம், கால் நடை ஆகிய இவைகள் சம்பந்தமான ப்ரோக்கர்கள். (தரகர்கள்.)

தானியம், இதர உற்பத்திப் பொருள்கள் ஆகிய இவைகளை அளக்கும் தொழில் செய்பவர்கள்.

தச்சர்களும், சகல வகையான கம்மியர்களும்.

கிராமத்திலுள்ள இதர சிற்பர்கள்.

வெல்லம், சர்க்கரை, நீலி (தொட்டி ஒன்றுக்கு வரி) அல்லது சாயங்கள் செய்பவர்கள்.

செங்கல் அல்லது ஓடுகள் செய்பவர்களும், சுண்ணாம்பு காளவாய்களின் சொந்தக்காரர்களும் (காளவாய் ஒன்றுக்கு வரி.)

(எண்ணெய்மில்) செக்குகளின் சொந்தக்காரர்கள் (செக்கு ஒன்றுக்கு வரி.)

கட்டை தொட்டி வைத்திருப்பவர்கள்.

சொற்ப கம்மிஷன் (தரகு) ஏஜெண்டுகள்.

வைத்தியாப்பியாசிகள்.

சில்லறைக் கடைக்காரர்கள்.

சில்லறை வர்த்தகர்கள்.

படகுகளின் சொந்தக்காரர்கள் (படகு ஒன்றுக்கு வரி.)

மொத்த வர்த்தகர்கள் அல்லது வியாபாரிகள்.

தொழிற்சாலை சொந்தக்காரர்கள்.

அரிசி மில் (யந்திரம்) அல்லது தோல் பதனிடும் சாலைகளின் சொந்தக்காரர்கள்.

பணம் கடன் கொடுப்பவர்கள்.

கன்ட்ராக்டர்கள்.

யந்திரசக்தியினால் இயக்கப்படும் எண்ணெய் மில்லுகளின் (யந்திரங்களின்) சொந்தக்காரர்கள்.

பஞ்சு அழுத்தும் யந்திரங்களின் சொந்தக்காரர்களும், எலும்பு, மாட்டுத் தோல், ஆட்டுத்தோல் முதலியவைகளுக்காக டெப்போக்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள்.

1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகள்.

(போர்ட் செய்ண்ட் ஜார்ஜ், 28—2—22உ-யுள்ள 166-வது நெம்பர் கவர்ன்மேண்ட் உத்தரவு.)

1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்ட் 44-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளினாலும் அவைகளை அனுசரித்தும் தங்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் அதிகாரங்களைக்கொண்டு பிரதேச கவர்ன்மெண்டார் அடியிற் கண்ட விதிகளைக் கனிகூர்ந்து செய்கிறார்கள் :—

1. இந்த விதிகளில் "ரெஜிஸ்ட்ரார்" என்பது—

(a) ஜில்லா கலெக்டரின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்ட பஞ்சாயத்துகளின் விஷயத்திலே, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளை தம்முடைய அதிகாரத்தில் வைத்திருக்கும் அந்த ஜில்லா கலெக்டரும் ;

(b) மற்றப் பஞ்சாயத்துகளின் விஷயத்திலே, 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்ட் பிரயோகப்படுகிற விஸ்தீர்ணம் முழுவதுக்கும் ரெஜிஸ்ட்ராராக பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட நபர் என்றும்,

அர்த்தமாகும்.

2. யாதொரு விஸ்தீர்ணம் கிராமமாகுமென்று நிர்ணயித்து 3-வது பிரிவைச்சேர்ந்த (7) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் உத்தரவையும், யாதொரு கிராமத்துக்கு பஞ்சாயத்தை அமைக்கும்படி கட்டளையிட்டு 4-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியின்படி செய்யப்படும் விளம்பரத்தையும், அப்படிப்பட்ட விளம்பரத்தை ரத்து செய்தாவது திருத்தியாவது 4-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி செய்யப்படும் விளம்பரத்தையும் டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டிலும் கிராமத்தில் தண்டோரா மூலமாகவும் பிரசித்தஞ் செய்யவேண்டும். கிராமப் பெரியதனக்காரர் மேற்படி விளம்பரத்தை கிராமத்தில் தண்டோரா மூலமாய்ப் பிரசித்தஞ்செய்யவேண்டியதுமல்லாமல், அந்தப்படி தாம் செய்திருக்கும் சங்கதியைக்குறித்து உறுதிமொழி கூறி ரெஜிஸ்ட்ராருக்கும் அவரால் குறிப்பிடப்படும் நபருக்கும் தெரிவிக்கவும்வேண்டும். அந்த விளம்பரமானது டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யப்பட்ட தேதியோ கிராமத்தில் தண்டோரா மூலமாய்ப் பிரசித்தஞ்செய்யப்பட்ட தேதியோ இவைகளில் எது முந்தினதாயிருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்து செலாவணியாகத் தொடங்கும்.

3. பஞ்சாயத்துதாரர்களுக்குள் காலி ஏற்படும்போதெல்லாம், பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டானவர்-அந்தப்படி ஏற்பட்டதிலிருந்து பதினைந்து தினங்

களுக்குள்ளாக அந்த சங்கதியைப்பற்றி ரெஜிஸ்ட்ராருக்காவது இது விஷயமாய் அவரால் குறிப்பிடப்படும் நபருக்காவது ரிபோர்ட் செய்யவேண்டும்.

4. முதல் தடவையாகப் பஞ்சாயத்துதாரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டிய தாயிருந்தாலும், பஞ்சாயத்துதாரர்களுக்குள் காலி ஏற்பட்டாலும், ரெஜிஸ்ட்ரா ராகிலும் அவரால் குறிப்பிடப்படும் நபராகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பஞ்சா யத்துதாரரையோ பஞ்சாயத்துதாரர்களையோ தெரிந்தெடுப்பதற்காக ஒருதேதியை நிஷ்கரிஷைத செய்யவேண்டியதுமேல்லாமல், மேற்படி தேதிக்குக் குறைந்தது ஸ்பஷ்டமாய் எழுநினங்களுக்கு முன்னதாக ஒரு நோடிஸ் பிரசித்தஞ்செய்து, 6-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வோட்கொடுக்க அர் ஹர்களாய் கிராமத்தில் குடியிருக்கும் நபர்களுக்கு, அந்த நோடிஸில் குறிப்பிட்டி ருக்கும் பலான காலத்திலும் இடத்திலும் கூடவேண்டுமென்று உத்தரவு செய்ய வும் வேண்டும்.

5. மேற்படி நோடிஸை—

(a) அதன் நகல் ஒன்றை—

(i) கிராமபஞ்சாயத்தின் ஆபீஸிலும், கிராமச்சாவடி ஏதாவதிருந்தால் அதிலும்,

(ii) கிராமத்தில் நன்றாய்த் தெரியும்படியான மூன்றுக்குக் குறையாத இடங்களிலும் ஒட்டியும்,

(b) கிராமத்தில் தண்டோரா போட்டும்,

பிரசித்தஞ் செய்யவேண்டும்.

அந்த நோடிஸை (தெரிந்தெடுக்கும் விஷயம்) எலெக்ஷன் நடந்தேறுவதற் காக நிஷ்கரிஷைத செய்யப்பட்ட காலத்துக்குக் குறைந்தது இரண்டுமணிநேரம் முன்னதாய் எலெக்ஷன் தேதியன்றைக்குக் கிராமத்தில் தண்டோரா மூலமாக மறுபடியும் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

6. ரெஜிஸ்ட்ராராவது அவரால் குறிப்பிடப்பட்ட நபராவது அப்படிப் பட்ட நபரால் அனுப்பப்படக்கூடிய வேறே யாதொரு நபராவது வோட்கொடுப் பவர்களின் சபையில் அக்கிராசனம் வகித்து எலெக்ஷன் நடத்தவேண்டும்.

7. எலெக்ஷனை நடத்தவேண்டியிருக்கும் நபர் ‘ அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் ’ என்று விதிகளில் சொல்லப்படுவார் ; இவர்-நோடிஸில்குறிப் பிடப்பட்ட இடத்துக்குப்போய், 6-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட் பிரிவின்படி வோட் கொடுக்க அர்ஹர்களாயிருக்கும் நபர்களைமாத்திரம் அந்த இடத்துக்குள்ளே விடவேண்டும். யாதொரு நபரை உள்ளேவிடும் விஷயமாக வாவது விலக்கும் விஷயமாகவாவது ஆட்சேபனை ஏதாகிலும் செய்யப்பட்டால் அவர்-அதைப்பற்றி அங்கேயே அப்போதே விசாரித்து தீர்மானம் செய்யவேண் டும் ; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

8. ஒவ்வொரு அபேக்ஷகரும் ஒரு வோட்டரால் பிரேரேபிக்கப்பட்டு இன் னொரு வோட்டரால் ஆமோதிக்கப்படவேண்டும். அந்தப்படி பிரேரேபித்து

ஆமோதிக்கப்பட்டிருக்கும் பெயர்களை அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் குறித்துக்கொள்ளவேண்டும்.

9. அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரானவர்-7-வது பிரிவின்படி யோக்கியதை பெற்றிராதவரென்று தமக்குத் தோற்றும் யாதொரு அபேக்ஷகரின் பெயரைத் தாமாகவேயாவது, வந்திருக்கும் வோட்டர்களில் எவராகிலும் ஆட்சேபனை செய்வதன்மேலாவது தள்ளிவிடவேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

10. பிறகு, அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரானவர்-யோக்கியதையுடையவர்களென்று தமக்குத் தோற்றும் அபேக்ஷகர்களின் பெயர்களை வாசித்துச் சொல்லவேண்டும்.

11. யோக்கியதையுடைய அபேக்ஷகர்களின் சங்கியையானது தெரிந்தெடுக்கப்படவேண்டிய பஞ்சாயத்துதாரர்களின் சங்கியைக்குச் சமமாகவாவது குறைவாகவாவது இருக்கும்பட்சத்தில், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர்-யோக்கியதையுடைய அபேக்ஷகர்கள் எல்லோரும் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தஞ் செய்யவேண்டும்; மேலும் அவர் தெரிந்தெடுக்கப்படவேண்டிய பஞ்சாயத்துதாரர்கள் இன்னும் எவர்களாவதிருந்தால் அவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக அதே சபையிலாகிலும் பிற்பட்ட ஒரு சபையிலாகிலும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

12. அப்படிப்பட்ட அபேக்ஷகர்களின் சங்கியையானது தெரிந்தெடுக்கப்படவேண்டிய பஞ்சாயத்துதாரர்களின் சங்கியையைக்காட்டிலும் அதிகமாயிருந்தால், அப்போது அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரானவர்-வந்திருக்கும் வோட்டர்களில் இத்தனைபேர் யோக்கியதையுடைய ஒவ்வொரு அபேக்ஷகரின்பக்ஷமாயிருக்கிறார்களென்பதைக் கைகளைக் காட்டச்சொல்லியாவது மற்றப்படியாவது நிச்சயித்தறிந்து, மற்றவர்களைக்காட்டிலும் யாருக்கு அதிகமாய் வோட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த அபேக்ஷகர் அல்லது அபேக்ஷகர்கள் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக பிரசித்தஞ் செய்யவேண்டும்.

13. எந்த அபேக்ஷகர்களுக்காவது கிடைத்திருக்கும் வோட்டுகள் சமமாயிருப்பதாகத் தெரியவந்து, அந்த வோட்டுகளுடன்கூட ஒரு வோட்டைச் சேர்க்கும்பட்சத்தில் ஷை அபேக்ஷகர்களில் எவராகிலும் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ் செய்யப்படுவதற்கு அர்ஹதை உண்டாவதாயிருந்தால், அப்படிப்பட்ட அதிகப்படியான ஒரு வோட் இன்ன நபர் அல்லது நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக எண்ணவேண்டுமென்பதை, அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரின் முன்னிலையிலும் அவரால் நிச்சயிக்கப்படக்கூடிய மாதிரியாகவும் சீட்டு போட்டுத் தீர்மானிக்கவேண்டும்.

14. கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தஞ் செய்யப்பட்ட அபேக்ஷகர் அல்லது அபேக்ஷகர்களின் பெயர்களை, அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரின் கையெழுத்து போட்டுள்ள ஒரு விளம்பர ரூபமாக பஞ்

சாயத்தின் ஆபீஸிலும் கிராமச்சாவடி ஏதாவதிருந்தால் அதிலும் உடனே பிரசித்தஞ் செய்யவேண்டும்.

15. அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரானவர் எலெக்ஷன் முடிவை ரெஜிஸ்ட்ராருக்காவது அவரால் குறிப்பிடக்கூடிய நபருக்காவது தெரிவிக்க வேண்டும் ; அதன்மேல், ரெஜிஸ்ட்ராராகிலும் அப்படிப்பட்ட வேறே நபராகிலும் தெரிந்தெடுக்கப்பட்ட அபேக்ஷகர்களின் பெயர்களை டிஸ்ட்ரிக்ட் கெஜட்டில் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

16. யாதொரு பஞ்சாயத்தால் செய்துகொள்ளப்படும் எந்த ஒப்பந்தத்தின் மதிப்பு அல்லது தொகை 50 ரூபாய்க்கு அதிகப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தமும் எழுத்துமூலமாய் இருக்கவேண்டியது மல்லாமல், அதில் ப்ரெஸிடென்டும் குறைந்தது வேறே ஒரு பஞ்சாயத்துதாரரும் கைபெழுத்து போடவேண்டும்.

17. பஞ்சாயத்தினிடத்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அதற்குச் சொந்தமாயிருக்கும் அசையாப்பொருள் எதையும், ரெஜிஸ்ட்ராருடைய அனுமதியுடனன்றி மற்றப்படி, விக்கிரயம், தானம், அடைமானம் அல்லது பரிவர்த்தனை மூலமாகவாவது, மூன்று வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கு குத்தகை மூலமாகவாவது மற்றப்படியாவது ட்ரான்ஸ்பர் பண்ணக்கூடாது.

18. யாதொரு சகாயச்சட்டம் செய்யவாவது ஏற்கனவேயுள்ள ஒரு சகாய சட்டத்தை மாற்றவாவது ரத்துசெய்யவாவது யாதொரு பஞ்சாயத்து பிரேரேபிக்கும்பக்ஷத்தில், அந்தப் பிரேரேபனையின் மசோதா ஒன்றைப் பஞ்சாயத்தின் ஆபீஸிலும் கிராமச் சாவடி ஏதாவதிருந்தால் அதிலும் ஒட்டவேண்டும் ; மேலும் டை. மசோதாவைப் பஞ்சாயத்தின் ஆபீஸிலும் கிராமச்சாவடி ஏதாவதிருந்தால் அங்கேயும் பார்வையிடலாகுமென்று தண்டோரா மூலமாய் கிராமத்தில் விளம்பரம் பிரசித்தஞ் செய்யவேண்டியதுமல்லாமல், அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்கு முற்படாத ஒரு தேதியிலே டை பிரேரேபனையைப்பற்றி பஞ்சாயத்து ஆலோசிக்குமென்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடவும் வேண்டும்.

19. அந்தத் தேதியன்றைக்காவது சபை தள்ளிவைத்துக்கொள்ளப்படும் பிற்பட்ட யாதொரு தேதியன்றைக்காவது பஞ்சாயத்தானது-பிரஸ்தாப விஷயத்தில் அக்கறையுள்ள யாதொரு நபர் வாய்மொழியாகவாகிலும் எழுத்துமூலமாகவாகிலும் செய்யும் யாதொரு ஆட்சேபனையைப்பற்றி அல்லது தெரிவிக்கும் யாதொரு அபிப்பிராய குறிப்பைப்பற்றி ஆலோசித்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி டை சகாயச்சட்டம் ஏற்படுத்தவேண்டுமோ அல்லது அதை ரத்துபண்ணவேண்டுமோ அல்லது மாற்றவேண்டுமோ என்பதையும் இன்னமாதிரியாக அந்தப்படி செய்யவேண்டுமென்பதையும் முடிவாய்த் தீர்மானிக்கவேண்டும்.

20. யாதொரு சகாயச்சட்டமாவது யாதொரு சகாயச்சட்டத்தை ரத்து செய்தது அல்லது மாற்றினதாவது ரெஜிஸ்ட்டிராரால் அங்கீகரித்து ஊர்ஜிதம் செய்யப்படுகிறவரையிலே செலாவணியாகமாட்டாது.

21. யாதொரு வரியையாவது கட்டணத்தையாவது விதிக்க பஞ்சாயத்து உத்தேசிக்கும் பட்சத்தில் அது-அந்தப்படி உத்தேசித்திருப்பதை கிராமத்தில் தண்டோரா மூலமாகவும், கிராமப் பஞ்சாயத்தின் ஆபீஸிலும் கிராமச்சாவடி ஏதாவதிருந்தால் அதிலும் விளம்பரம் ஒட்டியும் பிரசித்தஞ் செய்யவேண்டும்; மேலும் அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குமுற் படாத ஒரு தேதியில் ஷை உத்தேசத்தைப்பற்றி பஞ்சாயத்து ஆலோசிக்குமென் றும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடவும் வேண்டும்.

22. அந்த தேதியன்றைக்காவது சபை தள்ளிவைத்துக்கொள்ளப்படும் பிற்பட்ட யாதொரு தேதியன்றைக்காவது பஞ்சாயத்தானது-பிரஸ்தாப விஷயத் தில் அக்கரையுள்ள யாதொரு நபர் வாய்மொழியாகவாகிலும் எழுத்து மூலமாக வாகிலும் செய்யும் யாதொரு ஆட்சேபனையைப்பற்றி அல்லது தெரிவிக்கும் யா தொரு அபிப்பிராயக் குறிப்பைப்பற்றி ஆலோசித்து, அந்தப் பிரேரேபனையை முடிவாய்த் தள்ளிவிடவாவது வேண்டும், பிரதமத்தில் கண்டபடியாகிலும் திருத் தப்பட்ட ரூபமாகவாகிலும் அந்த பிரேரேபனைக்கு அனுமதி கொடுக்கவாவது வேண்டும் ; ஆனால் பிரதமத்தில் பிரேரேபிக்கப்பட்ட வரி வீதங்களையாவது கட் டண வீதங்களையாவது உயர்த்தவேண்டுமென்று பஞ்சாயத்துக்குத் தோற்றும்பட் சத்தில், அந்தப்படி உயர்த்துவதைப்பற்றி முடிவாய்த் தீர்மானம்செய்வதற்குமுன் புதிதாய் அறிக்கையிடவேண்டும்.

23. யாதொரு வரி அல்லது கட்டணம் விதிப்பதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு பிரேரேபனையையும் வரி அல்லது கட்டணம் விதித்ததை ஊர்ஜிதப் படுத்துவதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு தீர்மானத்தையும் ரெஜிஸ்ட்ராருக் கும் அவரால் குறிப்பிடப்படும் நபருக்கும் அனுப்பவேண்டும்.

24. 28-வது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் விளம்பரத்தை கிராமத்தில் தண்டோராமூலமாகவும் பஞ்சாயத்தின் ஆபீஸிலாகிலும் கிராமச்சாவடி ஏதாவதி ருந்தால் அங்கேயாகிலும் நோட்டீஸ் ஒட்டி பிரசித்தஞ் செய்யவேண்டும்.

25. பஞ்சாயத்தானது யாதொரு வரி அல்லது கட்டணத்தைச்செலுத்து வதற்கு உள்ளான சகல நபர்களின் ஜாபிதா அடங்கிய (அஸெஸ்மெண்ட் புக்) வரி விதிப்பு புஸ்தகம் ஒன்றைத் தயார்செய்து வைக்கவேண்டும்.

26. யாதொரு வரிவிதித்திருப்பது சம்பந்தமான ஜாபிதாவானது பூர்த்தி யானதும், அந்த ஜாபிதாவை பஞ்சாயத்தின் ஆபீஸிலாகிலும் கிராமச்சாவடி ஏதா வதிருந்தால் அங்கேயாகிலும் பார்வையிடலாகுமென்று தண்டோராமூலமாய் கிரா மத்தில் விளம்பரம் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

27. வரி விதித்திருப்பதை திருத்தவேண்டுமென்று 30-வது பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும், 26-வது விதியின்படி விளம்பரம் பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஸ்பஷ்டமாய் 30 தினங்களுக்குள்ளாகச் செய்துகொள்ளவேண்டும்.

28. வரிகளையும் கட்டணங்களையும், 26-வது விதியின்படி விளம்பரம் பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்தாவது வரி விதித்திருப்பதைத் திருத்துவதற்காக விண்ணப்பம் செய்துகொண்டிருக்கும் விஷயங்களில் 30-வது பிரிவின்படி பஞ்சாயத்து உத்தரவு பிறப்பிக்கிற தேதியிலிருந்தாவது 30 தினங்களுக்குள்ளாக பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டினிடத்திலாகிலும் கிராமப் பெரியதனக்காரரிடத்தில் செலுத்தும்படி பஞ்சாயத்து தீர்மானம் செய்கிறபட்சத்தில் அந்தப் பெரியதனக்காரரிடத்திலாகிலும் ரொக்கமாய்ச் செலுத்தவேண்டும்.

29. வரிகளையும் கட்டணங்களையும் வசூலிக்கும் வேலையை கிராமப்பெரியதனக்காரரிடத்தில் ஒப்புவிக்க பஞ்சாயத்து தீர்மானம் செய்யும்பட்சத்தில், வசூலிக்கப்பட்ட தொகையின்மேல் ருபாய்க்கு ஒரு அணு வீதத்துக்குக் குறையாமல் அவருக்குப் பிரதிபலன் கொடுக்கப்படும்.

30. பஞ்சாயத்தினிடத்தில் எதாவது பணத்தைச்செலுத்தும் ஒவ்வொரு நபருக்கும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ப்ரெஸிடென்டாலாகிலும் கிராமப் பெரியதனக்காரராலாகிலும் கிரமமாய்க் கையெழுத்து செய்யப்பட்ட ரசீது ஒன்று கொடுக்கப்படும்.

31. ப்ரெஸிடெண்ட் உத்தியோகத்தில் காலி எற்படும்போது, பஞ்சாயத்தைச்சேர்ந்த எந்த மெம்பராவது-அந்த சங்கதியைப்பற்றி ரெஜிஸ்ட்ராருக்காகிலும் அவரால் குறிப்பிடப்பட்ட நபருக்காகிலும் ரிபோர்ட் செய்யலாம்.

32. யாதொரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்ட் முதல்தடவையாகத் தெரிந்தெடுக்கப்படவேண்டியிருந்தாலும், ப்ரெஸிடெண்டின் ஸ்தானம் காலியானலும், ரெஜிஸ்ட்ராராகிலும் அவரால் குறிப்பிடப்படும் நபராகிலும் ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு தேதியை நிஷ்கரிஷைசெய்து, அதைப்பற்றி ஒவ்வொரு பஞ்சாயத்துதாரருக்கும் அந்தத் தேதிக்குக் குறைந்தது ஸ்பஷ்டமாய் 3 தினங்களுக்கு முன்னதாக அறிவிக்கவேண்டும்.

33. ப்ரெஸிடெண்ட் உத்தியோகத்துக்கு அபேக்ஷகராயுள்ள ஒவ்வொருவரும் ஒரு பஞ்சாயத்துதாரரால் பிரேரேபிக்கப்பட்டு மற்றொரு பஞ்சாயத்துதாரரால் ஆமோதிக்கப்படவேண்டும். பிரேரேபித்து ஆமோதிக்கப்பட்டிருக்கும் சகல அபேக்ஷகர்களின் பெயர்களையும் அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரர் வாசித்துச் சொல்லவேண்டும்.

34. கிரமமாய் நேமகஞ் செய்யப்பட்ட அபேக்ஷகர் ஒருவர் மாத்திரமேயிருந்தால், அவர் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படுவார்.

35. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேக்ஷகர்கள் இருக்கும் பக்ஷத்தில், அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரர், வந்திருக்கும் பஞ்சாயத்து தாரர்களில் இத்தனை பேர் ஒவ்வொரு அபேக்ஷகரின் பக்ஷமாயிருக்கிறார்களென் பதை கைகளைக் காட்டச்சொல்லியாவது மற்றப்படியாவது நிச்சயித்தறியவேண் டும்.

36. எந்த பஞ்சாயத்துதாரரும் ஒரு அபேக்ஷகருக்கு மேற்பட்டு வோட் கொடுக்கலாகாது.

37. அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரர்-மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் யாருக்கு வோட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த அபே க்ஷகர் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தஞ் செய்யவேண்டும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேக்ஷகர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான வோட்டுகள் கிடைத்தால், அவர்களில் இன்னார் கிரம மாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தஞ் செய்யப்படவேண்டுமென் பதை நிச்சயித்தறிவதற்காக அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரர் சீட்டு போடவேண்டும்.

38. அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரர் தெரிந்தெடுக்கப்பட்ட அபேக்ஷகரின் பெயரை விளம்பர ரூபமாகப் பஞ்சாயத்தின் ஆபிஸில் பிரசித்தஞ் செய்யவேண்டும்; மேலும் அவர்-அந்தப் பெயரை ரெஜிஸ்ட்ராருக்காவது அவ ரால் குறிப்பிடப்பட்ட நபருக்காவது தெரிவிக்கவும் வேண்டும். ரெஜிஸ்ட்ராரா வது அவரால் குறிப்பிடப்பட்ட நபராவது அந்தப்பெயரை டிஸ்ட்ரிக்ட் கெஜட் டில் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

39. யாதொரு பஞ்சாயத்தின் தீர்மானமானது தகுந்த அதிகாரியால் திருத் தப்பட்டாகிலும், சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டாகிலும், ரத்துசெய் யப்பட்டாகிலும், இருந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட ஒவ்வொரு தீர்மா னத்தையும் ப்ரெஸிடென்ட் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

40. ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தால் நிஷ்கரிஷை செய்யப்படக் கூடிய வரையறைகளுக்கு மேற்படாமல், பஞ்சாயத்தைச் சேர்ந்த சகல உத்தி யோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜாகொடுக்கலாம்.

41. பஞ்சாயத்தின் சார்பிலாவது அதன் அதிகாரத்தைக்கொண்டாவது கொடுக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸ் அல்லது அனுமதியிலும். அந்தப்படி சேர்ப்பிக்கப்படும் அல்லது அனுப்பப்படும் ஒவ்வொரு பில், நோடிஸ் அல்லது வேறே தஸ்தவேஜிலும், ப்ரெஸிடென்டாகிலும் இது விஷயமாய் அவரால் கிர மமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு பஞ்சாயத்துதாரராகிலும் கையெ ழுத்து போடவேண்டும்,

42. யாதொரு விசாரணை செய்யும்பொருட்டாவது பார்வையிடும்பொருட்டாவது சோதனை செய்யும்பொருட்டாவது பரீட்சை செய்யும் பொருட்டாவது ஸர்வே செய்யும்பொருட்டாவது அளவிடும்பொருட்டாவது மதிப்பிடும்பொருட்டாவது, டை ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படியாகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி சாயச்சட்டம் அல்லது உத்தரவில்கண்ட நிபந்தனைகளின்படியாகிலும் அனுமதி கொடுக்கப்பெற்றதாகவோ அல்லது டை ஆக்டின் காரியங்களில் எதற்காகவாவது டை நிபந்தனைகளில் எதை அனுசரித்தாவது செய்வதாகிலும் செய்து முடிப்பதாகிலும் அவசியமாயிருப்பதாகவோவுள்ள வேறே யாதொரு வேலையைச்செய்து முடிக்கும்பொருட்டாவது உதவியாட்கள் அல்லது வேலையாட்களோடாகிலும் அவர்களில்லாமலாகிலும் ப்ரெஸிடென்ட் அல்லது அவரால் இதுவிஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபர் யாதொரு கட்டிடத்துக்குள்ளாயினும் நிலத்தின்மேலாயினும் பிரவேசிக்கலாம்.

ஆகுல்—

(a) சூரியாஸ்தமனத்துக்குப் பிறகும் சூரியோதயத்துக்கு முன்னும் அந்தப்படி எவரும் பிரவேசிக்கக்கூடாது ;

(b) யாதொரு குடியிருப்பு இடமாக உபயோகிக்கப்படும் பொதுவான கட்டிடத்தின் யாதொரு பாகத்திலும் அந்தப்படி பிரவேசிக்க உத்தேசித்திருப்பதைக் குறித்து குறைந்தது ஆறுமணி நேரத்துக்கு முன்னதாக அதன் அனுபோகதாரருக்கு நோடிஸ் கொடுத்திருந்தாலன்றி மற்றப்படி, அந்த அனுபோகதாரருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அங்கே அவ்விதம் பிரவேசிக்கக்கூடாது ;

(c) ஸ்திரீகளுக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கும் யாதொரு அறையிலுள்ளவர்கள் தங்களுடைய அந்தரங்க வாழ்க்கைக்குக் கெடுதி நேரிடாதபடி அந்த வளைவைச்சேர்ந்த வேறொரு பாகத்துக்குப் போய்விடக்கூடியவர்களாயிருக்கும்படி ஒவ்வொரு விஷயத்திலும் போதுமான நோடிஸ் கொடுக்கவேண்டும் ;

(d) எதற்காகப் பிரவேசிக்கவேண்டியதாயிருக்கிறதோ அந்தக்காரியத்தில் அவசியத்துக்குப் பொருத்தமாயிருக்கக்கூடியமட்டில் அந்த வளவிலுள்ளவர்களின் சமூக ஆசாரங்களையும் மதாசாரங்களையும் தக்கபடி கவனித்துப் பிரவேசிக்கவேண்டும்.

43. ப்ரெஸிடென்டானவர்-மேற்படி ஆக்டின்படி வரி விதிப்பது சம்பந்தமாகவாவது யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதிகொடுப்பது சம்பந்தமாகவாவது ஏற்படுகிற யாதொரு விஷயத்தைக்குறித்து சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் தமக்கு முன் ஹாஜராகி சாட்சியம்சொல்லவும் தஸ்தவேஜுகளை ஹாஜர்ப்படுத்தவும் யாதொரு நபருக்கு ஸம்மன் அனுப்பலாம்.

44. பஞ்சாயத்தின் சபைகளை, பஞ்சாயத்தின் ஆபீஸிலாவது ப்ரெஸிடெண்ட் அப்போதைக்கப்போது நிச்சயிக்கக்கூடிய வேறே இடத்திலாவது நடத்தவேண்டும்; மேலும், அவை சாதாரண சபைகளாகவாகிலும் விசேஷ சபைகளாகவாகிலும் இருக்கலாம்.

45. சாதாரண சபைகள் குறைந்தது மாதத்துக்கு ஒரு முறையாவது பஞ்சாயத்து நிச்சயிக்கக்கூடிய தினங்களிலும் காலங்களிலும் நடத்தப்படவேண்டும்; மேலும், ப்ரெஸிடென்டால் சபை கூட்டப்படும்போதெல்லாம் இதர காலங்களிலுங்கூட அவை நடத்தப்படவேண்டும்.

46. ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தின் விசேஷ சபையைக் கூட்டலாம்; மேலும் அவர்-மூன்றுபேருக்குக்குறையாத பஞ்சாயத்துதாரர்கள் விசேஷ சபை கூட்டும்படி எழுதிக் கேட்டுக்கொள்வதன்மேல் அப்படிப்பட்ட சபை கூட்டவேண்டும். அந்தப்படி கேட்டுக்கொள்ளப்பட்டதிலிருந்து 15-தினங்களுக்குள் ப்ரெஸிடென்ட் விசேஷ சபைகூட்டத் தவறிப்போகும்பட்சத்தில் அப்படி கேட்டுக்கொண்ட கடிதத்தில் கையெழுத்துப்போட்ட மெம்பர்கள் தாங்களே சபைகூட்டி 47-வது விதியின்படி வெளிவிடவேண்டிய நோடிஸ் வெளிவிடலாம்.

47. அவசரமாயிருக்கும் விஷயங்களிலன்றி மற்றப்படி சபைநடத்தப்படும் தினத்தையும் காலத்தையும் அதில் நடத்தப்போகும் வேலையையும் கண்டெழுதிய நோடிஸானது சபைகூடும் தினத்துக்கு ஸ்பஷ்டமாய்க் குறைந்தது மூன்றுதினங்களுக்கு முன்னதாகக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய சபை எதுவும் நடத்தப்படக்கூடாது.

48. அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி விசேஷ சபைகளில் மாத்திரமே நடவடிக்கை நடத்தவேண்டும் :—

(a) ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பது;

(b) வரிகளையும் பொதுத்தன்மையாயுள்ள கட்டணங்களையும் விதிப்பது;

(c) அசையாப்பொருளை ட்ரான்ஸ்பர் செய்யும்விஷயங்கள்;

(d) வருஷாந்த பரிபாலன ரிபோர்ட்;

49. பஞ்சாயத்தின் ஒவ்வொரு சபையிலும் ப்ரெஸிடென்ட் அக்கிராசனம் வகிக்கவேண்டும்; அவர் இராதபட்சத்தில், இது விஷயமாய் அவருக்குள்ள அதிகாரம் 9-வது பிரிவின்படி பஞ்சாயத்துதாரர் எவருக்காவது பிரித்துக்கொடுக்கப்பட்டிருந்தால் அவர் அக்கிராசனம் வகிக்கவேண்டும்; 'இவர்கள் இரண்டுபேரும் இராதபட்சத்தில், அந்த சமயத்தில் அக்கிராசனம் வகிக்கும்படி சபையாரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்துதாரர் அக்கிராசனம் வகிக்கவேண்டும்,

50. பஞ்சாயத்தின் சபைகள் எல்லாவற்றிலும் பொதுஜனங்கள் வந்திருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்; ஆனால், ப்ரெஸிடென்டாவது, அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரராவது-சாதாரணமாய்ப் பொது ஜனங்களாகிலும் குறித்த யாதொரு நபராகிலும் எந்த விஷயத்திலாயினும் வெளியே போய்விட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

51. 27-வது பிரிவில்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு யாதொரு சபையில் பஞ்சாயத்துக்கு முன் வரக்கூடிய விஷயங்களெல்லாம்—சபைக்கு வந்திருந்து வோட்கொடுக்கும் மெம்பர்களின் வோட்டுகளில் பெரும்பான்மையான வோட்டுகளைக்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும்; மேலும், வோட்டுகள் சமமாயிருக்கிற விஷயத்திலே ப்ரெஸிடென்டாகிலும் அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரராகிலும் இரண்டாவது அல்லது (காஸ்டிங்) முடிக்கும்படியான வோட்கொடுக்கக்கூடியவராவார்.

52. யாதொரு சாதாரண சபை கூடுவதற்கு, ஜாரியாயிருக்கும் பஞ்சாயத்துதாரர்களின் சங்கியையில் மூன்றில் ஒருபங்கும் யாதொரு விசேஷ சபை கூடுவதற்கு அதில் பாதியும் க்வோரம் * ஆகும்.

53. யாதொரு சபை கூடுவதற்கு ஏற்படுத்தப்பட்ட காலத்துக்குப் பிறகு அரைமணி நேரத்துக்குள் க்வோரம் ஆஜராகாவிட்டால், வந்திருக்கும் பஞ்சாயத்துதாரர்கள் அதற்குமேலும் காத்துக்கொண்டிருக்க ஒப்புக்கொண்டாலன்றி மற்றப்படி அந்த சபையைத் தள்ளிவைத்துக்கொள்ளவேண்டும்.

54. யாதொரு விசேஷ சபையில் அந்தசபை எதற்காகக் கூட்டப்பட்டதோ அந்தக் காரியத்தை மாத்திரமே நடத்தவேண்டும்.

55. யாதொரு பஞ்சாயத்தின் எந்த தீர்மானமும்-யாதொரு விசேஷசபையிலும் ஜாரியாயிருக்கும் பஞ்சாயத்துதாரர்களின் சங்கியையில் பாதிக்குக் குறையாதவர்களுடையவோட்டுகளால் ஆதரிக்கப்பட்டதாயுள்ள பஞ்சாயத்தின் யாதொரு தீர்மானத்தினாலுமன்றி மற்றப்படி அது செய்யப்பட்ட பிறகு மூன்று மாதத்திற்குள்ளாக திருத்தப்படவுங்கூடாது ரத்துசெய்யப்படவுங்கூடாது.

56. பஞ்சாயத்தின் ஒவ்வொரு சபையிலும் நடக்கும் நடவடிக்கைக்குறிப்புகளை அது காரியத்துக்காக வைத்துவரப்படும் புஸ்தகத்தில் பதிவு செய்யவேண்டியதுமல்லாமல், ப்ரெஸிடென்டாவது அக்கிராசனம் வகிக்கும் பஞ்சாயத்துதாரராவது அதில் கையெழுத்து பண்ணவும் வேண்டும்; மேலும், மேற்படி புஸ்தகத்தை யாதொரு வரியாகிலும், கட்டணமாகிலும் செலுத்தும் எந்த நபரும் ந்யாயமான எல்லாக் காலங்களிலும் இலவசமாய்ப் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

---

* "க்வோரம்" என்பது-சபைக்கு எத்தனைபேர் வந்திருந்தால் நடவடிக்கை நடத்தலாமோ அந்த சங்கியைக் குறிப்பதாகும்.

57. யாதொரு சபை கூடின தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள், அந்த சபையில் நடந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்றை ரெஜிஸ்ட்ராருக்காவது அவரால் குறிப்பிடப்படும் யாதொரு நபருக்காவது அனுப்பவேண்டும்.

58. யாதொரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தின் நடவடிக்கைக் குறிப்புகளையும் ரெகார்டுகளையும் தம்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டியதுமல்லாமல், பஞ்சாயத்து நிச்சயிக்கக்கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேல் அந்த நடவடிக்கைக் குறிப்புகள், ரெகார்டுகள் ஆகிய எவைகளுக்கேனும் நகல்களும் கொடுக்கலாம். 1872-ம் வருஷத்திய, இந்துதேசத்து சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி ப்ரெஸிடென்டானவர் அந்நகல்களில் ஸெர்டிபை செய்யவேண்டும்.

59. ப்ரெஸிடென்டானவர்-டே புக் என்னும் தினசரி கணக்குப்புஸ்தகம் ஒன்றை வைத்து, அதில் அன்றாட வரவுகளையும் செலவுகளையும் பதியவேண்டியது மல்லாமல், பற்றுவரவு நடக்கும் ஒவ்வொரு தினத்திலும் இருப்பு கட்டவும் வேண்டும்.

60. தினசரி கணக்கு புஸ்தகமும் வரிவிதிப்பு புஸ்தகமும் ரசீது புஸ்தகமும் ரெஜிஸ்ட்ரார் உத்தரவுசெய்யும் நமூனைப்படி இருக்கவேண்டும்.

61. பஞ்சாயத்து நிதியை அதி சமீபத்திலுள்ள தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கியில் கட்டிவைக்கவேண்டும்; அல்லது ரெஜிஸ்ட்ராருடைய அங்கீகாரத்தைப் பெற்று அதை யாதொரு பாங்கியில் போட்டு வைக்கலாம், அல்லது யாதொரு கூட்டுத்தொழில் சங்கத்தாரிடத்தில் ஒப்புவிக்கலாம். அல்லது ப்ரெஸிடென்டின் வசத்திலாவது கௌரவமுள்ள வேறே யாதொரு நபரின் வசத்திலாவது வைத்துக்கொள்ளலாம்.

62. பஞ்சாயத்து நிதியிலிருந்து பணம் வாங்குவதற்கான சகல உத்தரவுகள் அல்லது செக்குகளிலும், ப்ரெஸிடென்டாவது 9-வது பிரிவின்படி ப்ரெஸிடென்டானவர் இந்த அதிகாரத்தை யாருக்குப் பிரித்துக்கொடுத்திருக்கிறாரோ அந்த பஞ்சாயத்துதாரராவது கையெழுத்து பண்ணவேண்டும்; மேலும், 61-வது விதியின்பிரகாரம் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பஞ்சாயத்துநிதி எதன்வசத்திலிருக்கிறதோ அந்த பாங்காகிலும் கூட்டுத்தொழில் சங்கமாகிலும் அல்லது அது யார் வசத்திலிருக்கிறதோ அந்த நபராகிலும் அந்த நிதியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளும்படி அப்படி கையெழுத்து செய்யப்பட்டிருக்கிற சகல உத்தரவுகள் அல்லது செக்குகளுக்கும் பஞ்சாயத்தைச் சேர்ந்ததாயிருக்கும் தொகையிலிருந்து கொடுக்கக்கூடியமட்டில் பணம் கொடுக்கவேண்டும்.

63. பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படும் சகல தொகைகளுக்கும் ஆதாரமாக சரியான வௌச்சர்கள் (ஆதரவுச்சீட்டுகள்) இருக்கவேண்டும்.

64. பஞ்சாயத்தின் ஒவ்வொரு மாதாந்தர சபையிலும், ரசீது புஸ்தகங்கள், முந்திய மாதாந்த சபை கூடின தேதிமுதல் கொடுக்கப்பட்ட சகல தொகைகளுக்கும் ஆதாரமாகவுள்ள வௌச்சர்கள் ஆகிய இவைகள் சகிதமாய் தினசரி கணக்குப் புஸ்தகத்தையும், தபாலாபீஸ்ஸேவிங்ஸ்பாங்க் பாஸ் புஸ்தகம் அல்லது பஞ்சாயத்தின் பாங்கர் வசத்தில் அதைச்சேர்ந்ததாயுள்ள பண இருப்பைக்காட்டும் அம்மாதிரியான ரெகார்டையும் ப்ரெஸிடென்ட் வசத்தில் இருக்கும் ரொக்கத்தையும் பஞ்சாயத்துக்குமுன் ஹாஜர்படுத்தவேண்டும். பஞ்சாயத்தால் ஜாரி செய்யப்படும் வரவுசெலவுகளின் கோஷ்வாரா ஒன்றை சபையின் நடவடிக்கைக் குறிப்புகளில் பதிந்து கொள்ளவேண்டும்

65. பஞ்சாயத்து நிதியின் வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கைசெய்வதற்கு ஆடிட்டர் ஒருவரை ரெஜிஸ்ட்ரார் நியமிக்கவேண்டும்.

66. ப்ரெஸிடென்டானவர் முந்திய அரசிறை (பைனான்ஷியல்) வருஷத்தில் நடந்த பஞ்சாயத்தின் வேலையைக்குறித்த ரிபோர்ட் ஒன்றை வருஷாவருஷம் தயார்செய்து, அது விஷயமாய்ப் பஞ்சாயத்து ஜாரிசெய்யும் தீர்மானம் சகிதமாக அதை ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். மேற்படி ரிபோர்ட்டை ஜூன்௴ 1௳-க்கு மேற்படாமலும் ரெஜிஸ்ட்ராரால் குறிப்பிடக்கூடிய உத்தியோகஸ்தர் அல்லது நபர் மூலமாகவும் அனுப்பவேண்டும்.

67. டி ஆக்டின்படி தீர்ப்பு செய்யவேண்டியவைகளாயிருக்கும் எந்த விஷயங்கள் சம்பந்தமாகவாவது எந்த இரண்டு பஞ்சாயத்துக்குள்ளாகிலும் யாதொரு அபிப்பிராயபேதமோ விவாதமோ ஏற்பட்டிருக்கிறபட்சத்திலே, அப்படிப் பட்ட அபிப்பிராயபேதம் அல்லது விவாதவிஷயமாய் ரெஜிஸ்ட்ரார் விசாரணை செய்யலாம்; மேலும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளில் ஏதாவது ஒன்று விண்ணப்பம் செய்துகொண்டால் அவர் அந்தப்படியே செய்யவேண்டும். அதன்மேல் அவர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

20—4—23௳-யில் பிறந்த நெ. 941-வது கவர்ன்மெண்ட் உத்தரவு.

வரிகள், கட்டணங்கள் ஆகிய இவைகளின் பாக்கியை யாதொரு கிராம பஞ்சாயத்துக்கு வரிகள் அல்லது கட்டணங்களைச் செலுத்தத் தவறிப்போன நபருடைய அசையும்பொருளை ஜப்திபண்ணி விற்பனைசெய்து இன்ன மாதிரி கிராமப் பெரியதனக்காரர் வசூலிக்கவேண்டுமென்பதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கான விதிகள்.

1. இந்த விதிகளை கிராம பஞ்சாயத்து வசூலைக்குறித்த விதிகளென்று சொல்லலாம்.

2. வசூலிக்கும் வேலை கிராமப் பெரியதனக்காரரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தால், பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டானவர் (அக்கிராமசனுக்பெதியானவர்)-வரிகள் அல்லது கட்டணங்கள் விதிக்கப்பெற்றிருப்பவர்களில் ஜாபிதா ஒன்றை இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் 1-ம் நமூனைப்படி அந்தப் பெரியதனக்காரருக்குச் சவதரிக்கவேண்டும். வரிவிதிப்பைப் புனராலோசனைசெய்து திருத்தவேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில், ப்ரெஸிடென்டானவர்-பஞ்சாயத்தார் அவைகளின்மேல் பிறப்பிக்கும் உத்தரவுகளை, அவை பிறப்பிக்கப்பட்டவுடனே கிராமப் பெரியதனக்காரருக்குத் தெரிவிக்கவேண்டும்.

3. வரிகள் அல்லது கட்டணங்களைச் செலுத்தத் தவறிப்போனவர்களிடமாத்திரம் அந்த வரிகளையும் கட்டணங்களையும் வசூலிக்கும் காரியத்துக்காக கிராமப் பெரியதனக்காரரின் உதவியைக் கோரினால், பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டானவர்-வரிகள் அல்லது கட்டணங்களைச் செலுத்தத் தவறிப்போனவர்களின் ஜாபிதா ஒன்றை இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் 1-ம் நமூனைப்படி அவருக்குச் சவதரிக்கவேண்டும்.

4. 1-ம் நமூனைப்படிக்கான ஜாபிதாக்களினால் கிராமப் பெரியதனக்காரருக்கு ஜப்திசெய்ய அதிகாரம் ஏற்படும்.

5. சந்தர்ப்பத்துக்கேற்றபடி வரிவிதிப்பைக் குறித்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்தாகிலும், புனராலோசனை செய்யும்படி கொடுத்துக்கொள்ளப்பட்ட மனுவின்மேல் பஞ்சாயத்தார் உத்தரவு பிறப்பிக்கிற தேதியிலிருந்தாகிலும் முப்பது தினங்களுக்குள் ஷை வரி அல்லது கட்டணம் முழுவதுமாவது அதில் யாதொரு பாகமாவது செலுத்தப்படாவிட்டால், அந்த வரித்தொகையாயினும் அதில் செலுத்தப்படாமலிருக்கும் பாகமாயினும் பாக்கியாகக் கருதப்படும்; மேலும், ஷை தொகை செலுத்தத் தவறிப்போனவருடைய அசையும்பொருளை அதற்குப்பிறகு எந்தக்காலத்திலாவது ஜப்திபண்ணி விற்பனைசெய்வது மூலமாய் அதை வசூலிக்கலாம்.

6. கிராமப் பெரியதனக்காரர் ஜப்திசெய்யப்போகும் தினத்தில், அவர்-வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவரின் பெயரையும், எவ்வளவு பாக்கித்தொகைக்காக ஜப்தி செய்யப்படக்கூடுமோ அந்தத் தொகையையும் பாக்கி செலுத்தப்படவேண்டியதான தேதியையும் குறிப்பிட்டு டிமாண்ட் எழுதி அதில் தாமே கையெழுத்துபோட்டு ஷை வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவருக்கு அதைக்காட்டவேண்டும். ஷை ஆக்ட் 31-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் நிர்ணயித்திருக்கும் அபராதம் சகிதமாக பாக்கித்தொகை உடனே செலுத்தப்படாவிட்டால், கிராமப் பெரியதனக்காரர் - ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் ஜாபிதாவையும் தாம் அதைப்போட்டு வைக்கப்போகும் அல்லது வைத்துவைக்கப்போகும் இடத்தின் பெயரையும் ஷை எழுத்து மூல

மான டிமாண்டின் நகலின்பேரில் எழுதி அதை வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவரிடத்தில் கொடுக்கவேண்டும். ஜப்திசெய்ததிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் கிராமப் பெரியதனக்காரர் ஷை ஜாபிதாவுக்கு நகல் ஒன்றை கிராமபஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டுக்கு அனுப்பவேண்டும்.

7. மேலும், ஷை பாக்கித்தொகையானது அபராதம் ஸஹிதமாகவும் ஜப்தி செய்ததற்குப் பிடித்த ஸகல செலவுகள் ஸஹிதமாகவும் ஜப்தி செய்யப்பட்டதிலிருந்து ஏழு தினங்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஜப்திசெய்யப்பட்டசொத்து ஏல மூலமாய் விற்பனை செய்யப்படுமென்றும் டிமாண்ட் நகலின்பேரில் மேலே கண்டபடி எழுதியிருப்பதில் கண்டிருக்கவேண்டும்.

8. வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவர் இராவிட்டால், ஷை டிமாண்டின்மேல் எழுதப்பட்டதற்கு நகல் ஒன்றை, அவர் ஸாதாரணமாய் வாசம் செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்கக்கூடியவளைவிலாவது ஒட்டவேண்டும் அல்லது விட்டுவைக்கவேண்டும்.

9. ஷை பாக்கித் தொகையானது அபராதம் ஸஹிதமாகவும் ஜப்திசெய்வதற்குப் பிடித்த ஸகல செலவுகள் ஸஹிதமாகவும் ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஏழு தினங்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், கிராமப் பெரியதனக்காரர் ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக ஒரு தேதியை நிஷ்கரிஷை செய்யவேண்டும்; மேலும், அவர்-அந்தத் தேதிக்குக்குறைந்தது ஸ்பஷ்டமாய் மூன்று தினங்களுக்கு முன்னதாக, ஷை விற்பனையைக்குறித்து இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் 2-ம் நமூனாப்படி விளம்பரம் ஒன்றைப் பிரசித்தம் செய்யவேண்டும். அந்த விளம்பரத்தைக் கிராமபஞ்சாயத்தின் ஆபிஸிலும் கிராமச்சாவடியிலும் கிராமத்தில் தண்டோரா மூலமாகவும் பிரசித்தம் செய்யவேண்டும்.

10. வரி அல்லது கட்டணம் செலுத்தத்தவறிப்போனவர் தம்முடைய சொத்து ஜப்தி செய்யப்பட்டதற்குப் பிறகும் விற்பனைக்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்கு முன்பும் ஜப்தி செய்வதற்கு அவசியமாய்ப் பிடித்த ஸகலசெலவுகள் ஸஹிதமாகவும் டிமாண்ட் செய்யப்பட்ட தொகையைச் செலுத்துவதாகச் சொன்னால், கிராமப் பெரியதனக்காரர்-அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு, ஷை சொத்தை உடனே விடுதலை செய்யவேண்டும்.

11. கிராமப் பெரியதனக்காரர்-ஜப்தி செய்யப்பட்ட எவையேனும் எருதுகள் அல்லது கால்நடைகளிடமிருந்து வேலை வாங்கவுங்கூடாது. அப்படிப்பட்ட எந்த ஸாமான்களையாகிலும் வஸ்துக்களையாகிலும் உபயோகிக்கவுங்கூடாது; அவர் கால்நடைகளுக்காவது ஜீவஜந்துக்களுக்காவது அவசியமான தீனி போடவேண்டும்; மேலும், அந்தப்படி செய்வதற்காகப் பிடிக்கும் செலவானது-ஜப்தி செலவுகளில் சேர்த்திருப்பதாகக் கருதப்பட்டு, ஷை வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

12. ஜப்தி செய்யப்பட்ட சொத்தைக் 'கிரமமாய்ப் பாதுகாப்பதற்கு அவசியமாயுள்ள முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யப்படாமற்போனது காரணமாகவாகிலும் அதனிடமிருந்து அக்கிரமமாய் வேலை வாங்ினது அல்லது அதை அக்கிரமமாய் உபயோகித்தது காரணமாகவாகிலும் அது திருடிக்கொண்டு போகப்பட்டாலும் போக்கடிந்துபோனாலும் சேதமடைந்தாலும், அந்த நஷ்டம் அல்லது சேதத்தின் தொகை கிராமப் பெரியதனக்காரரிடமிருந்து வசூலிக்கப் படத்தக்கதாகும். அந்தப்படி வசூலிக்கப்படும் தொகையை, பஞ்சாயத்தாருக்குச் செலுத்தவேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் வசூலிப்பதற்காக அவருக்குச் சேரவேண்டிய கம்மிஷன் ஏதாகிலுமிருந்தால் அதிலிருந்து சாத்தியமான மட்டில் வரப்பற்றிக்கொள்ளவேண்டும்.

13. ஜப்தி செய்யப்படும் சொத்தின் மதிப்பானது சேரவேண்டிய பாக்கி அபராதம் ஆகிய இவைகளின் தொகைக்குக் கூடுமானவரையில் சமமாயிருக்க வேண்டும்.

14. சூரியோதயத்துக்குப் பிறகும் சூரியாஸ்தமனத்துக்கு முன்பும் ஜப்தி செய்யவேண்டுமேயன்றி மற்றப்படி ஜப்தி செய்யக்கூடாது.

15. வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவருக்குச் சொந்தமானதாய் உள்ளே வைத்து வைக்கப்பட்டிருக்கும் சொத்தை ஜப்திசெய்யும் காரியத்துக்காக, கிராமப்பெரியதனக்காரர் யாதொரு லாயம், மாட்டுத்தொழுவம், களஞ்சியம், கிடங்கு, வெளிவீடு அல்லது வேறே கட்டிடத்தை பலவந்தமாய்த் திறப்பது சட்டசம்மதமாகும்; மேலும், அந்தக் காரியத்துக்காக அவர் வெளிக் கதவு திறக்கப்பட்டிருக்கும் யாதொரு குடியிருப்பு வீட்டில் பிரவேசித்து அந்தக் குடியிருப்பு வீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவை உடைத்துத் திறக்கலாம்; ஆனால், கீழே 16-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, ஷை. கிராமப்பெரியதனக்காரர் அப்படிப்பட்ட குடியிருப்பு வீட்டில் அந்தப்புரமாக வாவது ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கான இடமாகவாவது பிரத்தியேகமாய் ஏற் படுத்தியிருக்கும் யாதொரு அறையை உடைத்துத் திறப்பதாகிலும் அதில் பிரவே சிப்பதாகிலும் எப்போதும் சட்டசம்மதமாகமாட்டாது.

16. வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவருடைய சொத்தானது வெளிக்கதவு மூடப்பட்டிருக்கக்கூடிய யாதொரு குடியிருப்பு வீட்டுக்குள்ளாவது, ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டு தேசாசாரப்படி அந்தரங்கமானவையென்று கருதப்படும் எந்த அறைகளுக்குள்ளாவது வைத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று கிராமப் பெரியதனக்காரர் எண்ணுவதற்கு நியாயமிருந்தால் அந்த கிராமப் பெரியதனக்காரர் அந்த விஷயத்தைப் பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும். அதன்மேல் ப்ரெஸிடெண்டானவர் அந்த இடத்துக்குத் தாமே போகவேண்டும், அல்லது பஞ்சாயத்தாரர் ஒருவரைப் போகும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். ஷை. ப்ரெஸிடெண்ட் அல்லது

பஞ்சாயத்துதாரரின் முன்னிலையில், கிராமப் பெரியதனக்காரர்-அந்தப்புரத்தைத் தவிர வேறே யாதொரு அறையின் கதவை எம்மாதிரி உடைத்துத்திறக்கலாமோ அம்மாதிரியே மேற்படி குடியிருப்பு வீட்டின் வெளிக்கதவையும் பலவந்தமாய்த்திறக்கலாம். மேலும், கிராமப் பெரியதனக்காரர்-அந்தப்புரத்துக்குள் இருக்கும் ஸ்திரீகளை அப்புறப்படுத்துவதற்காக கிரமப்படி நோடிஸ் கொடுத்தபிறகும், (அவர்கள் கோஷா ஸ்திரீகளாயிருந்தால்) தக்க மாதிரியாய் அவர்களை அப்புறப்படுத்துவதற்காக வழிவகைகள் ஏற்படுத்திக்கொடுத்தபிறகும், மேற்படி அந்தப்புர அறைகளில் வைத்துவைக்கப்பட்டிருக்கும் வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவருடைய சொத்தை ஜப்தி செய்யும் காரியத்துக்காக மேற்படி ப்ரெஸிடெண்ட் அல்லது பஞ்சாயத்துதாரரின் முன்னிலையில் அந்த அறைகளில் பிரவேசிக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட சொத்து அகப்படும்பட்சத்தில் அதை உடனே அந்த அறைகளிலிருந்து அப்புறப்படுத்தி, அதன்பிறகு முன்னே அந்த அறைகளில் இருந்தவர்கள் அங்கே தாராளமாய் இருக்கும்படியாக அவைகளை விட்டுவிடவேண்டும்.

17. உத்தேசிக்கப்பட்டிருக்கும் விற்பனையைக்குறித்து 9-வது விதியின்படி விளம்பரம் பிரசித்தம் செய்வதற்குமுன், கிராமப்பெரியதனக்காரர்-விற்பனை செய்யப்போகும் சொத்தின் ஜாபிதா ஒன்றையும், ஜப்தி செய்யப்பட்ட சொத்து இன்ன இடத்திலும் இன்ன தினத்திலும் இன்ன மணி நேரத்திலும் விற்பனை செய்யப்படுமென்று குறிப்பிட்டு ஒரு நோடிஸ் எழுதி அதையும், வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவருடைய வீட்டின் வெளிக்கதவிலாவது சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்கக்கூடிய ஊரின்மேலாவது ஒட்டும்படிச் செய்யவேண்டும். மேற்படி நோடிஸ் அந்தப்படி ஒட்டப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினம் கழிகிறவரையில் விற்பனை ஏதுவும் நடக்கக்கூடாது.

ஆனால், ஜப்தி செய்யப்பட்ட சொத்து சீக்கிரமாகவும் இயற்கையாகவும் அழிந்துபோகக்கூடியதாயிருந்தால், கிராமப் பெரியதனக்காரர்-அந்த சொத்து ஜப்தி செய்யப்பட்டபிறகு எந்தக்காலத்திலாவது, பாக்கித்தொகை அதற்கு முன்னதாகச் செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அந்தசொத்தை விற்பனைசெய்துவிடலாம்.

18. கிராமப் பெரியதனக்காரர் யாதொரு சொத்து ஜப்தி செய்யப்பட்டதைக்குறித்து ஜப்தி செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு ஒரு வாரத்துக்குள் தம் மிடத்தில் செய்துகொள்ளப்படும் எவையேனும் ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்; மேலும், அவர்-அதைப்பற்றி விசாரணை செய்தாகிறவரையில் விற்பனையைத் தள்ளிவைக்கலாம். ஜப்தி செய்யப்பட்ட சொத்து ஜப்தி செய்யப்படுவதற்குள்ளானதல்லவென்று அவர் தெரிந்து திருப்தியடைந்தால், அவர் அதற்கு பாத்தியதையுள்ளவராகத் தோற்றும் நபருக்கு அதை வாபஸ் செய்துவிடவேண்டும்; அல்லாமலும், அவர் 6-வது விதியின்படி மறுபடியும் நடவடிக்கை நடத்தலாம்.

19. விற்பனைக்காக நியமிக்கப்பட்ட காலத்தில், கிராமப் பெரியதனக்காரருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி பிரஸ்தாபசொத்தை ஒரு கூறுகவாவது பல கூறுகளாகவாவது வைத்து, மற்றவர்களைக் காட்டிலும் அதிக விலைக்குக் கேட்கிறவருக்கு விற்றுவிடவேண்டும். பாக்கித்தொகை, அபராதம் ஆகிய இவைகளின் மொத்தத்துக்கு அதிகமான தொகைக்கு ஷை சொத்து விற்கப்பட்டால், ஜப்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் பிடித்த செலவைக் கழித்துக்கொண்ட பிறகு மிகுதி நிற்கும் தொகையை வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப் போனவருக்கு கொடுத்துவிடவேண்டும்.

20. ஷை சொத்தின் கிரயத்தை, விற்பனைக் காலத்திலாவது அதற்குப் பிறகு ஒரு வாரத்துக்கு மேற்படாமல் கிராமப் பெரியதனக்காரர் நியமிக்கக்கூடியபடி சீக்கிரத்திலாவது ரொக்கத் தொகையாகச் செலுத்திவிடவேண்டும்; மேலும், கிரயத்துக்கு வாங்குகிறவர் சொத்துக்காகச் செலுத்தவேண்டியதொகை முழுவதையும் செலுத்தியாகிறவரையில் அதில் எவ்வளவையும் கொண்டுபோக அவருக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. கிரயத்துக்கு வாங்குகிறவர் கொடுக்கப் பட்டிருக்கும் கால அளவுக்குள் கிரயத்தொகையைச் செலுத்தத் தவறிப்போனால், ஷை சொத்தை மறுபடியும் விற்பனை செய்யவேண்டும்; மேலும், சொத்தைக் கிரயத்துக்கு வாங்கி தொகை செலுத்தத் தவறிப்போகிறவர் - மறுபடியும் விற்பனை செய்வதனால் ஏற்படும் யாதொரு நஷ்டத்தையும் அதற்காகப் பிடிக்கும் செலவுகளையும் செலுத்துவதற்குள்ளாவார். பிரஸ்தாபசொத்தை இரண்டாவதுமுறை விற்பனைசெய்யும்போது அதற்கு முதல்முறை கிடைத்ததைக்காட்டிலும் உயர்ந்த விலை கிடைத்தால், வித்தியாசமாயுள்ள தொகையாவது அதிகமாயுள்ள தொகையாவது எந்த நபரின்பொருட்டு மேலேகண்டபடி முதலில் விற்பனை செய்யப்பட்டதோ அந்த நபருடைய சொத்தாகும்.

21. கிராமப் பெரியதனக்காரர் நேராகவாவது, நேராகவல்லாமல் மற்றப் படியாவது அப்படிப்பட்ட யாதொரு விற்பனையில் எந்த சொத்தையும் கிரயத்துக்கு வாங்கக்கூடாது.

22. இந்த விதிகளின்படி கிராமப் பெரியதனக்காரரால் வசூலிக்கப்படும் சகல பாக்கித்தொகைகளையும் அபராதங்களையும், அந்தப்படி வசூலிக்கப்பட்டதிலிருந்து மூன்று தினங்களுக்குள் பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டினிடத்திலாவது பஞ்சாயத்தார் நியமிக்கக்கூடிய வேறே யாதொரு நபரிடத்திலாவது செலுத்திவிடவேண்டும்.

1-ம் நெ. நமூனா.

வரி அல்லது கட்டணம் விதிக்கப்பெற்றவர்களின் அல்லது அவைகளைச் செலுத்தத் தவறிப்போனவர்களின் ஜாபிதா.

(1) வரிசைக்கிரமமான நம்பர்.

(2) வரி அல்லது கட்டணம் விதிக்கப்பெற்றவரின் அல்லது அவைகளைச் செலுத்தத் தவறிப்போனவரின் பெயர்.

(3) விதிக்கப்பட்ட வரி அல்லது கட்டணம்.

(4) வரி அல்லது கட்டணத்தொகை, அல்லது பாக்கியிருக்கும் வரி அல்லது கட்டணத்தொகை.

(5) வரி அல்லது கட்டணம் இன்ன தேதிக்குள் செலுத்தப்படத்தக்கதாகு மென்பது, அல்லது பாக்கித்தொகை இன்னதேதியில் செலுத்தவேண்டியதாயிற் றென்பது.

2-ம் நே. நமூனா.

இதனால் அறிக்கை செய்யப்படுகிற தென்னவென்றால்,—

தாலூக்காவைச் சேர்ந்த கிராமத்திலிருக்கும் வரி அல்லது கட்டணம் செலுத்தத் தவறிப்போனவராகிய இடமிருந்து கிராம பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய வரிகள், கட்டணங்கள் முதலியவைகளின் பாக்கிக்காக அவருடைய அடியிற்கண்ட சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது; ஷை பாக்கித்தொகை அபராதம் சகிதமாகவும் இதர செலவுகள் சகிதமாகவும் முன்னதாகச் செலுத்தப் படாத பட்சத்திலே, மேலேகண்ட சொத்து 192 -ம் ௵ ௴ உ கிழமை யன்றைக்காவது விற்பனை தள்ளிவைக்கப்படக்கூடிய வேறே தேதியன்றைக்காவது ஷை கிராமத்தில் ன் வீட்டுக்குச் சமீபத்தில் பஹிரங்கமான ஏல மூலமாய் விற்பனை செய்யப்படும். விற்பனை காலை 11-மணிக்கு ஆரம்பிக்கும்; மேலும், மேற்படி சொத்தானது மற்றவர்களைக் காட்டிலும் அதிக தொகைக்குக் கேட்கிறவருக்கு நிர்ப்பந்தம் ஒன்றுமில்லாமலே ரொக்கத் தொகைக்குக் கொடுத்துவிடப்படும். சொத்தைக் கிரயத்துக்கு வாங்குகிறவர் அந்த சொத்துக்காகச் செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் செலுத்தி யாகிறவரையில் அதில் எவ்வளவையும் கொண்டுபோக அவருக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

கிரயத்துக்கு வாங்குகிறவர் கொடுக்கப்பட்டிருக்கும் கால அளவுக்கு கிரயத் தொகையைச் செலுத்தத் தவறிப்போனால், மேற்படி சொத்து மறுபடியும் விற்பனை செய்யப்படும்; மேலும், சொத்தைக் கிரயத்துக்கு வாங்கி தொகை செலுத்

தத் தவறிப்போகிறவர் மறு விற்பனையினால் ஏற்படும் யாதொரு நஷ்டத்தையும் அதற்காகப் பிடிக்கும் செலவுகளையும் செலுத்துவதற்குள்ளாவார்.

இடம்,

கிராமப் பெரியதனக்காரர்.

தேதி,

[11—8—23உயில் பிறந்த நே. 1347-வது கவர்ன்மெண்ட் உத்தரவு.]

கிராம பஞ்சாயத்தின் ஒவ்வொரு ப்ரெஸிடெண்டும் ஜனனமரணங்களைக் குறித்து கிராமப்பெரியதனக்காரர் அனுப்பும் மாதாந்திர ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளைப் பஞ்சாயத்தின் அடுத்த சபையில் அதற்குமுன் வைக்கவேண்டும். பஞ்சாயத்தார் - அந்த ரிடர்ன்கள் சரியாயிருக்கின்றனவா வென்பதைக்குறித்தும், சரியாயிராமற் போய்விட்டால், அவைகளில் இன்ன திருத்தங்கள் செய்யவேண்டு மென்பதைக்குறித்தும் ஒரு ஸெர்டிபிகேட் எழுதி அது சகிதமாக அவைகளைத் தாசில்தாரருக்கு அனுப்பவேண்டும்.

[8—10—23உயில் பிறந்த நே. 1424. கவர்ன்மெண்ட் உத்தரவு.]

திரவிய சகாயம் பெறும் மூலாதார பாடசாலைகளைப் பார்வையிடும் விஷயத்தில் கிராம பஞ்சாயத்துகள் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

1. (a) பஞ்சாயத்தார் தங்களுடைய அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில் ஆண்பிள்ளைகளுக்காகவும் பெண்பிள்ளைகளுக்காகவும் ஏற்பட்டிருக்கும் திரவிய சகாயம் பெறும் மூலாதார பாடசாலைகள் விஷயமாய் பாடசாலைக் கம்மிட்டி மூலமாக மேல்விசாரணை செலுத்தவேண்டும். இந்தக் கம்மிட்டியில் பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டும் இதர மெம்பர்களில் இரண்டு பேருக்குக் குறையாமலும் நாலுபேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(b) ப்ரெஸிடெண்டைத் தவிர இதர கம்மிட்டி மெம்பர்களை வருஷத்துக் கொருமுறை பஞ்சாயத்தார் தெரிந்தெடுக்கவேண்டும்; மேலும், சென்னபட்டணம் கிராம பஞ்சாயத்து ஆக்ட் 21-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி, பஞ்சாயத்துதாரர்களாயிராத நபர்களும் மெம்பர்களாயிருக்கலாம்; ஆனால், கிராமத்திலுள்ள மூலாதார பாடசாலைகளில் வேலையாயிருக்கும் உபாத்தியாயர்கள் மேற்படி கம்மிட்டியில் மெம்பர் ஸ்தானம் வகிக்க அர்ஹர்களாக மாட்டார்கள்.

(c) பஞ்சாயத்து ப்ரெஸிடெண்ட் மேற்படி கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியாயிருந்து வேலை பார்ப்பார்.

2. பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட விஸ்தீரணத்திலுள்ள திரவிய சகாயம் பெறும் எல்லா மூலாதார பாடசாலைகளையும் கம்மிட்டியார் மாதத்துக் கொருமுறை பார்வையிட்டு, அந்தப்படி பார்வையிடும் காலங்களில் பாடசாலைகளில் நடத்தப்படும் வேலையில் இருப்பதாகத் தெரியவந்த ஒழுங்கீனங்களையும், அதைச் சீர்திருத்துவதற்காக அபிப்பிராயக்குறிப்புகள் எவையேனும் எழுதுவதாயிருந்தால் அவைகளையும் பாடசாலைகளில் பார்வையிடுகிறவர்கள் குறிப்பெழுதுவதற்காக வைத்திருக்கும் புத்தகத்தில் எழுதிவைக்கவேண்டும்.

3. (i) அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி அபிப்பிராயக் குறிப்புகள் எழுதிவைக்க கம்மிட்டியாருக்கு அதிகாரமுண்டு:—

(a) பாடசாலைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் இடவசதி இப்படிப்பட்டதென்பது;

(b) ஒழுக்க முறையும் நிருமாணமும்;

(c) பாடசாலை வேலைசெய்த தினங்களின் சங்கியையும், வேலைசெய்யும் தினங்களில் பாடசாலைகளின் வேலை ஆரம்பமாவதும் முடிவதும், உபாத்தியாயர்களின் ஹாஜரும்;

குறிப்பு.—இந்தத் தலைப்பின்கீழ், லௌகிக போதனைக்காக ஏற்படுத்தியிருக்கும் பாடசாலை தினத்தை அல்லது அதன் பாகத்தை அளவு கடந்து குறைத்திருக்கிறதா என்பதைக் கம்மிட்டியார் கவனிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(d) வைசூரி காறுதபடி பாதுகாப்பு செய்யப்பட்டிராத மாணாக்கர்கள் வந்திருப்பது.

(ii) மேலும், மேற்படி கம்மிட்டியார்—

(a) ரெஜிஸ்டரிலுள்ள மாணாக்கர்களின் மொத்தசங்கியையானது என்ன ஜனத்தொகையை உத்தேசித்துப் பாடசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த ஜனத்தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தகுதியானபடி இருக்கிறதா என்பதையும்,

(b) ஒவ்வொரு வகுப்பிலும் ஹாஜராயிருக்கும் பிள்ளைகளின் சங்கியையானது அந்த வகுப்பிலுள்ள பிள்ளைகளின் மொத்த சங்கியையானது ஒப்பிட்டுப் பார்க்கும்போது திருப்திகரமாயிருக்கிறதா என்பதையும்,

(c) ரெஜிஸ்டர்களும் ரெகார்டுகளும் சரியாகவும் பிழையின்றியும் வைக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும்,

(d) ஜனங்களின் இஷ்டத்தை அனுசரித்த முறைப்படி பாடசாலை நடத்தப்பட்டு வருகிறதா என்பதையும்,

கவனிக்கவேண்டும்.

4. வித்யா இலாகாவைச்சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராவது ஜில்லா கல்விச்சபையின் ப்ரெஸிடெண்டாவது அந்த சபையைச்சேர்ந்த யாதொரு மெம்பராவது பாடசாலையைப் பார்வையிடவரும் காலத்தில் கமிட்டி மெம்பர்களாகிலும் அவர்களில் எத்தனைபேர் வந்திருக்கக்கூடுமோ அத்தனைபேராகிலும் பாடசாலைக்கு வந்திருக்கவேண்டும்.

5 பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் - திரவிய சகாயத்துக்காக சிபாரிசுகள் செய்யும்போது பஞ்சாயத்துக் கமிட்டியாருடன் கலந்து ஆலோசிப்பதுமல்லாமல், பார்வையிடுகிறவர்கள் குறிப்பெழுதுவதற்கென்று வைத்திருக்கும் புத்தகத்தில் மேற்படி கமிட்டியாரால் எழுதிவைக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயக் குறிப்புகளை முக்கியமாய் கவனிக்கவும் வேண்டும். மேலும், பஞ்சாயத்து கமிட்டியாரால் கவனித்து எழுதிவைக்கப்பட்டிருக்கும் பிரமாதமான ஒழுங்கீனங்கள் எவையேனும் இருந்தால் அவைகளைப்பற்றி ஜில்லாக் கல்விச்சபையார் முக்கியமாய் கவனிக்கும்படியாக பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

[9—4—1924-டியில் பிறந்த நே. 928-வது கவர்ன்மெண்ட் உத்தரவு.]

சமுதாயப் புறம்போக்குகள் விஷயமாய் கிராம பஞ்சாயத்துகள் மேல்விசாரணை செய்வதற்கான விதிகள்.

1. யாதொரு பஞ்சாயத்தானது தன்னுடைய அதிகார வரம்புக்குள் இருக்கும் எந்த சமுதாயப் புறம்போக்கின் மேல்விசாரணையையாகிலும் ஏற்றுக்கொள்ள விரும்பினால், அது அம்மாதிரி பொருள்படும்படியாகத் தீர்மானம் ஒன்றை ஜாரிசெய்யவேண்டும். அந்தத் தீர்மானத்தில்—

(a) மேற்படி புறம்போக்கின் ஸர்வே நம்பர் அல்லது நம்பர்களும், எல்லைகளும், விஸ்தீர்ணமும்,

(b) எந்தக் காரியத்துக்காக அந்தப் புறம்போக்கு உபயோகிக்கப்படுகிறதோ அந்தக் காரியமும்,

(c) அந்தப் புறம்போக்கில் வளர்ந்திருக்கும் மரங்களின் ஜாபிதாவும் விவரமும் கண்டிருக்கவேண்டும்.

2. மேற்படி தீர்மானத்துக்கு நகல் ஒன்றை ரெவினியு டிவிஷன் ஆபீஸருக்கு அனுப்பவேண்டும். அவர் அதைச் சரிபார்த்தபிறகு தம்முடைய அபிப்பிராயக் குறிப்புகள் சகிதமாக ஜில்லா கலெக்டருக்கு அனுப்பவேண்டும். ஜில்லா கலெக்டர் அந்த ட்ரான்ஸ்பரை அங்கீகரிக்கிற பட்சத்திலே, மேற்படி தீர்மானத்தைத் தாம் அங்கீகரித்திருப்பதைப்பற்றி ஜில்லாகெஜெட்டில் அறிக்கையிடலாம்;

அந்தப்படி அறிக்கையிடும்போது இன்னதேதியிலிருந்து மேற்படி ட்ரான்ஸ்பர் செய்யப்படவேண்டுமென்பதைக் குறிப்பிடவேண்டும். அந்தப்படி அறிக்கையிடப்பட்ட புறம்போக்குகளின் ஜாபிதா ஒன்றைப் பஞ்சாயத்தார் வைத்துவரவேண்டும். ஜில்லா கலெக்டரானவர்-பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கும் எந்தப் புறம்போக்கையாகிலும் அந்தப் பஞ்சாயத்தின் மேல் விசாரணையிலிருந்து ஏன் நீக்கிவிடக்கூடாதென்பதற்குக் காரணம்காட்ட மேற்படி பஞ்சாயத்துக்கு அவகாசம் கொடுத்த பிறகு, ஜில்லா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாய் மேற்படி புறம்போக்கைப் பஞ்சாயத்தின் மேல்விசாரணையிலிருந்து நீக்கிவிடலாம்.

3. ஜில்லா கலெக்டர் வேறே விதமாய்க் கட்டளையிடும் விஷயங்களிலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட புறம்போக்குகளில் வளர்ந்திருக்கும் பட்டா மரங்களைத் தவிர வேறே மரங்களின் பலனை அனுபவிக்கவும், அப்படிப்பட்ட புறம்போக்குகளில் காற்றினால் விழுந்துவிடும் மரங்கள், பழங்கள் முதலியவைகளையும் உலர்ந்துபோகும் மரங்களையும் விற்பனை செய்வதனால் கிடைக்கும் தொகையைப் பெறவும் பஞ்சாயத்துக்கு பாத்தியதை உண்டு; ஆனால், ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட புறம்போக்குகளில் வளர்ந்திருப்பவையாய் முந்திய ஐந்து வருஷங்களில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த மரங்களின் சராசரி குத்தகை மதிப்புத்தொகையைக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்துவதாக பஞ்சாயத்து உறுதிசெய்து கொடுக்க விருப்பமுடையதாயிருக்கிற பட்சத்தில் மாத்திரமே அப்படிப்பட்ட பாத்தியதை உண்டாகும்.

4. யாதொரு சமுதாயப் புறம்போக்கில் வளர்ந்திருக்கும் மரங்களின் விஷயமாய்ப் பஞ்சாயத்து மேல்விசாரணைசெய்து வருகிறவரையில், ஏற்கனவே பட்டாவின்பேரில் கொடுக்கப்பட்டிராமல் அந்தப் புறம்போக்கிலுள்ள பழம் உற்பத்தியாகும் எந்த மரங்களையும் பஞ்சாயத்தின் சம்மதியில்லாமல் பட்டாவின்பேரில் கொடுக்கக்கூடாது.

[15—9—1925-ல் பிறந்த 3323-ம் நெ. கவர்ன்மெண்ட் உத்தரவு.]

எலெக்ஷன் சம்பந்தமான விவாதங்களை இன்ன அதிகாரி தீர்மானிக்கவேண்டுமென்பதை நிச்சயிப்பதற்காகவும் 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்படி நடத்தப்பட்ட எலெக்ஷன்கள் சட்டப்படி செலாவணியாகுமா என்பதைக் குறித்து ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பதற்காகவும் மேற்படி ஆக்ட் 44-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படியும் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் செய்யப்பட்ட விதிகள்.

1. இந்த விதிகளில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்டின்

படி நடத்தப்பட்ட எலெக்ஷனானது யாதொரு பஞ்சாயத்துதாரரைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்டதாயிருந்தாலுஞ்சரி யாதொரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்டதாயிருந்தாலுஞ்சரி, அப்படிப் பட்ட எந்த எலெக்ஷனைப்பற்றியும் இந்த விதிகளின்படி ரெஜிஸ்ட்ராருக்கு எழுதிக்கொள்ளப்படும் எலெக்ஷன் மனு மூலமாகத் தவிர வேறே விதமாய் ஆட்சேபனை செய்யக்கூடாது.

2. (i) ஷை மனு எழுத்துமூலமாயிருக்கவேண்டியது மல்லாமல், அதில் எலெக்ஷனை ரத்துசெய்யவேண்டுமென்பதற்கு முக்கியாம்சத்தில் கிரமப் பிசகு ஏற்பட்டிருந்ததாகக் காட்டும் குறிப்பிட்ட முகாந்தரங்களாவது வேறே போதுமான காரணமாவது கண்டெழுதியிருக்கவும் வேண்டும்.

(ii) அதில்—

(a) எலெக்ஷனில் அபேட்சகராயிருந்து, தாம் அபேட்சகராயிருப்பதினின்றும் விலகிக்கொண்டிராத யாதொரு நபராகிலும்,

(b) ஆட்சேபனை செய்யப்பட்ட எலெக்ஷனானது ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட எலெக்ஷனாயிருந்தால் குறைந்தது மூன்று பஞ்சாயத்துதாரர்களாகிலும்,

(c) ஆட்சேபனை செய்யப்பட்ட எலெக்ஷனானது யாதொரு பஞ்சாயத்துதாரரைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட எலெக்ஷனாயிருந்தால், அந்த எலெக்ஷனில் வோட்கொடுத்த நபர்களில் குறைந்தது பத்துபேராகிலும்,

கையெழுத்து போடவேண்டும்.

(iii) மனுதாரர் - எலெக்ஷன் முடிவு நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள்ளாக மனுவை ரெஜிஸ்ட்ராரிடத்திலாவது அவரால் குறிப்பிடப்பட்ட யாதொரு நபரிடத்திலாவது கொடுக்கவேண்டும், அல்லது ஒப்புவிக்கும்படிச் செய்யவேண்டும்.

3. 2-வது விதியில்கண்ட நிபந்தனைகளின்படி எழுதப்பட்டிராத யாதொரு மனுவை ரெஜிஸ்ட்ரார் நிராகரித்துவிடவேண்டும்.

4. 3-வது விதியின்படி மனு நிராகரிக்கப்படாவிட்டால், ரெஜிஸ்ட்ராராவது அவரால் நியமித்து அனுப்பப்பட்ட யாதொரு நபராவது அந்த மனுவில் கண்டிருக்கும் முகாந்தரம் அல்லது முகாந்தரங்கள் சட்டப்படி செல்லுமா என்பதைப்பற்றி விசாரிக்கவேண்டும்.

5. இந்த விதிகளின்படி யாதொரு மனு வந்திருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, ரெஜிஸ்ட்ராரானவர் - தாமாகவே அப்படிப்பட்ட விசாரணைசெய்யலாம், அல்லது அப்படிப்பட்ட விசாரணைசெய்யும்படி கட்டளையிடலாம்:

ஆனால், எலெக்ஷன் முடிவு நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதம் கழிந்த பிறகு, அவர் - அப்படிப்பட்ட விசாரணைசெய்யவுங் கூடாது, செய்யும்படி கட்டளையிடவுங் கூடாது.

6. 4-வது விதியின்படியாகிலும் 5-வது விதியின்படியாகிலும் செய்யப்பட்ட விசாரணையில் ஏற்பட்ட முடிவின்மேல் ரெஜிஸ்ட்ரார் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; அவர் - தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே—

(a) பிரஸ்தாப எலெக்ஷன் விஷயமாய்ப் பிரவேசிக்க போதுமான காரணம் எதுவும் இல்லையென்று தமக்குத் தோற்றினால் மனுவைத் தள்ளிவிடலாம்; அல்லது,

(b) எலெக்ஷனில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான சங்கியையுடைய சட்டப்படி செல்லத்தக்க வோட்டுகள் வேறே யாதொரு அபேட்சகருக்குக் கிடைத்திருப்பதாகத் தாம் அபிப்பிராயப்பட்டு அவர் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தம் செய்யப்படவேண்டியிருந்தும் அந்தப்படி பிரசித்தம் செய்யப்படாமலிருந்தால் அப்படிப்பட்ட யாதொரு அபேட்சகர் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தம் செய்யலாம்; அல்லது,

(c) புதிதாய் எலெக்ஷன் நடத்தும்படி உத்தரவு செய்யலாம்.

7. அடுத்த முந்திய விதியின்படி யாதொரு தீர்மானம் செய்யப்படுகிறவரையில், யாருடைய எலெக்ஷன் விஷயமாய் ஆட்சேபனை செய்யப்படுகிறதோ அந்த நபர் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்.

8. 3-வது விதியின்படியாவது 6-வது விதியின்படியாவது பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவும் முடிவானதாகும்; அது - யாதொரு நியாயஸ்தலத்தில் ஆட்சேபிக்கப்படுவதற்கும் உட்பட்டதல்ல.

இந்த விதிகளில் "ரெஜிஸ்ட்ரார்" என்பது—

(a) ஜில்லா கலெக்டரின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்ட பஞ்சாயத்துகளின் விஷயத்திலே, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளை தம்முடைய அதிகாரத்தில் வைத்திருக்கும் அந்த ஜில்லா கலெக்டரும்;

(b) மற்றப் பஞ்சாயத்துகளின் விஷயத்திலே, 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து கிராம பஞ்சாயத்து ஆக்ட் பிரயோகப்படுகிற விஸ்தீர்ணம் முழுவதுக்கும் ரெஜிஸ்ட்ராராக பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட நபர் என்றும்,

அர்த்தமாகும்.

குறிப்பு:-இந்த ஆக்ட் 23-வது பிரிவைச் சேர்ந்த (2)குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் 42-வது பிரிவின்படியும் ஏற்படும் குற்றங்களைப் பிடித்து விசாரிக்க இந்த ராஜதானியிலுள்ள சகல பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கேஸுகளில் விதிக்கப்படும் அபராதங்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளைச் சேர்ந்ததாகும்.

சென்னபட்டணம் 1889-ம் ஷூத்து 1-வது

கிராமக்கோர்ட்டுகள் ஆக்ட்.

(1920-ம் ஷூத்து 2-வது ஆக்ட்டால் திருத்தப்பட்டது.)

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலே கிராம முன்ஸிபுகளின் கோர்ட்டுகளைக்குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

பீடிகை. சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலே கிராம முன்ஸிபுகளின் கோர்ட்டுகளைக்குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:-

1-ம் அத்தியாயம்.

பீடிகாவிதிகள்.

சுருக்கமான பெயரும் வழங்கத்தொடங்குவதும். **1.** (1) இந்த ஆக்டை, "1888-ம்ஷூத்திய சென்னபட்டணத்து கிராமக்கோர்ட்டுகளாக்ட்" என்று சொல்லலாம்; மேலும், இது உடனே வழங்கத்தொடங்க வேண்டும்.

வியாபிக்குமிடம். (2) இந்த ஆக்டானது 1874-ம்ஷூத்து 14-வது ஆக்டில் விவரித்திருக்கிறபடி ஷெட்யூலில் கண்ட டிஸ்ட்ரிக்டுகளும் சென்னை ராஜதானிப் பட்டணமும் தவிர, சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியைச்சேர்ந்த ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு அந்தந்த காலத்தில் உட்பட்டிருக்கிற பிரதேசங்களுக்கு வியாபிக்கின்றது. ஆனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் போர்ட் செய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பர மூலமாய் யாதொரு கிராமம் அல்லது விஸ்தீர்ணத்தை இந்த ஆக்டின் வியா

பாகத்தினின்றும் அப்போதைக்கப்போது நீக்கிவிடலாம்; மேலும், அப்படிப்பட்ட விளம்பரத்தை ரத்தும் செய்யலாம்.

2. (ரத்துசெய்யப்பட்டது.)

நடந்துகொண்டிருக்கும் வியாஜ்ஜியங்கள் அல்லது டிக்ரிகளுக்கு ஆக்ட் பிரயோகப்படுவது.

3. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் கிராம முன்ஸிபுகளின் கோர்ட்டுகளிலே நடந்துகொண்டிருக்கும் எல்லா வியாஜ்ஜியங்களும் இந்த ஆக்டின்படி தொடரப்பட்டிருப்பவைகளாக எண்ணப்படும்; மேலும், அந்தத் தேதிக்கு முன்னே கிராமமுன்ஸிபுகளால் செய்யப்பட்ட எல்லா டிக்ரிகளும், இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட டிக்ரிகளை நிறைவேற்றுவதைக்குறித்து இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின் பிரகாரம் நிறைவேற்றப்படலாம்.

ஆக்ட் பிரயோகப்படுவதினின்றும் நிவர்த்தி செய்யப்பட்ட பிரதேசத்தில் முடிவாகாமல் நடந்துகொண்டிருக்கும் வியாஜ்ஜியங்கள் விஷயத்திலும் டிக்ரிகள் விஷயத்திலும் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை.

4. இந்த ஆக்ட் பிரயோகப்படுவதனின்றும் யாதொரு கிராமம் அல்லது விஸ்தீர்ணம் நிவர்த்திசெய்யப்படும்போது அவ்விடத்திலுள்ள யாதொரு கிராமக்கோர்ட்டில் வியாஜ்ஜியங்கள் நடந்துகொண்டிருந்தாலும், அந்தக் கோர்ட்டாரால் டிக்ரிகள் செய்யப்பட்டு நிறைவேற்றப்படாதிருந்தாலும், அந்த வியாஜ்ஜியம் அப்போதுதான் தொடரப்படுவதாயிருந்தால் அதை விசாரணைசெய்ய யாருக்கு அதிகாரமிருக்குமோ அந்த ஸிவில் கோர்ட்டார் மேற்கண்ட வியாஜ்ஜியங்களையெல்லாம் விசாரணைசெய்து தீர்மானிக்கவேண்டியதுமல்லாமல் மேற்சொல்லிய டிக்ரிகளையெல்லாம் நிறைவேற்றவும்வேண்டும்.

அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களும், டிக்ரிகளும், அந்த ஸிவில் கோர்ட்டிலே தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களாகவும் அந்தக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்ரிகளாகவும் இருந்தாற்போல, முறையே விசாரணை செய்யப்படவும் நிறைவேற்றப்படவும் வேண்டும்.

அர்த்தம் சொல்லும் பகுதி.

5. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால் :—

"கிராமம்."

"கிராமம்" என்பது-நிலையாய்ப் பைசலாகியான பூஸ்திதியிலே எதற்காக இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டபோது 1816-ம் வருஷத்திய 4-வது சென்னபட்டணத்து ரெகுலேஷன்படி கிராம முன்ஸிப் கோர்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது இந்த ஆக்டின்படி கிராமக்கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்றும், மற்ற இடங்களிலே நிலத்தீர்வை வசூலின்பொருட்டு கிராமமாயிருப்பதாக கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்றும் அர்த்தமாகும்.

"கிராமக் கோர்ட்."

"கிராமக் கோர்ட்" என்பது - 7-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு கிராம முன்ஸிப் கோர்ட் என்றுவது, 9 - வது பிரிவின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு பஞ்சாயத்து கோர்ட் என்றுவது அர்த்தமாகும்;

"கிராம முன்ஸிப்."

"கிராம முன்ஸிப்" என்பது - இந்த ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கிராம முன்ஸிப் கோர்ட்டிலுள்ள ஜட்ஜ் என்று அர்த்தமாகும்; மேலும், 7-வது 16-வது பிரிவுகளில் தவிர மற்றப் பிரிவுகளிலே, அதில் யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் ப்ரெஸிடென்ட் என்பதும் அடங்கும்.

"டிஸ்ட்டிரிக்ட் முன்ஸிப்."

"டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்" என்பது யாருடைய அதிகா... பிரதேச எல்லைகளுக்குள் கிராமக்கோர்ட் இருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் என்று அர்த்தமாகும்.

ஆனல், கிராமமானது எந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்பின் அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள்ளும் இராவிட்டால், யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் அந்தக் கிராமம் இருக்கிறதோ அந்த ஸபார்டினேட் ஜட்ஜாவது, ஸபார்டினேட் ஜட்ஜ் இராத விஷயத்திலே, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாவது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபாக எண்ணப்படுவார்.

மேலும், எந்த விஸ்தீர்ணத்திலாகிலும் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபானவர் ஸ்மால்காஸ் விசாரணை அதிகாரம் செலுத்தாமலிருந்து பிரத்தியேகமாக ஒரு ஸ்மால்காஸ் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அந்தக் கோர்ட்டின் ஜட்ஜானவர் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபாக எண்ணப்படுவார்.

"நிர்ணயிக்கப்பட்ட."

"நிர்ணயிக்கப்பட்ட" என்பது - இந்த ஆக்டின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்படும் விதியினால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்.

"கையெழுத்து செய்ய."

"கையெழுத்து செய்ய" என்பது - தம்முடைய பெயரை எழுதச் சக்தியற்றவராயிருக்கும் ஒரு நபரின் விஷயமாய் உபயோகப்படும்போது அதன் இலக்கண சம்பந்தமான வேறுபாடுகள், அதனடியாகப் பிறந்த சொற்றொடர்கள் ஆகிய இவைகள் சகிதமாக அந்த வார்த்தையிலே, "அடையாளம்போட" என்பதன் இலக்கண சம்பந்தமான வேறுபாடுகள், அதனடியாகப் பிறந்த சொற்றொடர்கள் ஆகிய இவைகள் சகிதமாக, "அடையாளம்போட" என்பதும் அடங்கும்.

2-ம் அத்தியாயம்.

கிராமக்கோர்ட்டுகளை ஏற்படுத்துவதும் அவைகளின் அமைப்பும்.

கிராமக்கோர்ட்டுகளை ஏற்படுத்துவது.

6. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யப்படுகிற உத்தரவு மூலமாய்:—

(1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களை ஒன்றாய்ச் சேர்த்து, அவ்விடங்களில் முன்னமே இருக்கிற பல கிராமக் கோர்ட்டுகளுக்கு பர்த்தியாக அந்தக்கிராமங்களுக்கு ஒரே கிராமக் கோர்ட்டை ஸ்தாபிக்கலாம்;

(2) யாதொரு கிராமத்தில் பிரிவினைகள் ஏற்படுத்தி, அந்த கிராமத்திலே முன்னமே இருக்கிற கிராமக் கோர்ட்டுக்கு பர்த்தியாக அப்படிப்பட்ட பிரிவினை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரு கிராமக்கோர்ட்டை ஏற்படுத்தலாம்;

(3) குறிந்த யாதொரு விஸ்தீர்ணத்திற்காக நாதுனாய் ஒரு கிராமக்கோர்ட் ஸ்தாபிக்கலாம்.

கிராம முன்ஸி பை நியமிப்பது.

7. (பஞ்சாயத்து கோர்ட்டுகள் இல்லாத கிராமங்களில் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் கிராம முன்ஸிபுகளைக்) கலெக்டர் நியமிக்கவேண்டும்; ஆனால், கிராமத்திற்குள் வாசஞ்செய்யாமலிருக்கிற யாதொரு நபர் அந்த உத்தியோகத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராகமாட்டார்.

கிராம முன்ஸி பை ஸஸ்பெண்ட் பண்ணுவது தள்ளி விடுவது.

8. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - யாதொரு கிராமமுன்ஸிபை யாகிலும் யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் ஒரு மெம்பரையாகிலும் வேலைத்திறமையில்லாமையினாலாவது வேலையை அசட்டைசெய்வதனாலாவது துர்நடத்தை நடப்பதனாலாவது வேறே தகுந்த நியாயமான காரணத்தினாலாவது ஸஸ்பெண்ட் செய்யலாம், (வேலையிலிருந்து சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கலாம்) அல்லது தள்ளிவிடலாம்; யாதொரு கிராமக்கோர்ட்டின் நீதிமுறை நடவடிக்கைகளினால் தெரியவருகிற அவ்வித காரியத்தினிமித்தம் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் உத்தரவு பிறப்பித்தால் அதன்மேல் கலெக்டர் அந்த கிராமமுன்ஸிபை ஸஸ்பெண்ட் செய்யவேண்டும் அல்லது தள்ளிவிடவேண்டும்.

ஸஸ்பெண்ட் செய்வதற்கான அல்லது தள்ளிவிடுவதற்கான ஒவ்வொரு உத்தரவின்மேலும், அந்த உத்தரவு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜினுடைய உத்தரவின்மேலல்லாமல் கலெக்டராலேயே பிறப்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் ரெவினியு போர்டாருக்கும், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜினுடைய உத்தரவின்மேல் பிறப்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் ஹைக்கோர்ட்டாருக்கும், மூன்று மாதத்திற்குள்ளாக அப்பீல்செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட சகல அப்பீல்களின்பேரிலும் சந்தர்ப்பத்திற் கேற்றபடி ரெவினியு போர்டாரோ ஹைக்கோர்ட்டாரோ செய்கிற தீர்மானம் முடிவானதாகும்.

பஞ்சாயத்து கோர்ட்டுகளின் அமைப்பு.

9. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-யாதொரு கிராமத்துக்காகவாவது கிராமங்களின் தொகுப்புக்காகவாவது ஒரு கிராமத்தின் யாதொரு பாகத்துக்காகவாவது, ஜில்லா கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யப்பட்ட உத்தரவு மூலமாய், இதில் பின்னால் நிய

ந்தனை கண்டிருக்கிறபடி ஒரு பஞ்சாயத்து கோர்ட் ஏற்படுத்தலாம் ; அதன்மேல் 7-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு கிராம முன் ஸிபின் கோர்ட்டானது அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்தில் எந்த பாகத்தி லும் இந்த ஆக்டின்படி விசாரணை அதிகாரம் செலுத்தக்கூடாது.

(2) அந்தப்படி ஸ்தாபிக்கப்பட்ட ஒவ்வொரு கோர்ட்டுக்கும் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று கலெக்டர் நிச்சயிக்க வேண்டும் ; ஆனால், அந்த சங்கியையானது ஐந்துக்குக் குறையாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(3) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்படு டும் விதிகளுக்குட்பட்டு, அந்த பஞ்சாயத்து கோர்ட்டின் மெம்பர்கள் தெரிந்தெடுத்து நியமிக்கப்படவேண்டும்.

(4) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்ப டும் விதிகளுக்குட்பட்டு, யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் மெம்பரானவர் மூன்று வருஷகாலம் வரையில் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

மெம்பர்களின் உத்தியோக கால அளவு.

(5) யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டார் தங்களுடைய மெம் பர்களில் ஒருவரை நிர்ணயிக்கப்பட்ட விதிகளின் பிரகாரம் அந்தக் கோர்ட்டின் ப்ரெஸிடெண்டா யிருக்கும்படி தெரிந்தெடுக்கவேண்டும்.

பிரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பது.

ப்ரெஸிடென்ட் ஹாஜராயிராத பட்சத்திலே, அப்போது ஹாஜ ராயிருந்து அந்தக் கோர்ட்டாய் ஏற்படும் மெம்பர்கள் அந்த சபை யின்காரியங்களுக்காக தங்களுக்குள் ஒருவரை ப்ரெஸிடென்டாகத் தெரிந்தெடுக்கவேண்டும்.

(6) பஞ்சாயத்து கோர்ட்டின் மூன்று மெம்பர்கள் சேர்ந்தால் க்வோரம் ஏற்படும் ; மேலும், சபைக்கு வந்திருக் கும் மெம்பர்களில் பெரும்பாலார் செய்யும் தீர்மா னமானது அந்தக் கோர்ட்டின் தீர்மானமாகும்.

* க்வோரம் ஏற்படுவது.

ஆனால், வோட்டுகள் (அபிப்பிராயங்கள்) சமமாக இருக்கும்பட் சத்திலே, ப்ரெஸிடென்ட் காஸ்டிங் வோட் என்னும் முடிக்கும்படி யான அபிப்பிராயம் கொடுக்கக்கூடியவராவர்.

---

* க்வோரம் என்பது சபையை நடத்துவதற்கு ஆஜராகவேண்டிய மெம்பர் களின் குறைந்த எண்ணிக்கை.

பஞ்சாயத்துகோர்ட்டுகளைக் கலைத்துவிட பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

(7) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஜில்லா கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யப்பட்ட உத்தரவு மூலமாக யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டைக் கலைத்துவிடலாம்.

வியாஜ்ஜியங்களைப்பற்றிய ரெஜிஸ்டர் வைக்கவும் நடவடிக்கைகளை எழுதவும் கிராம கர்ணம் முன்ஸிப்புக்கு உதவிசெய்வது.

10. கிராம முன்ஸிபானவர் கிராமக்கோர்ட்டில் தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களைக் குறித்து ஒரு ரெஜிஸ்டர் வைக்கவும், கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதவும் வேண்டும்: உத்தரவு செய்யப்படும்போது அந்த ரெஜிஸ்டரில் பதிவுசெய்யவும் கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதவும் கிராம கர்ணம் உதவிசெய்ய வேண்டியவராவார்.

கிராம ஊழியக்காரன் ஸம்மன் முதலியதைச் சேர்ப்பிப்பது.

11. இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட எல்லா சம்மன்களையும் நோடீஸுகளையும் உத்தரவுகளையும் சேர்ப்பிப்பதும், இந்த ஆக்டின்படி ஜப்திசெய்யப்பட்ட அசையும்பொருளைக் கைப்பற்றுவதிலும் விற்பதிலும் ஒப்பிப்பதிலும் கிராம முன்ஸிபினுடைய உத்தரவின்படி நடந்துகொள்வதும் - சமாசாரம் கொண்டுபோகும் வேலை சாதாரணமாய் யாருடையதோ அந்த கிராம ஊழியக்காரனுடைய அலுவலாகும்.

கிராம கர்ணம் கிராம ஊழியக்காரன் - இவர்களுக்குபர்த்தியாகவாவது இவர்களோடு கூடவாவது யாதொரு நபரைக் கலெக்டர் நியமிக்கலாமென்பது.

12. முறையே 10-வது, 11-வது பிரிவுகளினால் நிர்ணயிக்கப்பட்ட அலுவல்களைச் செய்வதற்கு கிராம கர்ணம் அல்லது 11-வது பிரிவில் சொல்லியிருக்கிற கிராம ஊழியக்காரனுக்கு பர்த்தியாகவாவது அவர்களோடு கூடவாவது யாதொரு நபரை ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுடைய மேல்விசாரணைக்குட்பட்டு நியமிக்க டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

3-ம் அத்தியாயம்.

அதிகார வரம்பும் தீர்மானமாயிருக்கிற விஷயங்களும் காலநிர்ணயமும்.

கிராமக்கோர்ட்டுகள் வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்வது.

13. கிராமக்கோர்ட்டுகளால் விசாரணை செய்யப்படவேண்டியதான வியாஜ்ஜியங்கள் எவையென்றால்—கடனாவது, டிமாண்டாவது, கணக்கு நிலுவையின் மேலாகிலும், மற்றப்படியாகிலும் தொகை அல்லது பெறுமானத்தில் ஐம்பது ரூபாய்க்கு அதிகப்படாதபோது, காண்ட்ராக்டின் (ஒப்பந்தத்தின்) பேரில் பாக்கியாயிருக்கிற பணத்திற்காகவாகிலும் ஜங்கம சொத்திற்காகவாகிலும் அப்படிப்பட்ட சொத்தின் பெறுமானத்திற்காகவாகிலும் கொண்டுவரப்படும் தாவாக்கள்.

விலக்கு.

ஆனால்—

(1) கூட்டுப்பங்கு வியாபாரக் கணக்கில் நிலுவை இவ்வளவென்று அதில் சம்பந்தப்பட்ட நபர்களாவது அவர்களுடைய ஏஜென்டுகளாவது முடிவு ஏற்படுத்தியிருந்தாலொழிய, அப்படிப்பட்ட நிலுவையைக் குறித்தாகிலும்,

(2) உயில் ஏற்படுத்தாமல் இறந்துபோயிருக்கும் விஷயத்தில் பங்குக்காகவாகிலும் பங்கில் ஒரு பாகத்திற்காகவாகிலும், உயிலின்படி ஏற்பாடான பொருளுக்காகவாகிலும் பொருளில் ஒரு பாகத்திற்காகவாகிலும்,

(3) நிலத்தின் குத்தகைத் தொகையானது பிரதிவாதியால் கையெழுத்து போடப்பட்டிருக்கிற எழுத்துமூலமான காண்ட்ராக்டின்மேல் பாக்கியாயிருந்தாலொழிய அப்படிப்பட்ட குத்தகைத் தொகைக்காகவாகிலும்,

(4) கவர்ன்மெண்டாராலாகிலும் அவர்கள்பேரிலாகிலும் உத்தியோக முறைமையில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாகிலும் அவர்கள் பேரிலாகிலும்,

(5) மைனர்கள் அல்லது புத்திமாறுபட்டமுள்ளவர்களாலும் அவர்கள் பேரிலுமாகிலும்,

அப்படிப்பட்ட யாதொரு கோர்ட்டிலே வியாஜ்ஜியம் கொண்டுவரப்படக்கூடாது.

சம்மதியின்பேரில் 200-ரூபாய் வரையிலுள்ள வியாஜ்ஜியங்களை விசாரணை செய்ய அதிகாரம்.

14. கோர்ட்டுக்கு முன்பாக வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த இரு கட்சிக்காரர்களும் சம்மதி உடன்படிக்கை எழுதிக் கொடுக்கும் பட்சத்தில், யாதொரு கிராமக்கோர்ட்டார் 13-வது பிரிவில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிற தன்மையுள்ளதாய் தொகை அல்லது பெறுமானம் 200-ரூபாய்க் கதிகப்படாமலிருக்கிற வியாஜ்ஜியங்களை விசாரணைசெய்து தீர்மானிக்கலாம்.

இன்ன கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரப்படவேண்டு மென்பது.

15. 16-வது பிரிவில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த ஆக்டின்படி தொண்டுவரப்படும் ஒவ்வொரு வியாஜ்ஜியமும்-வியாஜ்ஜியம், ஆரம்பிக்கப்படும்போது பிரதிவாதிகளெல்லோரும் எதன் அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் வாசஞ்செய்து கொண்டிருக்கிறார்களோ அல்லது தொழில் நடத்திக்கொண்டிருக்கிறார்களோ அல்லது லாபத்துக்காக நேராய் வேலை செய்துகொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட கிராமக் கோர்ட்டில் தொடரப்படவேண்டும்.

கிராம முன்ஸிப் நேராய்ப் பற்றுள்ளவராயிருக்கும் வியாஜ்ஜியம்.

16. (1) எந்த கிராம முன்ஸிபும் தாம் கட்சிக்காரராகவாவது நேராய்ப் பற்றுள்ளவராகவாவதிருக்கிற யாதொரு வியாஜ்ஜியத்தைப் பரிசீலனை பண்ணவும் கூடாது, அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தைச் சேர்ந்ததாகவாவது அதிலிருந்து உண்டாவதாகவாவதிருக்கிற யாதொரு நடவடிக்கை விஷயமாய் நீதிமுறையில் தீர்மானம் செய்யவுங்கூடாது. அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையையும் அடுத்துப் பக்கத்திலிருக்கிற கிராமக் கோர்ட்டில் தொடரலாம்.

மெம்பர் நேராய்ப் பற்றுள்ளவராயிருக்கிற வியாஜ்ஜியம்.

(2) ஒரு பஞ்சாயத்துக் கோர்ட்டைச்சேர்ந்த யாதொரு மெம்பர் அந்தக் கோர்ட்டுக்கு முன்பாக வந்திருக்கும் எந்த வியாஜ்ஜியத்திலாகிலும் நடவடிக்கையிலாகிலும் கட்சிக்காரராகவோ நேராய்ப் பற்றுள்ளவராகவோ இருந்தால், அவர்-அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையைப்பற்றிய விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது கோர்ட்டிலிரு

ந்து விலகியிருக்க வேண்டியதுமல்லாமல், அதைத் தீர்மானிக்கும் விஷயத்தில் எவ்விதத்திலும் சம்பந்தப்படவுங்கூடாது.

தீர்மானமாயிருக்கிற விஷயங்கள்.

17. யாதொரு வியாஜ்ஜிய மூலத்தின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டால், அந்த வியாஜ்ஜிய மூலமானது அதற்கு முன்னமே கொண்டுவரப்பட்ட ஒருவியாஜ்ஜியத்தில் அதே கட்சிக்காரர்களுக்குள்ளாவது அவர்கள் யாரை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறார்களோ அவர்களுக்குள்ளாவது தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டாரால் விசாரணைசெய்து தீர்மானிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அப்படி மறுபடியும் கொண்டுவரப்படுகிற யாதொரு வியாஜ்ஜியத்தை எந்த கிராமக் கோர்ட்டாரும் பரிசிலனை செய்யக்கூடாது.

வியாஜ்ஜியத்தில் தாவா முழுமையையும் சேர்ப்பது.

18. வியாஜ்ஜியமூலத்தைப்பற்றிச்செய்ய வாதிக்கு ஹக்கு உண்டாயிருக்கிற தாவாமுழுமையையுங் குறித்து யாதொரு கிராமக் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டும்; ஆனால், வாதியானவர் - அந்தக் கோர்ட்டின் அதிகாரவரம்புக்குள் வியாஜ்ஜியம்கொண்டு வரும்பொருட்டு தம்முடைய தாவாவில் எவ்வளவையாவது தள்ளிவிடலாம்.

தாவாவில் ஒரு பாகத்தைத் தள்ளிவிடுவது.

வாதியானவர் தம்முடைய தாவாவில் யாதொரு பாக சம்பந்தமாய் வியாஜ்ஜியம் தொடராதிருந்தால் யாதொரு பாகத்தை வேண்டுமென்று தள்ளிவிட்டாலும், அப்படிப்பட்ட பாகத்திற்காவது பாக சம்பந்தமாயாவது அவர் வேறே வியாஜ்ஜியம் கொண்டுவரலாகாது.

கிராமக் கோர்ட்டுகளால் விசாரணை செய்யப்படக்கூடாத விஷயங்களை இடையில் தீர்மானிப்பது.

19. கிராமக் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்படத்தக்க யாதொரு வியாஜ்ஜியத்தைத் தீர்மானிக்கையில் அந்த வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த கட்சிக்காரர்களுக்குள் அசையாப்பொருளைப்பற்றிய ஹக்கைக்குறித்தாவது அவர்களில் யாருடைய சட்டசம்பந்தமான முறைமையைக் குறித்தாவது அவர்கள் யாரை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறார்

களோ அவர்களுடைய சட்டசம்பந்தமான முறைமையைக் குறித்தாவது, யாதொரு கான்ட்ராக்ட் அல்லது கடமை ஏற்பட்டிருப்பதைக் குறித்தாவது விவாதமுண்டாயிருக்கிற எந்த விஷயம் நேராய் அந்த வியாஜ்ஜிய விஷயமாயிருக்கும் பட்சத்தில் கிராமக்கோர்ட்டாரால் இந்த ஆக்டின்படி விசாரணை செய்யப்படத்தக்கதாயிராதோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தை இடையிலே தீர்மானிக்கவேண்டிய அவசியமிருந்தால், அந்த வியாஜ்ஜியத்தைத் தீர்மானிப்பதற்கு எவ்வளவு மட்டில் அவசியமாயிருக்கலாமோ அவ்வளவுமட்டில், ஹக்கைக்குறித்தாகிலும் சட்டசம்பந்தமான முறைமையைக்குறித்தாகிலும் கான்ட்ராக்ட் அல்லது கடமையைக்குறித்தாகிலும் உண்டாயிருக்கிற அப்படிப்பட்ட விவாதத்தைத் தீர்மானிக்க கிராமக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு; ஆனால், அந்தத் தீர்மானமானது அதே கட்சிக்காரர்களுக்குள்ளாவது அவர்களுடைய பிரதிநிதிகளுக்குள்ளாவது வேறே யாதொரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டபோதிலும் அந்த வியாஜ்ஜியத்தில், அப்படிப்பட்ட ஹக்கு-சட்டசம்பந்தமான முறைமை-கான்ட்ராக்ட் அல்லது கடமையைக்குறித்து ருஜுவாக எடுத்துக்கொள்ளப்படாது.

20. 1908-ம்வருஷத்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்திலுள்ள நிபந்தனைகள் இந்த ஆக்டின்படிக் கான வியாஜ்ஜியங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் பிரயோகப்படும்.

காலநிர்ணயம் *

20-A. (1) யாதொரு கிராமக் கோர்ட்டால் பரிசீலனை செய்யப்படத்தக்க ஒரு வியாஜ்ஜியமானது யாதொரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டில் தொடரப்பட்டால், அவர் அதைக் கிராமக் கோர்ட்டுக்கு மாற்றக்கூடாதென்பதற்குப் போதுமான காரணங்கள் இருந்தாலன்றி மற்றப்படி அதைக் கிராமக் கோர்ட்டுக்கு மாற்றலாம்.

கிராமக் கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படத்தக்க வியாஜ்ஜியங்கள்.

---

* 1908-ம்வருஷத்திய இந்து தேசத்துக் காலநிர்ணயச்சட்டத்தை இப்போது பார்க்கவும். காலநிர்ணயச் சட்டம், திருத்தமான பதிப்பு, சென்னை—புரசைவாக்கம்-மதுகரவேணி, புஸ்தகசாலையாரிடம் கிடைக்கும்.

டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபால் பரிசிலனை செய்யப்படும் வியாஜ்ஜியங்களின் செலவு.

(2) யாதொரு கிராமக்கோர்ட்டால் பரிசிலனை செய்யப்படத்தக்க வியாஜ்ஜியத்தை யாதொரு டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் பரிசிலனைசெய்து, அந்த வியாஜ்ஜியம் கிராமக்கோர்ட்டில் தொடரப்பட்டிருக்க வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டால், ஜெயமடைகிற வாதிக்கு செலவு ஒத்துக்கொடுக்கப்படமாட்டாது; ஜயமடைகிற பிரதிவாதிக்கோ, யாதொரு கட்சிக்காரர் (ப்ளீடருக்கு) நியாயவாதிக்குச் செலுத்தவேண்டிய அளவுக்கு அவருடைய செலவு ஒத்துக்கொடுக்கப்படும்.

வியாஜ்ஜியங்களை வேறொரு கோர்ட்டுக்கு அனுப்புவது.

21. (1) டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபானவர் கட்சிக்காரர்களில் யாராகிலும் விண்ணப்பம் செய்துகொள்வதன்பேரில் யாதொரு கிராமக் கோர்ட்டிலிருந்து எந்த வியாஜ்ஜியத்தையாகிலும் வரவழைத்துக்கொண்டு அது தம்முடைய கோர்ட்டிலேயே தொடரப்பட்டிருந்தாற்போல அதைத்தாமே பரிசிலனைசெய்யலாம், அல்லது தம்முடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள்ளிருக்கும் வேறே யாதொரு கிராமக்கோர்ட்டுக்கு பரிசிலனைக்காக அதை அனுப்பலாம். ஆனால், யாதொரு கிராமக் கோர்ட்டிலிருந்து வியாஜ்ஜியத்தை வரவழைத்துக்கொண்டு அதை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் பரிசிலனை பண்ணும்படி விண்ணப்பம் செய்துகொள்ளுகிற எந்த கட்சிக்காரராவது-அப்படி வியாஜ்ஜியத்தை வேறொரு கோர்ட்டுக்கு மாற்றும்படி உத்தரவு செய்யப்படுவதற்கு முன்னமே, 1870-ம் வருஷத்து கோர்ட் கட்டண * ஆக்டின்படி அதற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணத்தொகையைச் செலுத்திவிடவேண்டும்.

நடவடிக்கைகள் நடத்துவதைத் திருத்திவைக்கும்படி டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் உத்தரவு செய்வது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்துகொள்ளப்படும் யாதொரு விண்ணப்பம் பைசலாகாமலிருக்கையில், டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபானவர் கிராமக்கோர்ட்டில் நடவடிக்கைகள் நடத்துவதை நிறுத்திவைக்கும்படி உத்தரவுசெய்யலாம்.

---

* காளஹஸ்தி வையில் திருத்தப்பட்டிருக்கும் விவகார சிந்தாமணியிலுள்ள மேற்படி ஆக்டின் புதிய பதிப்பை பார்க்கவும். இது எம்-வி. புஸ்தகசாலை வேப்பேரிபோஸ்டு மதராஸ், என்கிறவிலாசத்தில் கிடைக்கும்.

4-ம் அத்தியாயம்.

வியாஜ்ஜியங்களைத் தொடருவதையும் தயார்செய்வதையும், அங்கீகாரம் பெற்ற ஏஜெண்டுகளையும், கட்சிக்காரர்களுக்கு ஸம்மன் பிறப்பிப்பதையும், சேர்ப்பிப்பதையும், விசாரணையை நிறுத்திவைப்பதையும், ஹாஜராகாவிட்டால் இன்னதாகு மென்பதையுங் குறித்து.

22. இந்த ஆக்டின்படி கொண்டுவரப்படுகிற பிரதி வியாஜ்ஜியத்தையும் கிராம முன்ஸிபினிடத்தில் ப்ளெய்ன்ட் கொடுத்து அதன் மூலமாய்த் தொடரவேண்டும். மேலும், பிரதிவாதிகள் எத்தனைபேர் இருக்கிறார்களோ அத்தனை * ப்ளெய்ன்ட் பிரதிகளையுங்கூட கொடுக்கவேண்டும். ஸம்மன் பிரதியோடுகூட ப்ளெய்ன்ட் பிரதி யொன்றை இதில் பின்னால்சொல்லியிருக்கிற விதமாய் ஒப்பிக்கவேண்டும் அல்லது ஒட்டவேண்டும்.

வியாஜ்ஜியத்தை ப்ளெய்ன்ட் கொடுத்து அதன் மூலமாய் ஆரம்பித்தல்.

23. ப்ளெய்ன்டை கிராமத்தில் வழங்குகிற பாஷையிலே எழுதி, அதில் வாதியாவது அவரில்லாவிட்டால் அவரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாவது கையெழுத்துப் போடவேண்டும்; மேலும், அதில் கண்டெழுதவேண்டிய விவரங்கள் எவை என்றால்,

ப்ளெய்ன்டில் எழுதவேண்டிய விவரங்கள்.

(a) வாதி-பிரதிவாதி-இவர்களுடைய பெயரும் விவரமும் வாசஸ்தலமும் ;

(b) வியாஜ்ஜிய மூலத்திற்கு சுருக்கமான ஸ்டேட்மெண்டும், வியாஜ்ஜியமூலம் பிறந்த காலமும் ;

(c) கேட்டுக்கொள்ளுகிற பரிகாரமும், தாவா செய்யப்படுகிற மொத்த தொகை அல்லது பெருமானமும்.

24. யாதொரு நியாயவாதி யோக்கியதை பெற்றவராயிருந்தாலுஞ்சரி யோக்கியதை பெறாதவராயிருந்தாலுஞ்சரி, யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையைச் சேர்ந்த எந்த கட்சிக்காரர் சார்பிலாகிலும் யாதொரு கிராமக் கோர்ட்டுக்கு முன் ஹாஜராக மேற்படி நியாயவாதிக்கு அனுமதி கொடுக்

நேராக ஹாஜராவது அல்லது ஏஜென்டை ஹாஜர்ப்படுத்துவது.

---

* ப்ளெய்ன்ட் முதலிய அச்சுபாரங்கள், சென்னை-புரசைவாக்கம் மதுகரவேணி புஸ்தகசாலையாரிடம் கிடைக்கும்.

கக்கூடாது; ஆயினும், யாதொரு கட்சிக்காரர் தமக்காக ஹாஜராகி நியாயவாதம் பண்ணும்படி யாதொரு வேலைக்காரனுக்காகிலும் குமஸ்தாவுக்காகிலும் பாகஸ்தருக்காகிலும் பந்துவுக்காகிலும் சினேகிதருக்காகிலும் அதிகாரம் கொடுக்கலாம்; ஆனால், நியாயம் நடப்பதற்கு கட்சிக்காரர் நேரில் ஹாஜராவது அவசியமென்று கிராம முன்ஸிப் அபிப்பிராயப்படும்போது, அந்த வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த கட்சிக்காரர்களில் யாரையாவது நேரில் வந்து ஹாஜராகும்படி உத்தரவு பண்ண கிராமமுன்ஸிபுக்கு அதிகாரமுண்டு; அப்படி உத்தரவுசெய்யப்பட்ட கட்சிக்காரர் நேரில் வந்து ஹாஜராகாவிட்டால், நேராய்த்தாமாவது தமக்காக எஜெண்டாவது ஹாஜராகாத பட்சத்தில் எப்படியோ அதே பலப்பிராப்திகளுக்கு அவர் உள்ளாகவேண்டும்.

பிரதிவாதிக்கு ஸம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.

25. ப்ளெய்ன்ட் கிரமமாய்க் கொடுக்கப்பட்ட பின்பு அதை கிராமமுன்ஸிப் ரெஜிஸ்டர் செய்விக்கவேண்டியதுமல்லாமல், குறித்த ஒருதினத்தில் பிரதிவாதி ஹாஜராகி தாவாவுக்கு உத்தரவுசொல்லவேண்டுமென்று எழுதிய சம்மன் மூலமாய்க் கட்டளையிடவும் வேண்டும். சமாசாரம் கொண்டுபோகும் வேலை சாதாரணமாய் யாருடையதோ அந்த கிராம ஊழியக்காரனாவது, 12-வது பிரிவின்படி கலெக்டரால் நியமிக்கப்பட்ட வேறே யாதொரு நபராவது ஸம்மனைப் பிரதிவாதிக்கு நேரில் சேர்ப்பித்து அதன்மேல் அவருடைய கையெழுத்தை வாங்கிக்கொள்ளவும் அதற்கு ஒரு பிரதியை அவரிடத்தில் ஒப்புவிக்கவும்வேண்டும்.

ஸம்மன் சேரவொட்டாமல் பிரதிவாதி தப்பித்துக் கொண்டிருக்கும் போது அதை இன்னபடி சேர்ப்பிப்பது.

26. ஸம்மன் சேராமலிருக்கும்படி பிரதிவாதி தப்பித்துக்கொண்டிருக்கிறாரென்று அல்லது ஸம்மனில் தம்முடைய கையெழுத்துப்போட நிராகரித்திருக்கிறாரென்று கிராம முன்ஸிபுக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால், கிராம முன்ஸிபானவர் - பிரதிவாதியின் குடும்பத்திலே அவரோடுகூட வாசஞ்செய்கிற வயதுவந்த யாதொரு ஆண்பிள்ளையினிடத்தில் அதைச்சேர்ப்பித்து அதற்கு ஒருபிரதியை ஒப்பிக்கும்படியாவது, அவர் சாதாரணமாய் குடியிருக்கிற வீட்டில் யாவர்க்கும் தெரியும்படியான ஒரு இடத்திலே ஸம்மன் பிரதியை ஒட்டும்படியாவது உத்தரவு பண்ணலாம்.

கோர்ட்டின் அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியில் பிரதிவாதி இருந்தால் ஸம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.

27. கிராமக் கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியிலிருக்கிற பிரதிவாதிக்கு ஸம்மனைச் சேர்ப்பிக்க வேண்டிய அவசியமிருக்கும்போதெல்லாம், அதை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கு அனுப்பவேண்டும்; அவர் அதைத் தாமே பிறப்பித்திருந்தாற்போல அதைச் சேர்ப்பிக்கும்படிச் செய்யவேண்டும்; பின்பு அந்த ஸம்மனை, அது சேர்ப்பிக்கப்பட்டதென்கிற ரிபோர்ட்டோடுகூட கிராமக் கோர்ட்டுக்குத் திரும்ப அனுப்பவேண்டும். அந்த ரிபோர்ட்டானது அதில் கண்ட சங்கதிகளுக்குப் பிரத்தியட்சமான ருஜுவாகும்.

பிரதிவாதி ஹாஜராகாவிட்டால் நடவடிக்கை.

28. நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பிரதிவாதி நேரில் ஹாஜராகாவிட்டாலும் அவருக்காக ஏஜென்ட் ஹாஜராகாவிட்டாலும், ஸம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாகும் பட்சத்தில், கிராமக் கோர்ட்டார் (எக்ஸ்பார்ட்டி) ஒருதலையாய் விசாரணைசெய்யத் தொடங்கலாம்.

ஸம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாகாவிட்டால், கிராம முன்ஸிப் புது ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்.

வியாஜ்ஜியத்தைக்குறித்து இரண்டு நாளைய நோடிஸ் கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதி சுதந்தரித்துக் கேட்கலாமென்பது.

ஒவ்வொரு பிரதிவாதியும் வியாஜ்ஜியத்தைக்குறித்துப் பரிஷ்காரமாய் இரண்டு நாளைய நோடிஸ் கொடுக்கவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்கலாம்; மேலும், நிர்ணயிக்கப்பட்ட தினத்திலே உத்தரவுசொல்ல பிரதிவாதிக்கு சாத்தியமாயிருக்கும்படி தகுந்த காலத்தில் ஸம்மன் சேர்ப்பிக்கப்படாதிருந்தால், வியாஜ்ஜிய விசாரணையை நிறுத்தி வேறொருநாளைக்கு வைத்துக்கொள்ளவேண்டும்; அதைக் குறித்துப் பிரதிவாதிக்கு எழுத்துமூலமாக நோடிஸ் கொடுக்கவேண்டும்.

யாருக்காக கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த கட்சிக்காரருடைய செலவில் அதைச் சேர்ப்பிப்பது.

29. கிராம ஊழியக்காரனல்லாமல் மற்றப்படி இந்த ஆக்ட்டின் பிரகாரம் சேர்ப்பிக்கப்படுகிற ஒவ்வொரு ஸம்மனும் - அது யார் பட்சத்தில் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த கட்சிக்காரருடைய செலவிலே சேர்ப்பிக்கப்படவேண்டும்.

வாதி ஹாஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வாதியினுடைய தவறுதலினாலே சம்மன் சேர்ப்பிக்கப்படாவிட்டாலும் நடவடிக்கை.

30. பிரதிவாதி ஹாஜராகும்படி நிர்ணயிக்கப்பட்ட தினத்திலே—

(1) உபய கட்சிக்காரர்களும் ஹாஜராகாவிட்டாலும்,

(2) வாதி ஹாஜராகாமல் பிரதிவாதி மாத்திரம் ஹாஜராகி தாவாவை அவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும்,

(3) வாதியினுடைய தவறுதலினாலே சம்மன் சேர்ப்பிக்கப்படாதிருந்து, பிரதிவாதி ஹாஜராகாவிட்டாலும்,

வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடக்கூடாதென்று கிராமக்கோர்ட்டார் உத்தரவு செய்யாத பட்சத்தில், அந்த வியாஜ்ஜியம் தள்ளிவிடப்படும்.

வாதி ஹாஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொண்டால் நடவடிக்கை.

31. வாதி ஹாஜராகாமல் பிரதிவாதி மாத்திரம் ஹாஜராகி, தாவா முழுமையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது அவர் ஒப்புக்கொள்ளுகிற பட்சத்தில், அப்படி ஒப்புக்கொள்ளுவதற்கு ஒத்திருக்கும்படியாக கிராமக்கோர்ட்டார் பிரதிவாதியின் பேரில் தீர்ப்புசெய்யவேண்டும்; ஆனால், தாவாவில் ஒரு பாகமாத்திரம் ஒப்புக்கொள்ளப்படும் விஷயத்தில், வியாஜ்ஜிய விசாரணையை வேறொரு நாள் வரையிலே கோர்ட்டார் நிறுத்திவைக்கலாம்.

30 அல்லது 31-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவை காரணம் தெரிவிக்கப்படுவதன்மேல் ரத்துசெய்வது.

32. எந்த வியாஜ்ஜியமாகிலும் 30-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட பகுதியின்படியாவது (3) குறிப்பிட்ட பகுதியின்படியாவது தள்ளிவிடப்பட்டால், வாதியானவர் * (கால நிர்ணயச் சட்டத்துக்குட்பட்டு) மறுபடி வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்; வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடும்படி 30 - வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட பகுதியின் பிரகாரம் செய்யப்

---

* திருத்தியச்சிட்ட கால நிர்ணயச் சட்டத்தை சென்னை, வேப்பேரியிலுள்ள மதுகரவேணி விலாசதாரரிடம் வாங்கிப்பார்க்கவும்.

பட்ட உத்தரவின் தேதி முதற்கொண்டாவது 31-வது பிரிவின் பிரகாரம் தாவாவில் ஒரு பாகத்திற்குமாத்திரம் செய்யப்பட்ட டிக்ரியின் தேதி முதற்கொண்டாவது முப்பது தினங்களுக்குள் வாதியானவர் யாதொரு தகுந்த காரணத்தினாலே தாம் ஹாஜராவதற்குக் கூடாமையாய்விட்டதென்று கிராமக் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய்த் தெரிவித்தால், கோர்ட்டார் வியாஜ்ஜியம் தள்ளுபடியானதையாகிலும் டிக்ரியையாகிலும் ரத்து செய்யவேண்டியதுமல்லாமல், வியாஜ்ஜியத்தை நடத்துவதற்கு ஒருநாளை நியமிக்கவும் வேண்டும்.

பிரதிவாதியின் மேல் ஒருதலையாக செய்யப்பட்ட டிக்ரியை ரத்துபண்ணுவது.

33. யார்பேரில் ஒருதலையாக டிக்ரி செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பிரதிவாதியானவர்-தீர்ப்பை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான யாதொரு ப்ராஸஸ் என்னும் கட்டளையை நிறைவேற்றுகிற தேதிமுதல் முப்பது தினங்களுக்குள் கிராம கோர்ட்டுக்குத் தீர்ப்பை ரத்துபண்ணவேண்டுமென்று மனுவுசெய்துகொள்ளலாம்; ஸம்மனாவது நோடிஸாவது கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்படவில்லையென்றாகிலும், பிரதிவாதி ஹாஜராவதற்குத் தகுந்த யாதொரு காரணத்தினாலே கூடாமையாய்விட்டதென்றாகிலும் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால், அவர்கள் ஷை டிக்ரியை ரத்துபண்ணவேண்டியது மல்லாமல், வியாஜ்ஜியத்தை நடத்துவதற்கு ஒரு நாளை நியமிக்கவும் வேண்டும்.

எதிர் கட்சிக்காரருக்கு நோடிஸ் கொடாமல் எந்த டிக்ரியையும் ரத்து பண்ணக்கூடாதென்பது.

34. 32-வது அல்லது 33-வது பிரிவின்படி யாதொரு மனுவு செய்யப்படுவதன்மேல், எதிர் கட்சிக்காரருக்கு நோடிஸ் கொடாமல் எந்த டிக்ரியையும் ரத்துபண்ணக்கூடாது.

5-ம் அத்தியாயம்.

வியாஜ்ஜியங்களை விசாரணை செய்வதையும் வாபஸ் வாங்கிக்கொள்வதையும் ராஜியாய்ப் போவதையும், சாட்சிகளுக்கு ஸம்மன் பிறப்பிப்பதையும் அவர்களை விமரிசை செய்வதையும் குறித்து.

இரு கட்சிக்காரர்

35. பிரதிவாதி ஹாஜரானால், ப்ளெய்ன்டில் சொல்லப்பட்ட தாவாவை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரா வென்று கோர்ட்டார் அவரை விசாரணைசெய்து தெரிந்து

களும் ராஜாநாமாவத ன்மேல் நடவடிக் கை.

கொள்ளவேண்டும். அவர் அந்த தாவாவை ஒப்புக்கொண்டாலும், அந்த வியாஜ்ஜியத்தில் கட்சிக்காரர்கள் ராஜியாய்ப் போனாலும், அப்படி ஒப்புக்கொண்டதையாவது ராஜியாய்ப் போனதையாவது எழுதி ரெகார்ட் செய்து அதற்குக் கட்சிக்காரர்கள் கையெழுத்துப் போடவேண்டும்; மேலும், அதற்கு ஒத்திருக்கும்படியாக கோர்ட்டார் டிக்ரி பிறப்பிக்க வேண்டும். பிரதிவாதி அந்த தாவாவை ஒப்புக்கொள்ளாவிட்டால், தமக்குள்ள ஆட்சேபனைகளை வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ தெரிவிக்கும்படி அவருக்கு உத்தரவு பண்ணவேண்டும்; கோர்ட்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், (ஸ்டேட்மென்ட்) விவரப் பத்திரிகை எழுதி தாக்கல் செய்ய அவருக்கு சாத்தியமாயிருக்கும்படி வியாஜ்ஜியத்தை நிறுத்திவைக்கலாம்.

வியாஜ்ஜியத்தை தள்ளிக்கொள்வது.

36. வாதியானவர் வியாஜ்ஜியத்தைத் தள்ளிக்கொள்ள விரும்பினால், அவர் அதை எழுதி கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தவேண்டும்; அதன்மேல் கோர்ட்டார் அந்த வியாஜ்ஜியத்தை பயிலிலிருந்து அடித்துவிடவேண்டும்; அதே வியாஜ்ஜிய மூலத்தைக்குறித்து மறுபடியும் வியாஜ்ஜியம் கொண்டுவரலாகாது.

இன்ன படிக்கானல் வியாஜ்ஜியத்தைப் பிரமாணத்தின்மேல் பைசல்செய்யலாமென்பது.

37. இருகட்சிக்காரர்களில் எவராவது மறுகட்சிக்காரருடைய பிரமாணத்தின்மேல் வியாஜ்ஜியத்தைப் பைசல் செய்துகொள்ள மனமுள்ளவராயிருந்து, அந்த மறுகட்சிக்காரர் அதற்குச் சம்மதித்துப் பிரமாணஞ் செய்தால், அந்தப் பிரமாணத்திற்கு ஒத்தபடி கோர்ட்டார் தீர்ப்பு சொல்லவேண்டும்.

எதிர்க்கடன்.

38. சட்டப்படி பிரதிவாதிக்கு வாதி கொடுக்கவேண்டியதாயிருந்து அந்தப் பிரதிவாதி யாதொரு கிராமக்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடியதாயிருக்கிற யாதொரு தொகையைப் பிரதிவாதிகள் எதிர்க்கடனாகத் தெரிவிக்கலாம். அந்த எதிர்க்கடன் தாவா ஸ்தாபிதஞ் செய்யப்பட்டால், இருகட்சிக்காரர்களில் யாருக்காவது எவ்வளவுதொகை பாக்கியாயிருக்கிறதென்று கடைசியில் தெரியவருகிறதோ அவ்வளவு தொகைக்கு டிக்ரி பிறப்பிக்கவேண்டும்.

ஹாஜராயிராத சாட்சிகளை ஸம்மனனுப்பி வரவழைப்பது.

39. பிரதிவாதியின் ஸ்டேட்மென்ட் தெரிவிக்கப்பட்ட பின்பு, கோர்ட்டார் தாவாவின் உண்மையைக்குறித்துப் பரிசீலனை செய்யத் தொடங்கவேண்டியது மல்லாமல், இரு கட்சிக்காரராலும் கோரிக்கொள்ளப்பட்ட சாட்சிகளில் ஹாஜராயிராதவர்களை ஸம்மனனுப்பி வரவழைக்கவும் வேண்டும்.

சாட்சிகளுக்கு இன்னவிதமாய் ஸம்மன் சேர்ப்பிப்பது.

40. கிராமக் கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்வாசஞ்செய்கிற யாதொரு சாட்சியை வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது ஸம்மனனுப்பி வரவழைக்கலாம்; கோர்ட்டின் அதிகார எல்லைக்கு வெளியில் ஐந்துமைல் தூரத்திற்குள்ளாக வாசஞ் செய்கிற யாதொரு சாட்சியை எழுதிய ஸம்மன் மூலமாய் வரவழைக்கலாம்; அந்த ஸம்மனை அவர் யாருடைய அதிகார எல்லைக்குள் வாசஞ்செய்கிறாரோ அந்த கிராம முன்ஸிப் மூலமாய்ச்சேர்ப்பிக்க வேண்டும்; எந்த சாட்சியாவது கோர்ட்டின் அதிகார எல்லைக்கு வெளியில் ஐந்து மைலுக்கு மேற்பட்ட தூரத்தில் வாசஞ்செய்தால், கோர்ட்டார் சவால்கள் எழுதிக் கொடுக்கும்படிகட்சிக்காரர்களுக்கு உத்தரவுசெய்யலாம்; அப்படி கொடுக்கப்பட்ட சவால்களை அந்த சாட்சி யாருடைய அதிகார எல்லைக்குள் வாசஞ்செய்கிறாரோ அந்த கிராம முன்ஸிபுக்கு ஒரு கடிதமெழுதி அதோடு அனுப்பவேண்டும்: அந்த முன்ஸிபானவர் உடனே அந்த சாட்சியை ஸம்மனனுப்பி வரவழைத்து அந்த சவால்களின்பேரில் அவரை விமரிசை செய்யவேண்டியதுமல்லாமல், அவர் சொல்லும் ஜவாபை வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கிற கோர்ட்டுக்கு அனுப்பிவிடவும் வேண்டும்.

இன்ன விஷயங்களில் சவால்கள் அனுப்புவது.

ஹாஜராகி சாட்சியம் சொல்லவாவது தஸ்தவேஜைக்கொண்டுவந்து காட்டும்படியாவது ஸம்மன் பிறப்பிப்பது.

41. ஸம்மனிலே, அது யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த நபர் ஹாஜராகி சாட்சியம் சொல்லவேண்டுமென்றாவது தஸ்தவேஜைக்கொண்டு வந்து காட்டவாகிலும் காட்டுவிக்கவாகிலும்வேண்டுமென்றாவது உத்தரவு பண்ணலாம்.

சில ஸ்திரீகளும் வேறே சில நபர்களும் கோர்ட்டில் ஹாஜராக வேண்டியதில்லையென்று விலக்கு.

42. தேசாசாரப்படிக்கும் வழக்கப்படிக்கும் பஹிரங்கத்தில் வந்து ஹாஜராகும்படி வரவழைக்கக்கூடாத ஸ்திரீகளையும், கோர்ட்டிலே நேரில் ஹாஜராவதினின்றும் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிற நபர்களையும் வியாதியினாலாவது தௌர்ப்பல்யத்தினாலாவது ஹாஜராகக்கூடாதவராயும் ஹாஜரானால் மிகுந்த அசௌகரியத்துக்குள்ளாக வேண்டியவராயுமிருக்கிற யாதொருவரையும் ஸம்மனனுப்பி வரவழைக்கக்கூடாது. ஆனால், அப்படிப்பட்ட யாதொரு நபரின் சாட்சியம் அவசியமாயிருக்கும்போது, அப்படிப்பட்டவரை அவருடைய இருப்பிடத்தில் கிராமக்கோர்ட்டார் விசாரணை செய்யவேண்டும்.

சாட்சிகளை விசாரணை பண்ணுவது.

43. சாட்சிகளைப் பிரமாணத்தின்மேலாவது பிரமாண பூர்வகமான உறுதிமொழியின்மேலாவது விசாரணைசெய்யவேண்டும். ஆனால், சாட்சிகளின் வாக்குமூலத்தை கிராமக்கோர்ட்டார் எழுதிக்கொள்ளவேண்டுமென்ற அவசியமில்லை.

ராஜியாய்ப் போகும்பொருட்டாவது வேறே காரணத்தினாலாவது வியாஜ்ஜியத்தை நிறுத்திவைப்பது.

44. கட்சிக்காரர்கள் (விவாத) விஷயத்திலே ராஜியாய்ப் போவார்கள் போலிருக்கிறதென்று தெரியவந்தாலும் தகுந்த வேறே யாதொரு காரணம் இருந்தாலும், கிராமக்கோர்ட்டார்-கட்சிக்காரர்களுக்கு எதிரிலாவது பிரதிவாதி ஆஜராகாத விஷயங்களிலே வாதிக்கு எதிரிலாவது ஒரு தினத்தை நிச்சயித்து அந்த தினம்வரையில் வியாஜ்ஜிய விசாரணையை நிறுத்திவைக்கலாம். அந்த தினத்தில் கட்சிக்காரர்களாவது அவர்களில் எவராவது ஹாஜராகத் தவறிப்போனால், கிராமக்கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைப் பைசல்செய்வதைக் குறித்து 30, 31-வது பிரிவுகளினால் நிர்ணயிக்கப்பட்ட விதங்களில் எதன்படிக்காவது வியாஜ்ஜியத்தைப் பைசல் செய்யத் தொடங்கலாம், அல்லது தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற வேறே உத்தரவு பிறப்பிக்கலாம்.

6 - ம் அத்தியாயம்.

டிக்ரியையும் அதை நிறைவேற்றுவதையுங் குறித்து.

விசாரணைசெய்து முடிந்தபின்பு கோர்ட்டார் டிக்ரி பிறப்பிப்பது.

45. கட்சிக்காரர்களையாவது அவர்களுடைய ஏஜெண்டுகளையாவது விசாரணைசெய்தும் இரண்டுபக்கத்து சாட்சியத்தையும் யோசித்தும் ஆனபிறகு கிராமக்கோர்ட்டார் நியாயமாகவும் நடுநிலையாகவும் மனச்சாட்சிக்குப் பொருந்தினதாகவும் காணுகிறபடி டிக்ரி பிறப்பிக்கவேண்டும்.

டிக்ரியில் எழுதவேண்டியவை.

46. டிக்ரியிலே, வியாஜ்ஜிய நம்பரையும் கட்சிக்காரர்களின் பெயரையும் தாவாவின் விவரங்களையும் விசாரிக்கை செய்யப்பட்ட சாட்சிகளின் பெயரையும் பார்வையிடப்பட்ட (எக்ஸிபிட்டுகள்) ஆதாரங்கள் இன்னவையென்பதையும் அதன்மேல்செய்த தீர்மானத்தையும் அந்தத் தீர்மானம் செய்வதற்குள்ள ஏதுக்களையும் கண்டெழுதவேண்டும். தீர்மானஞ் செய்யப்பட்ட பணத்தொகை இவ்வளவென்பதையும், ஒப்பிக்கப்படவேண்டிய அசையும்பொருள் இன்னதென்பதையும், ஒப்பிக்கத் தவறும்பட்சத்தில் அதற்கு பர்த்தியாக செலுத்தவேண்டிய தொகை இவ்வளவென்பதையும், வியாஜ்ஜியச்செலவு இவ்வளவென்பதையும், அந்தச் செலவு இன்னின்ன கட்சிக்காரர்களால் இவ்வளவிவ்வளவு செலுத்தப்படவேண்டியதென்பதையும் அந்த டிக்ரியில் குறிக்கவேண்டும்.

டிக்ரி எந்தத் தேதியில் பிறப்பிக்கப்படுகிறதோ அந்தத்தேதிபோட்டு அதில் கிராம முன்ஸிப் கையெழுத்து செய்யவேண்டும். யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டாரால் வியாஜ்ஜியம் விசாரணைசெய்யப்பட்டிருக்கும் விஷயத்தில், டிக்ரியிலே அந்த பஞ்சாயத்து கோர்ட்டைச் சேர்ந்த எந்த மெம்பர்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறார்களோ அவர்கள் கையெழுத்து செய்யவேண்டும்.

அதன் பிறகு அந்த டிக்ரிக்கு ஒரு நகலை நிர்ணயிக்கப்பட்ட விதமாய் ஒவ்வொரு கட்சிக்காரரிடத்திலும் ஒப்பிக்கவேண்டும்.

டிக்ரியில் வட்டி தீர்மானிக்கலாம்

47. ரொக்கத்துக்காககொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்களிலே, டிக்ரியான தொகைக்கு வியாஜ்ஜிய தேதி முதல் பணம் செலுத்தப்படுகிற தேதி வரையில் வருஷம்

அல்லது வாயிதாக்க ளாக செலுத்தும் படி உத்தரவுசெய்ய லாமென்பது.

ஒன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டுக்கு அதிகப் படாமல் வட்டி செலுத்தப்படவேண்டுமென்று கிராமக்கோர்ட்டார் டிக்ரி பண்ணலாம்.

கிராமக் கோர்ட்டார் பணம் செலுத்தும்படி டிக்ரி செய்கையில் அதை மேற்கண்ட விதப்படி வட்டியுடனேயாகிலும் வட்டியில்லாமலாகிலும் வாயிதாக்களாகச் செலுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

இன்ன கோர்ட் டாரால் டிக்ரி நிறை வேற்றப்படலா மென்பது.

48. டிக்ரியை, அதைச்செய்த கிராமக்கோர்ட்டாராவது, நிறைவேற்றப்படுவதற்காக இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி அது யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்தக் கிராமக் கோர்ட்டாராவது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபாவது நிறைவேற்றவேண்டும்.

குறித்த யாதொரு அசையும் பொருளைப்பற்றிய டிக்ரியை இன்னபடி நிறைவேற்றுவது.

49. குறித்த யாதொரு அசையும் பொருள் விஷயமாய் டிக்ரி செய்யப்படுமாகில், அந்தப்பொருளைக் கைப்பற்றி டிக்ரி பெற்றவருக்கு அதை ஒப்பிப்பதனால் டிக்ரியை நிறைவேற்றலாம். அந்தப் பொருளைக் கைப்பற்றக்கூடாவிட்டால், அதற்கு பர்த்தியாகவென்று டிக்ரி செய்யப்பட்டிருக்கிற பணத்தைச் செலுத்தும்படி நிர்ப்பந்திப்பதனால் டிக்ரியை நிறைவேற்றவேண்டும்.

டிக்ரியின்படியாவது வேறே ஒழுங்கு ஏற்பாட்டின்படியாவது பணம் செலுத்துவதை முன்ஸிபுக்கு எதிரில் செலுத்துவது அல்லது ரெகார்ட் பண்ணுவது.

50. யாதொரு கிராமக்கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்ரியின்படி செலுத்தப்படவேண்டிய சகல தொகையும் அந்த டிக்ரியை நிறைவேற்றுவது யாருடைய அலுவலோ அந்த கிராம முன்ஸிபுக்கு எதிரில், டிக்ரி பெற்றவருக்காவது எழுத்து மூலமாக பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டுக்காவது செலுத்தப்பட வேண்டும். அப்படிக்கில்லாமல் டிக்ரி பெற்றவருக்குத் திருப்திகரமாய் அந்த டிக்ரியைக்குறித்து வேறே விதமாய் ஒழுங்கு செய்யப்பட்டால், அந்த ஒழுங்கு இப்படிப்பட்டதென்பதை எழுதி ரெகார்ட்செய்து, அந்த டிக்ரி பெற்றவராவது அவருடைய ஏஜெண்டாவது மேற்படி கிராம முன்ஸிபுக்கு எதிரில் கையெழுத்து

செய்யவேண்டியதுமல்லாமல், அந்த கிராம முன்ஸிப் அதற்கு அத்தாட்சிக் கையெழுத்துபோடவும் வேண்டும்.

அப்படி பணம் செலுத்தப்பட்டதென்பதையாவது ஒழுங்குசெய்யப்பட்டதென்பதையாவது கிராமமுன்ஸிப் டிக்ரியின்மேல் எழுதி எண்டார்ஸ் செய்யவேண்டியதுமல்லாமல், 10-வது பிரிவில் சொல்லியிருக்கிற வியாஜ்ஜிய ரெஜிஸ்டர் புஸ்தகத்தில் பதிவு பண்ணவும் வேண்டும்.

யாதொரு டிக்ரியின்படி பணம் செலுத்தப்பட்டாலும் யாதொரு டிக்ரியைக் குறித்து முழுவதுக்குமாவது ஒரு பாகத்திற்காவது ஒழுங்கு செய்யப்பட்டாலும், இந்தப் பிரிவில் நிர்ணயித்திருக்கிற விதமாயாகிலும் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டிலாகிலும் பணம் செலுத்தப்பட்டாவது ஒழுங்கு ஏற்பாடு செய்யப்பட்டாவது அது பதிவுபண்ணப்பட்டாவது இருந்தாலொழிய, அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தீர்ப்பான கடனாளியைப் பிடிக்கவும் அசையாப்பொருளை ஜப்திபண்ணவுங் கூடாதென்பது.

51. 66-வது 67-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு கிராமக்கோர்ட்டாருடைய டிக்ரியை நிறைவெற்றுவதற்காக, தீர்ப்பான யாதொரு கடனாளியைப் பிடிக்கவுங்கூடாது, யாதொரு அசையாப்பொருளை ஜப்தி செய்யவுங் கூடாது.

அசையும் பொருளை ஜப்தி பண்ணுவது.

52. டிக்ரி பெற்றவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கிராமக்கோர்ட்டார் தங்களுடைய அதிகார எல்லைகளுக்குள் தீர்ப்பான கடனாளிக்குச் சொந்தமாயிருக்கிற எந்த அசையும்பொருளை டிக்ரி பெற்றவர் காட்டுகிறாரோ அதை டிக்ரியின்படி செலுத்தப்படவேண்டிய தொகையின் அளவுக்கு ஜப்திபண்ணவேண்டும். ஆனால், 1908-ம் ௵ த்து ஸிவில் ப்ரோஸீஜர் கோட் * 60-வது பிரிவின்படி ஜப்திசெய்யப்படுவதினின்றும் நிவாரணையாயிருக்கிற எந்த சொத்தும் அந்தப்படி ஜப்திசெய்யப்படுவதற்கு உள்ளாகாது.

---

* ஸிவில் ப்ரோஸீஜர் கோட் புதிய பதிப்பு, சென்னை-வேப்பேரியிலுள்ள மதுகரவேணி விலாசதாரரிடம் கிடைக்கும்.

தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிருந்தால் இன்னபடி ஜப்திபண்ணுவது.

53. தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்தில் பொருள் இருக்கும்பட்சத்தில், அதை நேராய்க் கைப்பற்றி ஜப்தி பண்ணவேண்டும்; மேலும், கிராம முன்ஸிப் அதன் பத்திரத்திற்காக ஏற்பாடு செய்யவேண்டும்; கேட்கப்படும்போது அந்தப்பொருளை ஹாஜர்ப்படுத்துவதாக எழுத்து மூலமாய்ப் போதுமான ஜாமீன் கொடுக்கப்படும்பட்சத்தில், அதைத்தீர்ப்பான கடனாளியின் சொத்திலே விட்டுவைக்கலாம். கேட்கப்படும்போது பொருள் ஹாஜர்ப்படுத்தப்படாவிட்டால் ஜாமீன்தாரர்மேல் அந்த டிக்ரியை, ஹாஜர்ப்படுத்தப்படாத பொருளின் பெறுமான தொகைக்கு நிறைவேற்றலாம்.

தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிராவிட்டால் இன்னபடி ஜப்திபண்ணுவது.

54. தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்தில் பொருள் இராதபட்சத்திலே, அந்தப்பொருள் யாருடைய ஸ்வாதீனத்தில் இருக்கிறதோ அந்த நபர் அதைத் தீர்ப்பான கடனாளிக்குக் கொடுத்துவிடக்கூடாதென்று எழுதிய கட்டளை மூலமாய் ஜப்திபண்ணவேண்டும்.

கடன் தொகைகளை இன்னபடி ஜப்தி பண்ணுவது.

55. தீர்ப்பான கடனாளிக்கு பாக்கியாயிருக்கிற கடன்களையும் தொகைகளையும் ஜப்திசெய்வது எப்படி என்றால், கிராமக்கோர்ட்டாருடைய மறு உத்தரவு வரையில் தீர்ப்பான கடனாளி அந்தக் கடனைப் பற்றிக்கொள்ளவோ தொகையைப்பெற்றுக்கொள்ளவோ கூடாதென்றும், கடன் வாங்கியிருப்பவர் அதைச்செலுத்தக்கூடாதென்றும் எழுதிய கட்டளை மூலமாய் ஜப்திபண்ணவேண்டும். அசையாப்பொருளின்மேல் பொறுப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு கடனை ஜப்திபண்ணவாகிலும் விற்கவாகிலும் கிராமக்கோர்ட்டுக்கு இந்தப் பிரிவிலுள்ள தேதனாலும் அதிகார முண்டாவதாக எண்ணக்கூடாது.

ஜப்தி செய்யப்பட்ட பின்பு பொருளை ஒன்றுக்கும்

56. நேராய்க் கைப்பற்றியாவது எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டாவது ஜப்திசெய்யப்பட்டபின்பு, ஜப்தியிலிருக்கிறவரையில் அந்த ஜப்தி பொருளை அது விக்கிரயம் - தானம் - அடைமானம் முதலிய

ளாகப் பராதீனஞ் செய்வது செல்லாதென்பது.

எவ்விதத்திலாவது உள்ளுக்குள்ளாகப் பராதீனஞ் செய்யப்பட்டாலும், தீர்ப்பான கடனாளிக்கு அந்தக்கடன் செலுத்தப்பட்டாலும், அது ஜப்தியின்படி எந்த தாவாக்களை அமுலுக்குக் கொண்டுவரலாமோ அந்த தாவாக்களுக்கெல்லாம் சம்பந்தப்பட்டமட்டில் செலாவணியற்றதாகும்.

ஜப்திசெய்யப்பட்ட பொருளின் மேல் கொண்டுவரப்படும் தாவாவைக் குறித்து விசாரணை பண்ணுவது.

57. யாதொரு டிக்ரியை நிறைவேற்றும்பொருட்டு ஜப்திசெய்யப்பட்ட பொருளுக்கு ஏதாவது தாவா செய்யப்பட்டால், கிராமக்கோர்ட்டார் அந்த தாவாவைக் குறித்து விசாரணை செய்யவேண்டும்; மேலும், அந்தப்பொருளை விற்கும்படியான சுதந்தரம் தீர்ப்பான கடனாளிக்கு இல்லையென்று தெரியவந்தால், அதை ஜப்தியிலிருந்து விடுதலை செய்யவேண்டும்.

ஜப்திசெய்யப்பட்ட பின்பு பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் ஒரு தினத்திலே பொருளைவிற்பதும் விற்பனையைப் பிரசித்தப்படுவத்துவதும்.

58. ஜப்திசெய்யப்பட்ட பின்பு கூடுமான சீக்கிரத்திலே கிராமக்கோர்ட்டார் - ஜப்தி செய்யப்பட்ட பொருளை விற்பனை செய்வதற்காக ஜப்தி தேதி முதல் பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் ஒரு தினத்தை நிச்சயிக்கவேண்டியதுமல்லாமல், அந்த உத்தேசமான விற்பனையைக் குறித்து இஸ்தியார் எழுதி அதைக் தங்களுடைய கோர்ட்டுக்கு வெளிப்புறத்தில் ஒட்டுவிக்கவும்வேண்டும். மேலும், விற்பனைக்கு முன்னிட்டு அதைக்குறித்து தண்டோரா போட்டுப் பின்னும் பிரசித்தப்படுத்தவேண்டும்.

விலக்கு.

ஆனல் (1) தீர்ப்பான கடனாளியின் எழுத்து முலமான சம்மதியின் மேலாவது, (2) கைப்பற்றப்பட்ட பொருள் சீக்கிரமாகவும் இயற்கையாகவும் அழிந்துபோகத் தக்கதா யிருக்கும்போதாவது, (3) அதை பத்திரமாய் வைத்திருப்பதற்குண்டான செலவு அதன் கிரயத்திற்கு மேற்படுகிறதாயிருக்கும் போதாவது, கோர்ட்டார் தண்டோராபோட்டு கிரமமாய் நோடிஸ் கொடுத்தபின்பு, ஜப்தி தேதி முதல் பதினைந்து தினங்களுக்குள் எப்போதாகிலும் ஜப்திபொருளை விற்பனை செய்யலாம். இப்படிசெய்யும் விஷயத்தில், விற்றுவந்த பணத்தை டிக்ரிகளை நிறைவேற்றுகையில் ஜப்திபண்ணப்பட்ட தொகைகளை செலுத்துவதற்காக இதில் பின்

4

ளில் சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு கோர்ட்டார் வைத்திருக்கவேண்டும்.

விற்பனையில் நடவடிக்கை

59. விற்பனைக்காக நிச்சயிக்கப்பட்ட தினத்திலே, கிராம முன்ஸிபுக்கு எதிரில் அந்தப்பொருள் பஹிரங்கமாய் ஏலம்போடப்பட்டு உயர்ந்த விலைக்குக் கேட்கிறவருக்கு விற்பனை செய்யப்படும். அந்த விலை தாமதமில்லாமல் உடனே செலுத்திவிடப்படவேண்டும்; அந்தப்படி செலுத்தப்படாவிட்டால் அந்தப்பொருள் மறுபடி ஏலம் போடப்படும்.

கொள் கிரயம் செலுத்தப்படுவதன்மேல், கோர்ட்டார் அதற்கு ரசீது கொடுக்கவேண்டும்; அதனுடன் அந்த விக்கிரயம் அறுதியாகும்.

மறு ஏலத்தில் ஏதாவது நஷ்டம் உண்டானால், அது கடனுக்குத் தீர்ப்புபெற்றவராகிலும் தீர்ப்பான கடனாளியாகிலும் கேட்டுக்கொள்ளும்பட்சத்தில், பணம் கட்டத் தவறிப்போனவர்மேல் அதற்காக டிக்ரி செய்யப்பட்டிருந்தாற்போல் அவரிடத்தில் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

விற்பனையை நிறுத்திவைக்க அதிகாரம்.

60. இந்த ஆக்டின்படி பிரசித்தஞ்செய்யப்பட்ட யாதொரு விற்பனையை, கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றும்பட்சத்தில், குறித்த இன்ன தினத்தில் நடத்தவேண்டுமென்று நிறுத்திவைக்கலாம்; அதைக் குறித்து 58-வது பிரிவில் நிர்ணயித்திருக்கிறவிதமாய் ஜனங்களுக்குப் பிரசித்தப்படுத்தவேண்டும்.

கிராம முன்ஸிபும் மற்ற உத்தியோகஸ்தர்களும் விற்கப்படும் பொருளை விலைகேட்கவாவது விலைக்கு வாங்கவாவது கூடாதென்பது.

61. இந்த ஆக்டின்படி செய்யப்படும் யாதொரு விற்பனை சம்பந்தமாய் யாதொரு அலுவலை நடத்தவேண்டிய கிராம முன்ஸிபாவது வேறே உத்தியோகஸ்தராவது அப்படிப்பட்ட ஏலத்தில் விற்கப்பட்ட யாதொரு பொருளை நேராகவாகிலும் நேராயல்லாமல் மற்றப்படியாகிலும் விலை கேட்கவுங்கூடாது அதில் யாதொரு சுதந்தரத்தை அப்படி அடையவுங் கூடாது.

பாக்கித் தொகையும் செலவும் செலுத்துக்கொண்டுவரப்பட்டால் விற்பனையை நிறுத்துவது.

62. ஏலத்தில் பொருளைவிடுவதற்கு முன்னமே, டிக்ரியின்படி பாக்கியாயிருக்கிற தொகையையும் விற்பனைச்செலவையும் கிராமமுன்ஸிபிடத்தில் கொடுக்கவந்தால் இந்த ஆக்டின்படி நடத்துகிற பிரதிசொத்து விற்பனையையும் நிறுத்திவிடவேண்டும்.

விற்றுவந்தபணத்தைப் பகிர்ந்துகொடுப்பது.

63. (டிக்ரியை) நிறைவேற்றி வசூல் செய்யப்பட்ட பணத்திலிருந்து நிறைவேற்றுவதற்குப் பிடித்த செலவை, முதலில் செலுத்தவேண்டும்; டிக்ரி பெற்றவருக்குச் சேரவேண்டிய தொகையைப் பின்புசெலுத்தவேண்டும். மிகுதி ஏதாவது நின்றால் அதைத்தீர்ப்பான கடனாளிக்குச் செலுத்திவிடவேண்டும்.

நேராய்க் கைப்பற்றப்பட்ட பொருளைக் கிரயத்துக்கு ஒப்பித்துவிடுவது.

64. விற்கப்பட்ட பொருள் ஜப்தியில் நேராய் கைப்பற்றப்பட்ட பொருளாயிருந்தால், அதைக் கிரயதாரருக்கு ஒப்பித்துவிடவேண்டும்.

மற்ற விஷயங்களில் இன்னபடி கிரயதாரருக்குப் பொருளை ஒப்பித்துவிடுவது.

65. விற்கப்பட்ட பொருளானது தீர்ப்பான கடனாளியில்லாத வேறே யாதொரு நபரின் ஸ்வாதீனத்திலிருந்தாலும், தீர்ப்பான கடனாளிக்கு எந்த நபராவது கொடுக்கவேண்டிய கடனாயிருந்தாலும், கிரயதாரரைத் தவிர வேறே எவருக்காவது பொருளின் ஸ்வாதீனத்தை ஒப்பிக்கக்கூடாதென்றாகிலும் கடனை செலுத்தக்கூடாதென்றாகிலும் மேற்படி நபருக்கு எழுத்து மூலமாய் நோடிஸ் கொடுப்பதனாலே அந்தப்பொருள் கிரயதாரருக்கு ஒப்பிக்கப்படவேண்டும்; மேலும் ஜப்திசெய்யும்போது தீர்ப்பான கடனாளிக்கு அந்தப்பொருள் அல்லது கடனில் என்ன சுதந்தரம் இருந்ததோ அந்த சுதந்தரம் கிரயதாரருக்கு சித்திக்கவேண்டும்.

நிறைவேற்றுவதற்காக டிக்ரியை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கு அனுப்பலாமென்பது.

66. யாதொரு கிராமக்கோர்ட்டாரால் செய்யப்பட்ட எந்த டிக்ரியையாகிலும், டிக்ரி பெற்றவர் விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேல், நிறைவேற்றப்படுவதற்காக டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபினிடத்தில் அனுப்பலாம்; அவர் அதைத் தம்மால் செய்யப்பட்ட டிக்

தியாயிருந்தாற்போலவே நிறைவேற்றலாம், அல்லது பிரதிவாதிக்கு வேறெந்த கிராமத்தில் அசையும்பொருள் இருக்கிறதென்று தெரிவிக்கப்படுகிறதோ அந்த கிராமத்துக் கோர்ட்டாருக்கு நிறைவேற்றப்படுவதற்காக அதை அனுப்பலாம். அந்தக்கோர்ட்டார் அந்த டிக்ரி தங்களால் செய்யப்பட்டிருந்தாற்போலவே நடவடிக்கை நடத்தவேண்டும்.

யாதொரு டிக்ரியை நிறைவேற்றும் அலுவலை டிஸ்ட்ரிக்ட் முனசிப் வரவழைத்துக் கொள்ளலாமென்பது.

67. யாதொருடிக்ரியை நிறைவேற்றும் அலுவலை யாதொரு கிராமக் கோர்ட்டிலிருந்து வரவழைத்துக்கொண்டு, அந்த டிக்ரி தம்மால் செய்யப்பட்டிருந்தாற்போலவே அதைத் தாமே நிறைவேற்ற டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கு அதிகாரமுண்டு.

7-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த கட்சிக்காரர் இறந்துபோனதன்மேல் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால், இறந்துபோனவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியை ரெகார்டில் பதிவுசெய்து கொள்ளலாமென்பது.

68. வியாஜ்ஜியத்தில் டிக்ரிசெய்யப்படுவதற்கு முன்னமே வாதியாவது பிரதிவாதியாவது இறந்துபோனால், அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியின் பெயரை எதிர் கட்சிக்காரராகிலும் அந்த சட்ட சம்மதமான பிரதிநிதியாகிலும் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் இறந்துபோனவருக்கு பர்த்தியாக ரெகார்டில் எழுதிக்கொள்ளலாம்; ஆனால். இறந்துபோன பிரதிவாதியிடத்திலிருந்து அடையப்பட்டு கிரமமாய் வகைசொல்லப்படாதிருக்கிறஆஸ்தியின் பெறுமான தொகைக்கு அதிகமாக அந்தப் பிரதிவாதியின் சட்டசம்மதமான பிரதிநிதியின்மேல் டிக்ரி செய்யக்கூடாது.

விண்ணப்பம் செய்து கொள்ளப்படாவிட்டால் வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடுவது.

69. வாதியாவது பிரதிவாதியாவது இறந்துபோன தேதிமுதற்கொண்டு அறுபது தினங்களுக்குள் அப்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்படாவிட்டால், வியாஜ்ஜியத்தை தள்ளிவிடவேண்டும்; மேலும் அதே வியாஜ்ஜிய மூலத்தைக்குறித்து மறுபடி வியாஜ்ஜியம் கொண்டுவர அனுமதி கொடுக்கக்கூடாது.

வாதிகள் அல்லது பிரதிவாதிகள் ஒருவருக்கு மேற்பட்டிருந்தால், ஜீவித்திருக்கிறவர் கேட்டுக் கொள்ளுவதனுலாவது அவர்மேலாவது வியாஜ்ஜியம் நடப்பது.

70. ஒருவரல்லாமல் பல வாதிகளாவது பிரதிவாதிகளாவதிருந்து, அவர்களில் எவராவது இறந்துபோய், அவருடைய பிரதிநிதி மேற்சொல்லியபடி சேர்க்கப்படாமலிருந்தால், ஜீவித்திருக்கிற வாதி அல்லது வாதிகள் கேட்டுக்கொள்வதனுலாகிலும் ஜீவித்திருக்கிற பிரதிவாதி அல்லது பிரதிவாதிகளின்மேலாகிலும் வியாஜ்ஜியம் நடக்கவேண்டும்.

டிக்ரி பெற்றவர் இறந்துபோனுல், அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியை அவருக்கு பார்த்தியாகச்சேர்க்கலாமென்பது.

71. டிக்ரி பெற்றவர் டிக்ரி பூர்த்தியாய் நிறைவேற்றப்படுவதற்குமுன் இறந்துபோனுல், அவருடைய சட்டசம்மதமான பிரதிநிதியானவர் - இறந்துபோனவருக்கு பார்த்தியாக தம்முடைய பெயரை டிக்ரி பெற்றவராகச் சேர்க்கும்படி கிராமக்கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அதன்மேல், தீர்ப்பான கடனுளிக்குநோட்டீஸ் கொடுத்தபின்பு கோர்ட்டார்-அந்த விண்ணப்பதாரர் இறந்துபோனவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதிதானென்று திருப்தியாய்த் தெரிந்துகொண்டால், ரெகார்டிலே அவருடைய பெயரை டிக்ரிபெற்றவராக எழுதிக்கொள்ளவேண்டும்.

தீர்ப்பான கடனுளி இறந்துபோனுல், அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியின் மேல் டிக்ரியை நிறைவேற்றலாமென்பது.

72. தீர்ப்பான கடனுளி டிக்ரி பூர்த்தியாய் நிறைவேற்றப்படுவதற்குமுன் இறந்துபோனுல், டிக்ரிபெற்றவர் விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேல், தீர்ப்பான கடனுளியிடத்திலிருந்து அடையப்பட்டு கிரமமாய் வகைசொல்லப்படாதிருக்கிற ஆஸ்தி எவ்வளவோ அவ்வளவுக்கு அவருடைய சட்ட சம்மதமான பிரதிநிதியின்மேல் அந்த டிக்ரியை நிறைவேற்றலாம்.

கிராமக் கோர்ட்டாருடைய நடவடிக்கைகளை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் புனராலோசனை பண்ணுவது.

73. யாதொரு கிராமக்கோர்ட்டின் டிக்ரி அல்லது உத்தரவினுலே அநியாயமடைந்ததாக எண்ணுகிற யாதொரு கட்சிக்காரர் அந்த டிக்ரி அல்லது உத்தரவு தேதிமுதல் அறுபது தினங்களுக்குள் மனு கொடுத்துக்கொள்வதன்மேல், டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபானவர்—

கிராமக்கோர்ட் லஞ்சம் வாங்கினதென்கிற ஹேதுவின்மேலா வது முற்றிலும் பாரபட்சம் பண்ணினதென்கிற ஹேது வின்மேலாவது, துர்நடத்தை நடந்ததென்கிற ஹேதுவின் மேலாவது,

சட்டப்படி அந்தக் கோர்ட்டுக்கு ஏற்படாத அதிகாரத்தை அந்தக் கோர்ட் செலுத்தியிருக்கிறதென்கிற ஹேதுவின் மேலாவது மற்றப்படி சட்ட விரோதமாயாகிலும் முக் கிய முறை பிறழ்வாயாகிலும் நடந்ததென்கிற ஹேது வின்மேலாவது,

அந்த டிக்ரி அல்லது உத்தரவு ஸ்பஷ்டமாய் நீதிக்கேடாக இருக் கிறதென்கிற ஹேதுவின்மேலாவது,

அப்படிப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவைத் தள்ளிவிட்டு, நமக்கு யுக்தமாகத் தோற்றுகிற வேறே டிக்ரி அல்லது உத்தரவைப் பிறப்பிக் கலாம்; ஆனால், யாதொரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்ரியையாவது உத்தரவையாவது எதிர்க் கட்சிக்காரருக்கு நோடீஸ் கொடாமல் தள்ளிவிடக்கூடாது. அப்படிப்பட்ட யாதொரு மனு பைசல் செய்யப்படுகிற வரையில், அந்த டிக்ரி அல்லது உத்தரவு நிறை வேற்றப்படுவதை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் நிறுத்திவைக்கலாம்.

அறுபது தினங்களுக்குப் பின்பு இந்தப் பிரிவின்படி மனுசெய்து கொள்ளப்பட்டால், அந்த ஆலசியத்தைக்குறித்து தெரிவிக்கப்படும் காரணம் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்குத் திருப்திகரமாயிருக்கும் பட்சத் தில், அவர் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்குத் தவிர யாதொரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட ஒவ்வொரு டிக்ரியும் உத்தரவும் முடிவானதாகும்.

டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கு ரிபோர்ட் பண்ணலாமென்பதும் சில விஷயங்களில் ரிபோர்ட் பண்ணவேண்டுமென்பதும்.

74. டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபானவர் 73-வது பிரிவின்படி யாதொரு டிக்ரி அல்லது உத்தரவைத் தள்ளிவிடும்போதெல்லாம், அவர் அந்த விஷயத்தை டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கு ரிபோர்ட் பண்ணலாம்; (கிராமக்கோர்ட்) லஞ்சம் வாங்கினதென்கிற ஹேதுவின்மேலாவது முற்றிலும் பாரபட்சம் பண்ணினதென்கிற ஹேதுவின்மேலாவது துர்நடத்தை நடந்ததென்

கிற ஹேதுவின்மேலாவது யாதொரு டிக்ரி அல்லது உத்தரவைத் தாம் தள்ளிவிடும் ஒவ்வொரு விஷயத்தையும் அந்தப்படி ரிபோர்ட்டு பண்ணவேண்டும்.

நமூனுக்கள் ஏற்படுத்த ஹைகோர்ட்டாருக்கும், ரெகார்டுகளைப் பரிசோதனைசெய்ய டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கும் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்கும் அதிகாரம்.

75. கிராமக்கோர்ட்டுகளில் உபயோகிக்கப்படவேண்டிய நமூனுகளையும் அந்தக் கோர்ட்டார் அனுப்பவேண்டிய ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளையும் ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாவது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபாவது கிராமக்கோர்ட்டுகளின் ரெஜிஸ்டர்களையும் ரெகார்டுகளையும் எப்போதாவது வரவழைத்துப் பார்வையிடலாம்.

8-ம் அத்தியாயம்.

கிரிமினல் அதிகார வரம்பு.

சில குற்றங்களைப்பிடித்துப் பரிசீலனைசெய்ய பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குப் பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்கலாமென்பது.

76. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டாருடைய விசாரணை அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் அடியிற்கண்ட குற்றங்கள் செய்யப்படும்போது அப்படிப்பட்ட சகல குற்றங்களையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் பிடித்துப் பரிசீலனைசெய்ய, ஜில்லா கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யப்படும் உத்தரவு மூலமாய், அந்த பஞ்சாயத்து கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கலாம் ;—

(a) * இந்தியன் பினல் கோட் 160, 277, 283, 290, 323, 334, 352, 358, 504, 510-வது பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள் ;

(b) பத்து ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ள சொத்தின் விஷயமாய்ச்செய்து, இந்தியன் பினல் கோட் 379-வது பிரி

---

* இந்தியன் பினல் கோட், (புதிய பதிப்பு) சென்னை—வேப்பேரியிலுள்ள மதுகரவேணி விலாச டிபோதாரரிடம் ௭ ௯ - ௬ ௫ ௦.

வின்படி தண்டிக்கப்படத்தக்கவைகளாயிருக்கும் குற்றங்கள்; ஆனால், குற்றவாளி திருட்டுக்குற்றம் செய்தவனென்று முன்னமே தீர்மானிக்கப்படாதவனாயிருக்கவேண்டும்.

(c) இந்தியன் பீனல்கோட் 426-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள்; ஆனால், அவைகளினால் ஏற்பட்ட நஷ்டம் அல்லது சேதமானது பத்து ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கவேண்டும்;

(d) பட்டணங்களில் நடக்கும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைப்பற்றிய 1889-ம் வருஷத்து டவுன் (நியூசன்ஸ்) ஆக்டின் 3-வது பிரிவைச்சேர்ந்த (9), (11), (12) குறிப்பிட்ட பகுதிகளின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள்.

(e) இந்தியன் பீனல்கோடின்படியாவது யாதொரு விசேஷ அல்லது பிரதேச சட்டத்தின்படியாவது குற்றமென்று குறிப்பிடப்பட்டு அபராத தண்டனை மாத்திரமாகிலும் அபராதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குக் காவல் தண்டனை மாத்திரமாகிலும் இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படக்கூடிய வேறே யாதொரு குற்றம்.

ஆனால், (b), (c) குறிப்பிட்ட பகுதிகளில் கண்ட குற்றங்களின் விஷயத்திலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அந்தக்கேஸுகளில் திருடப்பட்ட சொத்தின்மதிப்பு அல்லது உண்டாக்கப்பட்ட நஷ்டம் அல்லது சேதமானது இருபது ரூபாய்க்கு மேற்படாமலிருக்கிறதோ அந்தக் கேஸுகளையும் விசாரிக்கக்கூடியபடி யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் விசாரணை அதிகாரத்தை அதிகப்படுத்தலாம்.

விவரணம்.—இந்தப் பிரிவில் கண்ட குற்றங்களில் அந்தக் குற்றங்களுக்கு உடந்தையாயிருப்பதும் அடங்கும்.

அபராதம் விதிப்பதும் அதற்குவரையறையும்.

(2) குற்றஞ் சாட்டப்பட்ட யாதொரு நபர் மேலேகண்ட குற்றங்களில் எதையாகிலும் செய்திருப்பதாக யாதொரு பஞ்சாயத்துகோர்ட் தீர்மானித்தால் அது அவருக்கு 15-ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம்:

ஆனால், (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (b), (c) அடையாளமிட்ட பகுதிகளின்படி யாதொரு குற்றஸ்தாபனை ஏற்படுகிற விஷ

யத்திலே, மேற்படி அபராதமானது - திருடப்பட்ட சொத்தின் மதிப்புக்கு அல்லது உண்டாக்கப்பட்ட சேதத்தின் தொகைக்கு இரண்டத்தனை வரையில் இருக்கலாம்.

அபராதம் செலுத்துவதும் தவறினதற்காக தண்டனையும்.

(3) பஞ்சாயத்து கோர்ட்டார் - அந்த அபராதத்தைச் செலுத்துவதற்காக நியாயமான காலம் கொடுக்கலாம், அல்லது அந்த அபராதத்தைத் தவணைகளாகச் செலுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம். ஆனால், கட்டளையிட்டபடி அந்த அபராதம் செலுத்தப்படாத பட்சத்திலே அது இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின் பிரகாரம் பாக்கியாய் இருந்தால் எவ்விதமாக வசூல்செய்யப்படுமோ அவ்விதமாக அதைக்கோர்ட்டார் வசூல்செய்யவேண்டும். விதிக்கப்பட்ட மேற்படி அபராதத்தை மேலே கண்டபடி வசூல்செய்ய முடியாதென்று எந்தக் கேஸிலாகிலும் கோர்ட்டுக்குத் தோற்றினால் கோர்ட்டார் அந்தக்கேஸை ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்; மேற்படி மாஜிஸ்ட்ரேட்டானவர் - மேலேகண்ட அபராதம் செலுத்தப்படாவிட்டால் சட்டப்படி விதிப்பதற்கு அதிகாரமுள்ள கால அளவுக்குக் காவல்தண்டனை விதிக்கலாம்; ஆனால் அந்தப்படி விதிக்கப்படும் (தண்டனையின்) கால அளவானது எந்த விஷயத்திலும் ஒருவாரத்துக்கு மேற்படக்கூடாது.

கிரிமினல் சம்பந்தமான பரிசீலனைகளில் நடவடிக்கை முறை.

(4) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் இது விஷயமாய்ச் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டு, கிரிமினல் கேஸுகள் சம்பந்தமான பரிசீலனைகளில் பஞ்சாயத்து கோர்ட்டுகளால் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறை அடியிற்கண்டபடியாகும்.—

கோர்ட்டார் - சாட்சிகளின் சாட்சியத்தை ரெகார்ட்பண்ணவேண்டியதுமில்லை, கிரமாசாரப்படி குற்றப்பத்திரிகை எழுதவேண்டியதுமில்லை; ஆனால், அவர்கள் அடியிற்கண்ட விவரங்களை நிர்ணயிக்கப்பட்ட நமூனவில் பதியவேண்டும் :—

(a) வரிசைக் கிரமமான நம்பர் ;

(b) குற்றம் செய்யப்பட்ட தேதி ;

(c) ரிபோர்ட் அல்லது பிராதின் தேதி ;

(d) பிராதுதார், குற்றஞ்சாட்டப்பட்டவர், விசாரிக்கப்பட்ட சாட்சிகள் ஆகிய இவர்களுடைய பெயரும் வமிசமும் வாசஸ்தலமும் ;

(e) என்ன குற்றம் செய்யப்பட்டதாகப் பிராது செய்யப்படுகிறதோ அதுவும், குற்றம் (ஏதாகிலும்) ருஜுவானால் அதுவும், (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (b), (c) அடையாளமிட்ட பகுதிகளில் அடங்கும் கேஸுகளில், திருடப்பட்ட சொத்தின் மதிப்பும் அல்லது உண்டாக்கப்பட்ட நஷ்டம் அல்லது சேதத்தின் தொகையும் ;

(f) குற்றஞ்சாட்டப்பட்டவரின் (ப்ளியும்) வாதமும், அவர் வாக்குமூலம் ஏதேனும் கொடுத்திருந்தால் அதுவும் ;

(g) தீர்மானமும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிற விஷயத்திலே, அந்தப்படி தீர்மானிப்பதற்குள்ள காரணங்கள் சுருக்கமாய்க் கண்டெழுதிய ஒரு சங்கிரகமும் ;

(h) விதிக்கப்பட்ட அபராதத் தொகை ;

(i) நடவடிக்கை முடிவானதேதி.

பிராதுதாரருக்காகவாவது குற்றம் சாட்டப்பட்டவருக்காகவாவது நியாயவாதி ஹாஜராகக் கூடாதென்பது.

(5) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்படும் விதிகளை அனுசரித்தன்றி மற்றப்படி எந்த நியாயவாதியும் யோக்கியதை பெற்றவராயிருந்தாலுஞ்சரி யோக்கியதை பெறாதவராயிருந்தாலுஞ்சரி பிராதுதாரருக்காகவாகிலும் குற்றம் சாட்டப்பட்டவருக்காகவாகிலும் ஹாஜராவதற்கு அவருக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

பஞ்சாயத்து கோர்ட்டிலிருந்து கேஸுகளைஎப்போது மாற்றலாமென்பது.

(6) நடவடிக்கைகளின் எந்த தசையிலாகிலும் கேஸானது யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் பரிசீலனைசெய்யப்பட வேண்டியதென்று கோர்ட்டுக்குத் தோற்றினாலும், குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றவாளியென்றும், தங்களுக்கு விதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் தண்டனையைவிட வேறுவிதமான ஒரு தண்டனையோ மேற்படி தண்டனையைக்காட்டிலும் அதிக கடுமையான

ஒரு தண்டனையையோ அவனுக்கு விதிக்கவேண்டுமென்று கோர்ட்டார் பரிசிலனை முடிவாகும்போது அபிப்பிராயப்பட்டாலும், அவர்கள் அந்தக்கேஸை ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்: மேற்படி மாஜிஸ்ட்ரேட்டானவர் அந்தக் கேஸைத் தம்முடைய கோர்ட்டுக்கே மாற்றிக்கொள்ளலாம் அல்லது தமக்குக் கீழ்ப்பட்ட ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டுக்கு மாற்றலாம்.

(7) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டரேட்டாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது, நியாயம் சரியாய் நடந்தேறுவதற்குத் தமக்கு அவசியமென்று தோற்றுகிறபோதெல்லாம், ஒரு பஞ்சாயத்து கோர்ட்டுக்கு முன்பாகவந்து பைசலாகாமலிருக்கும் யாதொரு கேஸைத் தம்முடைய கோர்ட்டுக்கேயாகிலும் தமக்குக் கீழ்ப்பட்ட யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டுக்காகிலும் தம்முடைய அதிகார வரம்புக்குள் இருக்கும் வேறே யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டுக்காகிலும் மாற்றலாம்.

அப்பீல்.

(8) இந்தப் பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டால் விதிக்கப்படும் யாதொரு சிட்சை அல்லது பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவின்மேல் அப்பீல் கிடையாது; ஆனால், மேற்படி கோர்ட் லஞ்சம் வாங்கினதென்னும் ஹேதுவின்மேலாவது முற்றிலும் பாரபட்சம் பண்ணினதென்னும் ஹேதுவின்மேலாவது, தார்நடத்தை நடந்ததென்னும் ஹேதுவின்மேலாவது, நியாய பரிபாலனம் விசேஷமாய்த் தவறாக நடத்தப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவின்மேலாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாகிலும் யாதொரு குற்றஸ்தாபனையை ரத்து செய்யலாம்.

பஞ்சாயத்து கோர்ட்டுகளால் பிடிக்கப்படக்கூடிய கேஸுகளை மாற்றுவது.

(9) 1898-வது க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு பஞ்சாயத்து கோர்ட்டால் பிடிக்கப்படக்கூடிய குற்றத்தைப் பிராது அல்லது போலீஸ் ரிபோர்ட்டின் பேரில் பிடிக்கும் மாஜிஸ்ட்ரேட்டானவர் விசாரணை அதிகாரமுடைய பஞ்சாயத்து கோர்ட்டுக்குக் கேஸை மாற்றக்கூடாதென்பதற்குப் போதுமான காரணங்கள் இருந்தாலொழிய, அந்தக் கோர்ட்டுக்குக் கேஸை மாற்றலாம்.

கிரிமினல் ப்ரொஸீஜர்கோட் 403-வது பிரிவு கிராமக்கோர்ட்டுக்குப் பிரயோகப்படத்தக்கதாவது.

77. (1) *1898-ம் வருஷத்து கிரிமினல் ப்ரொஸீஜர் கோர்ட் 403-வது பிரிவில்கண்ட நிபந்தனைகள் யாதொரு கிராமக்கோர்ட்டுக்குப் பிரயோகப்படும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி மேற்படி கோடில் உள்ளதெதுவும் யாதொரு கிராமக்கோர்ட்டுக்குப் பிரயோகப்படமாட்டாது.

9-ம் அத்தியாயம்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

78. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் இந்த ஆக்டிற்கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும், முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும் அப்படிப்பட்ட விதிகளைக்கொண்டு;—

(a) 7-வது பிரிவின்படி செய்யப்படும் கிராம முன்ஸிபுகளின் நேமங்களைக் குறித்து ஒழுங்கேற்படுத்தலாம்;

(b) பஞ்சாயத்து கோர்ட்டுகளின் ப்ரெஸிடென்டுகளையும் இதர மெம்பர்களையும் நியமிப்பதைக்குறித்து அல்லது தெரிந்தெடுப்பதைக் குறித்து ஒழுங்கேற்படுத்தி, அவர்களுக்கு இன்ன யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டுமென்றும் இன்ன யோக்கியதைக் குறைவுகள் இருக்கக்கூடாதென்றும் நிர்ணயிக்கலாம்;

(c) பஞ்சாயத்து கோர்ட்டுகள் சபை கூடுவதைக்குறித்தும் நடவடிக்கை நடத்துவதைக் குறித்தும் அவைகளைச்சேர்ந்த மெம்பர்கள் ஹாஜராவதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்தலாம்;

---

* கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் முழுவதும் திருத்தப்பட்ட புதிய பதிப்பு. சென்னை—வேப்பேரி, மதராவேணி விலாச புஸ்தகசாலையில் கிடைக்கும்.

(d) பஞ்சாயத்து கோர்ட்டுகள் குற்றங்களைப் பிடிக்கக்கூடிய விதத்தையும் குற்றங்களைப் பரிசிலனைசெய்யும் விஷயத்தில் அவைகள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையையும் நிர்ணயிக்கலாம் ;

(e) பிராதுகள் கொடுப்பதற்காகவும், அவைகளை வாபஸ் வாங்கிக்கொள்வதற்காகவும், தள்ளிவிடுவதற்காகவும், குற்றங்களை ராஜிசெய்துகொள்ளுவதற்காகவும் நிபந்தனையேற்படுத்தி, இன்னார் பிராதை நடத்தலாம் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பிரதிநிதியாயிருக்கலாம் என்பதை நிர்ணயிக்கலாம் ;

(f) க்ரிமினல் கேஸுகளின் குற்றஞ்சாட்டப்பட்டவரை ஸம்மன் அனுப்பி வரவழைப்பதற்காகவும், அவர் ஹாஜராவதற்காகவும், சாக்ஷிகளை ஸம்மனனுப்பி வரவழைத்து விசாரிப்பதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தலாம் ;

(g) க்ரிமினல் கேஸுகளின் விஷயத்தில் சகல ரெஜிஸ்டர்கள், ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகள், ப்ராஸெஸ் என்னும் கட்டளைகள் ஆகிய இவைகளின் நமூனைக்களையும், அந்த ரெஜிஸ்டர்கள் வைத்துவரவேண்டிய விதத்தையும், அந்த ரிடர்ன்கள் அனுப்பவேண்டிய தேதிகளையும், அவைகளை இன்ன உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பவேண்டுமென்பதையும் நிர்ணயிக்கலாம் ;

(h) ப்ராஸெஸ் என்னும் கட்டளையைச் சேர்ப்பிப்பதற்காகவும் டிக்ரிகளை நிறைவேற்றுவதற்காகவும், அபராதங்களை வசூலிப்பதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தலாம் ;

(i) சகல பத்திரங்களையும் ரெகார்டுகளையும் பஞ்சாயத்து கோர்ட்டுகளாவது அந்தக் கோர்ட்டுகளின் சார்பிலாவது வரப்பெற்றுக்கொண்டு பத்திரமாய் வைத்திருப்பதற்காகவும், டிக்ரிகளுக்கும் இதர ரெகார்டுகளுக்கும் நகல்கள் கொடுப்பதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தலாம் ; மேலும்,

(j) ப்ராஸெஸ் என்னும் கட்டளையைச் சேர்ப்பிப்பதற்காகவும் டிக்ரிகளை நிறைவேற்றுவதற்காகவும் நகல்கள் கொடுப்பதற்

காகவும் கட்டணங்கள் விதித்து வசூல்செய்வதற்காக நிபந்தனை.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் சகல விதிகளையும் போர்ட் ஸேய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில், பிரசுரிக்கவேண்டும்; அந்தப்படி பிரசுரிக்கப்படுவதன்மேல் அவை இந்த ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

ஷெட்யூல்.

ரத்துசெய்யப்பட்ட சட்டங்கள்.

நம்பரும் வருஷமும்.	விஷயம்.	இவ்வளவு மட்டில் ரத்து.
சென்னபட்டணம் 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன்.	1816-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராமப் பஞ்சாயத்து ரெகுலேஷன்.	ரெகுலேஷன் முழுவதும்.
சென்னபட்டணம் 1816-ம் வருஷத்து 11-வது ரெகுலேஷன்.	1816-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராமப் போலிஸ் ரெகுலேஷன்.	10-வது பிரிவைச்சேர்ந்த முதலாவது பகுதியின் "குற்றம் செய்பவர்கள்" என்பது முதல் "தொழுவில் போட்டுவைக்கும்படி உத்தரவு பண்ணலாவது" என்பது வரையிலுள்ள வார்த்தைகள்.

கிராமக்கோர்ட்டுகளாக்டை யனுசரித்த விதிகள்.

[போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் 1922-ம் ௵ பெப்ரவரி௴ 28௳.]

சென்னபட்டணம் 1920-ம் ௵த்து 2-வது ஆக்ட்டினுல் திருத்தப்பட்டபடிக்குள்ள 1888-ம் ௵த்திய சென்னபட்டணத்து கிராமக்கோர்ட்டுகளாக்ட் 78-வது 76-வது பிரிவுகளினுல் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக் கொண்டும், இது விஷயமாய் முந்தியுள்ள சகலவிதிகளையும் ரத்துசெய்து அவைகளுக்கு பர்த்தியாகவும் ஆலோசனை சபையிலுள்ள சிறப்புற்றிருக்கும் கவர்னரவர்கள் அடியிற்கண்ட விதிகளைக் களிகூர்ந்து செய்கிருர்கள் :—

இந்த விதிகளிலே—

'ஆக்ட்' என்பது சென்னபட்டணம் 1920-ம் ௵த்து 2-வது ஆக்டினுல் திருத்தப்பட்டபடிக்குள்ள 1888-ம் ௵த்திய சென்னபட்டணத்து கிராமக்கோர்ட்டுகளாக்ட் என்று அர்த்தமாகும்.

'பிரியாது' என்பது தெரிந்த யாதொரு நபர் குற்றஞ்செய்திருப்பதாக இந்த ஆக்டின்படி யாதொரு கோர்ட்டார் நடவடிக்கைநடத்தும்பொருட்டு அவர்களுக்கு வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாகவாவது தெரிவிக்கப்படுவதென்று அர்த்தமாகும் : ஆனுல், யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தர்செய்கிற ரிபோர்ட் அதில் அடங்கமாட்டாது.

'கோர்ட்' என்பது மேற்படி ஆக்ட் 9-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து கோர்ட் என்று அர்த்தமாகும்.

'ப்ரெஸிடென்ட்' என்பது யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் ப்ரெஸிடென்ட் (அக்கிராசனுதிபதி) என்று அர்த்தமாவதுமல்லாமல், குறித்த ஒருசபைக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரெஸிடென்ட் என்பதும் அதில் அடங்கும்.

'ரெவினியு டிவிஷன் ஆபீஸர்', 'தாசில்தார்' 'டெப்யுடி தாசில்தார்' என்பவை-பஞ்சாயத்து கோர்ட்டானது எந்தெந்த ரெவினியு டிவிஷன் ஆபீஸர், தாசில்தார், டெப்யுடி தாசில்தார் ஆகிய இவர்களின் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் இருக்கிறதோ அந்தந்த ரெவினியு டிவிஷன் ஆபீஸர், தாசில்தார், டெப்யுடி தாசில்தார் என்று அர்த்தமாகும்.

1. மேற்படி ஆக்ட் 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின் (a), (b), (c)-பகுதிகளின்படிக்கான விதிகள்.

7-வது பிரிவின்படி கிராம முன்ஸிபுகளின் நேமகங்கள்.

2. ஒவ்வொரு கிராம முன்ஸிபும் எந்த ரெவினியு டிவிஷன் ஆபீஸரின் அதிகாரப் பிரதேசத்துக்குள் அந்த கிராமம் இருக்கிறதோ அந்த ரெவினியு டிவிஷன் ஆபீஸரால் நியமிக்கப்படவேண்டும்.

3. அப்படி நியமிக்கும்போது, ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் அடியிற்கண்ட விதியை அனுசரிக்கவேண்டும் :—

யாதொரு கிராம முன்ஸிப் கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைகளும் கிராம எல்லைகளும் ஒன்றாயிருந்தால், ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் கிராமப் பெரியதனக்காரரின் அலுவல்களைச்செய்யும் நபரைக் கிராமமுன்ஸிபாயிருக்கும்படி நியமிக்கவேண்டும். அந்த நேமகமானது அந்த நபர் அப்படிப்பட்ட அலுவல்களைச் செய்துகொண்டுவருகிற காலம் வரையில்தான் செய்யப்பட்டிருக்கிறதென்று பிரசித்தஞ்செய்யப்படவேண்டும்.

மேற்படி ஆக்டின்படி கிராமங்களைத் தொகுப்பது அல்லது உட்பிரிவினை செய்வது காரணமாக அதிகாரப் பிரதேசங்களின் எல்லைகள் ஒன்றாயிராவிட்டால், ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் கிராமக்கோர்ட்டின் அதிகார வரம்புக்குள் வசிக்கிற யாதொரு நபரைக் கிராமமுன்ஸிபாக நியமிக்கவேண்டும்.

விவரணம்—2-வது, 3-வது விதிகளிலே "கிராம முன்ஸிப்" என்னும் சொற்றொடரில் யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் ப்ரெஸிடெண்ட் என்பது அடங்காது.

பஞ்சாயத்துதாரர்களின் யோக்கியதாம்சங்கள்.

4. யாதொரு நபர்—

(i) எந்த கிராமத்திற்காக பஞ்சாயத்து கோர்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த கிராமத்தில் வாசஞ்செய்பவராயிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(ii) புருஷராயிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(iii) 25-வயதுள்ளவராயிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(iv) கிராமத்தில் வழங்கும் சுதேச பாஷையை எழுதப்படிக்கக் கூடியவராயிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(v) (a) கவர்ன்மெண்டுக்கு 10 ரூபாய்க்குக் குறையாமல் கிஸ்திசெலுத்துகிற பட்டாதாரராகவாவது,

(b) புஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 3-வது பிரிவைச்சேர்ந்த (5) குறிப்பிட்ட பகுதியில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி நிலத்துக்குடையவருக்கு குத்தகைத் தொகையாக 10-ரூபாய்க்குக் குறையாமல் செலுத்துகிற ரயத்தாக வாவது,

(c) ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு பத்திரத்தின்படி நிலங்களின் குத்தகை தாரராக இருந்து, 50-ரூபாய்க்குக் குறையாமல் குத்தகைத் தொகை செலுத்துகிற ரயத்தாகவாவது,

(d) புஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம் வருஷத்து ஆக்ட் 3-வது பிரிவைச்சேர்ந்த (5) குறிப்பிட்ட பகுதியில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி நிலத்துக்குடையவராகவாவது,

(e) 10-ரூபாய்க்குக் குறையாமல் க்விட் ரென்ட் செலுத்துகிற அல்லது 20-எக்ராவுக்குக் குறையாத விஸ்தீர்ணமுள்ள இனும் நிலங்களைக் கைப் பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற இனும்தாரராகவாவது,

(f) வருமானவரி விதிக்கப்பெற்றவராகவாவது,

(g) 10-ரூபாய்க்குக் குறையாமல் வீட்டுவரி செலுத்துகிறவராகவாவது,

(h) 10-ரூபாய்க்குக் குறையாமல் தொழில்வரி செலுத்துகிறவராகவாவது,

(i) கவர்ன்மென்டைச்சேர்ந்த பென்ஷன் பெறும் உத்தியோகஸ்தராயிருந்து 10-ரூபாய்க்கு குறையாமல் மாதாந்திர பென்ஷன் வாங்குகிறவராக வாவது,

இருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

அவர் பஞ்சாயத்து கோர்ட்டின் மெம்பராயிருப்பதற்குத் தகுதியுள்ளவராகமாட்டார்.

5. யாதொரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலாவது கூட்டுப் பட்டாதாரர்களாலாவது கூட்டாய் யாதொரு சொத்து கைப்பற்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் வரிகள் செலுத்தப்பட்டாலும் வரும்படி சம்பாதிக்கப்பட்டாலும், மேற்படி குடும்பமாகிலும் கூட்டாய்க் கைப்பற்றில் வைத்திருப்பவர்களாகிலும் யோக்கியதை பெற்றிருப்பதாக பாவிக்கப்படுவார்கள்; மேலும், அந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் அல்லது கூட்டாய் (சொத்தைக்) கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பவர்களில் பெரும்பான்மையோரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றவராகிலும், யாதொரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் விஷயத்தில் அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவராய் மேலேகண்டபடி அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராகிலும் அதன் மானேஜராகிலும் (நிர்வாக கர்த்தராகிலும்) யாதொரு கோர்ட்டின் மெம்பராயிருக்க தகுதியுள்ளவராவார்.

6. எவராவது—

(a) கடன் தீர்க்க வகையில்லாதவராயிருந்து அப்படி வகையில்லாதவரென்று விடுதலை பெறாமலிருந்தாலும்,

(b) புத்தி ஸ்வாதீனமில்லாதவராயிருந்தாலும்,

(c) குருடராகவோ, செவிடராகவோ அல்லது ஊமையாகவோ இருந்தாலும்,

(d) கிராம உத்தியோகஸ்தராயல்லாமல் சம்பளம் பெறும் வேறே கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராயிருந்தாலும்,

(e) குஷ்டரோகியாயிருந்தாலும்,

(f) கிராமக் கோர்ட்டுகளின் ஆக்டின் 8-வது பிரிவுப்படி தள்ளிவிடப்பட்டிருந்தாலும்,

அவர்-கோர்ட்டின் மெம்பர் ஸ்தானத்துக்குத் தகுதியுள்ளவராகமாட்டார்.

ஆனால், ஷை ஆக்ட் 8-வது பிரிவின்படி தள்ளிவிடப்பட்டது காரணமாக யாதொரு நபர் மெம்பர் ஸ்தானத்துக்குத் தகுதியற்றவராயிருந்தால், அந்தப்படி தகுதியற்றிருப்பது - தள்ளிவிட்டதாக கலெக்டர் உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து மூன்று வருஷகாலத்துக்குச் செலாவணியாகும். ஆயினும், மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு நிற்க அவருக்கு அனுமதி கொடுப்பதாக கலெக்டரின் சம்மதத்தை ஷை காலஅளவுக்குள் பெறுகிறபட்சத்திலே மேலேகண்டபடி செலாவணியாகாது.

6-A. (1) எந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தின் விஷயமாய் யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டார் க்ரிமினல் விசாரணை அதிகாரம் செலுத்துகிறார்களோ அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்துக்காக ஏற்பட்டுள்ள யூனியன் போர்டைச்சேர்ந்த யாதொரு மெம்பர் அந்தக் கோர்ட்டின் மெம்பர் ஸ்தானத்துக்கு யோக்கியதையற்றவராவார் ; மேலும், 18-வது விதியிலாவது இந்த விதிகளில் வேறே எங்கேயாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அப்படிப்பட்ட மெம்பரைப் பஞ்சாயத்துதாரராகத் தெரிந்தெடுப்பது ரத்தாவதுமல்லாமல், அது எவ்விதமாகவும் செலாவணியாகமாட்டாது.

(2) யாதொரு பஞ்சாயத்துதாரர் ஷை பிரதேச விஸ்தீர்ணத்துக்கான யூனியன் போர்டின் மெம்பராகும்பட்சத்தில், அவர் பஞ்சாயத்துதாரராக உத்தியோகம் வகிப்பது நின்றுபோகும்.

6-B. எந்த நபருக்காகிலும் யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் தீவாந்தர சிட்சையாவது ஆறு மாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்குக் காவல் தண்டனையாவது விதிக்கப்பட்டு (அந்த தண்டனை மாற்றப்படாமலோ குற்றம் மன்னிக்கப்படாமலோ) இருந்தால், அவர் - அந்த தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும்போதும் அந்த தண்டனை முடிவானதேதியிலிருந்து ஐந்து வருஷம் வரையிலும் கோர்ட்டின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவராகமாட்டார்.

எலெக்ஷன்கள் - பொது.

7. யாதொரு கோர்ட்டின் பஞ்சாயத்துதாரர்களையும் ப்ரெஸிடென்டையும் தெரிந்தெடுக்கும் நடவடிக்கைகள் அந்தக் கோர்ட்டின் அதிகார வரம்புக்குள் இருக்கும் ஒரு இடத்தில் நடத்தப்படவேண்டும்.

7-A. ப்ரெஸிடென்டாவது யாதொரு மெம்பராவது ரெவினியு டிவிஷன் ஆபீஸருக்கு நோட்டீஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்.

7-B. யாதொரு மெம்பர் கோர்ட்டின் சபைகளில் தொடர்ச்சியாய் ஐந்துக்கு மேற்பட்ட சபைகளுக்கு ஹாஜராகத் தவறிப்போனால், அவர்-மெம்பர் ஸ்தானத்திலிருந்து நீக்கிவிடப்படுவதற்கு உள்ளாவார். ஜில்லா கலெக்டரானவர்-மேலேகண்ட பிரகாரம் நீக்கிவிடும்படி உத்தரவுசெய்யத் தகுதியான அதிகாரியாவார்.

விவரணம் :—இந்த விதியின் காரியங்களுக்காக,—

(a) "சபை கூடுதல்" என்பதில் க்வோரம் இல்லாமல் கோர்ட்டின் சபையை தள்ளிவைக்கப்படுவது அடங்கும் ; மேலும்,

(b) தொடர்ச்சியாய் விடாமல் பல தினங்கள் நடந்துகொண்டிருக்கும் கோர்ட்டின் யாதொரு சபை (ஞாயிற்றுக்கிழமைகளையும் கெஜட்டில் பிரசித்தஞ் செய்யப்பட்ட இதரபொதுவான விடுமுறை தினங்களையும் நியாயாதிபதிகள் நியாயம் விசாரிக்க உட்கார்ந்த தினங்களாகக்கொண்டு) ஒரு சபையாக எண்ணப்பட வேண்டுமே ஒழிய, அந்தப்படி கோர்ட் கூடிக்கொண்டே வரும் ஒவ்வொரு தினமும் தனித்தனியாய் சபை கூடியதாக எண்ணக்கூடாது.

பஞ்சாயத்துதாரர்களைத் தெரிந்தெடுப்பது.

8. கிராமத்தில் வசிப்பவர்களாயும் வயதுவந்தவர்களாயும் புருஷர்களாயுமுள்ள கிராமத்தார்கள் எல்லாரும் சேர்ந்து பஞ்சாயத்துதாரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

9. யாதொரு கிராமத்தில் பஞ்சாயத்து கோர்ட் ஏற்படுத்தப்படுமென்று பிரசித்தஞ் செய்யப்பட்டிருந்தாலும், பஞ்சாயத்துதாரர்களுக்குள் காலி நேரிட்டிருந்தாலும், அல்லது நேரிடப்போகிறதாயிருந்தாலும், ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர்-தம்முடைய உத்தரவின் தேதியிலிருந்து பத்து தினங்களுக்குக் குறையாமலும் மூன்று வாரங்களுக்கு மேற்படாமலுமுள்ள ஒரு தினத்தில் மேற்படி கோர்ட்டின் மெம்பர் அல்லது மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்காக அந்தக் கோர்ட்டின் அதிகார வரம்புக்குள் வசிக்கும் கிராமத்தார்களின் சபை ஒன்றைக் கூட்டும்படி மேற்படி கோர்ட் எந்த கிராமத்திலிருக்கிறதோ அந்த கிராமத்தின் பெரியதனக்காரருக்குக் கட்டளையிடவேண்டும்.

10. கிராமப் பெரியதனக்காரரானவர் மேற்படி உத்தரவை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், சபை கூடும் தேதியையும் காலத்தையும் இடத்தையும் காரியத்தையும் தொடர்ச்சியாய் மூன்று தினங்களில் தண்டோரா மூலமாகத் தெரியப்படுத்தவேண்டும் ; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த கிராமம் அல்லது கிரா

மங்களில் நன்றாய்த் தெரியும்படியான மூன்று இடங்களிலே சபையைக்குறித்த நோடிஸுகளைப் பிரசித்தப்படுத்தவும் வேண்டும்.

11. சபை கூடுவதற்காக நியமிக்கப்பட்ட தினத்திலும், காலத்திலும் இடத்திலும் டெப்யுடி தாசில்தாரரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தர் சபையில் அக்கிராசனம் வகித்து இத்தனை பஞ்சாயத்துதாரர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று அந்த சபையில் வந்திருப்பவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

12. பஞ்சாயத்துதாரரின் ஸ்தானத்துக்கு அபேக்ஷகரை, அந்த சபைக்கு வந்திருக்கும் கிராமத்தார்களில் அந்த கிராமத்திலேயே வசிப்பவர்களுக்குள் இரண்டுபேருக்குக் குறையாதவர்கள் நேமகம் செய்யவேண்டும். மேற்படி நேமகமானது எழுத்துமூலமாகவாவது இருக்கலாம், வாய்மொழியாகவாவது இருக்கலாம். பிந்திய விஷயத்தில் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் அந்தநேமகத்தைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

13. யாதொரு தெரிந்தெடுப்பவரின் யோக்கியதையைக் குறித்தாவது யாதொரு பஞ்சாயத்துதாரரின் நேமகத்தைக் குறித்தாவது அவர் யோக்கியதைபெற்றவராயில்லையென்றும் காரணத்தைக்கொண்டாகிலும் அவர் யோக்கியதையற்றவராயிருக்கிறாரென்றும் காரணத்தைக்கொண்டாகிலும் ஆட்சேபனை செய்யப்பட்டால், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் அந்த ஆட்சேபனை விஷயமாய்த் தீர்மானம்செய்யவேண்டும். யாதொரு பஞ்சாயத்துதாரரைத் தெரிந்தெடுத்தது விஷயமாய் மேற்படி யோக்கியதைக் குறைவு காரணமாகச்செய்யும் ஆட்சேபனையானது 18-வது விதியின்படி செய்யப்பட்டாலன்றி மற்றப்படி மேற்படி தீர்மானம் முடிவானதாகும்.

14. யோக்கியதை பெற்றவர்களாயிருந்து நேமகம் செய்யப்பட்டிருக்கும் அபேக்ஷகர்களின் சங்கியையானது தெரிந்தெடுக்கப்படவேண்டிய பஞ்சாயத்துதாரர்களின் சங்கியைக்குக் குறைவாகவாவது சமமாகவாவது இருந்தால், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் அவர்கள் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ்செய்து, அவர்களுடைய பெயர்களை ரெவினியு டிவிஷன் ஆபீஸருக்குத் தெரிவிக்கவேண்டும். நேமகம் செய்யப்பட்டவர்களின் சங்கியையானது தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்களின் சங்கியைக்குக் குறைவாயிருக்கும் பக்ஷத்தில் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் மிகுதியாயிருக்கும் காலிஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காக மறுபடியும் நடத்தப்போகும் எலெக்ஷனைக் குறித்துத் தெரிவிக்கவேண்டும்.

15. அபேக்ஷகர்களின் சங்கியையானது தெரிந்தெடுக்கப்படவேண்டிய பஞ்சாயத்துதாரர்களின் சங்கியைக்காட்டிலும் அதிகமாயிருந்தால், அப்போது 16 முதல் 18 வரையிலுள்ள விதிகளில் சொல்லியிருக்கிறபடி (பஞ்சாயத்துதாரர்களைத்) தெரிந்தெடுக்கத் தொடங்கவேண்டும்.

தெரிந்தெடுக்கும் விதம்.

16. கைகளைத் தூக்கிக்காட்டி (பஞ்சாயத்துதாரர்களைத்) தெரிந்தெடுக்க வேண்டும்.

வெவ்வேறு அபேட்சகர்களுக்குக் கிடைக்கும் வோட்டுகள், தனித்தனியாய்ப் பதியப்படவேண்டும்; மேலும், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான வோட்டுகளைப்பெறும் அபேக்ஷகர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ்செய்யப்பட்டு, அவர்களுடைய பெயர்கள் ரெவினியு டிவிஷன் ஆபீஸருக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேக்ஷகர்களுக்குக் கிடைத்திருக்கும் வோட்டுகள் சமமாயிருக்கிற பட்சத்திலே அவர்களில் இன்னார் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ் செய்யப்படவேண்டுமென்பதைச் சீட்டுப்போட்டு தீர்மானிக்கவேண்டும்.

17. ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் எலெக்ஷன் முடிவுகளை ஜில்லா கெஜெட்டில் பிரசுரிக்கச்செய்யவேண்டும். மேலும், பஞ்சாயத்துதாரர்களின் உத்தியோக காலமானது அந்தப்படி பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆரம்பமாகும்.

18. (a) யாதொரு பஞ்சாயத்துதாரரைத் தெரிந்தெடுத்தது விஷயமாய்ச் செய்யும் ஆட்சேபனைகளை, அவரைத் தெரிந்தெடுத்த பிறகு ஏழு தினங்களுக்குள் ரெவினியு டிவிஷன் ஆபீஸரிடத்தில் செய்துகொள்ளவேண்டும். ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர்-சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நோடிஸ் கொடுத்த பிறகு, அந்த ஆட்சேபனைகளைப்பற்றி விசாரித்து தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கவேண்டும்;

ஆனால், (i) யாதொரு நபருக்கு யோக்கியதைக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்றும் காரணத்தைக்கொண்டாவது அவர் யோக்கியதை பெற்றவராயில்லையென்றும் காரணத்தைக்கொண்டாவது ஆட்சேபனை செய்யப்பட்டால், தெரிந்தெடுக்கும் சமயத்தில் அந்த ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றபடி அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது; மேலும்—

(ii) 6-வது விதியிற்கண்ட யோக்கியதைக் குறைவுகளைப்பற்றிய ஜாபிதாவின் (b) குறிப்பிட்ட பகுதியின்படிக்கான யோக்கியதைக் குறைவின் விஷயத்திலே, அவர் அந்த சங்கதியைப்பற்றி டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(c) முறையே ரெவினியு டிவிஷன் ஆபீஸரும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரும் பிறப்பிக்கும் உத்தரவுகள் முடிவானவைகளாகும்; மேலும், அவைகள் விஷயமாய் வியாஜ்ஜிய மூலமாவாவது மற்றப்படியாவது விவாதம் செய்யக்கூடாது.

கோர்ட்டுகளின் ப்ரெஸிடென்டுகளைக் குறித்து.

19. ப்ரெஸிடென்டின் உத்தியோகத்தில் காலி ஏற்படும்போதெல்லாம், ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுக்கும் காரி

யத்துக்காக நியாயமான ஒரு காலத்துக்குள் சபை கூட்டவேண்டுமென்றுகண்டு பஞ்சாயத்துதாரர்களுக்கெல்லாம் ஒரு நோடிஸ் அனுப்பவேண்டும். பஞ்சாயத்துதாரர்களின் சங்கியையில் பாதிக்குக் குறையாதவர்கள் அப்படிப்பட்ட சபையின் * க்வோரமாக ஏற்படுவார்கள். அந்தப்படி கூட்டப்பட்ட சபையின் மெம்பர்கள் தங்களுக்குள்ளாகவே ஒருவரை ப்ரெஸிடென்ட் உத்தியோகத்துக்காக (சேர்மன்) சபைத்தலைவராய்த் தெரிந்தெடுக்கவேண்டும்.

20. ப்ரெஸிடென்ட் உத்தியோகத்துக்கு அபேக்ஷகராயிருப்பவர் ஒருமெம்பரால் நேமகம் செய்யப்பட்டு வேறொரு மெம்பரால் ஆமோதிக்கப்படவேண்டும்.

ஒரே அபேக்ஷகர் நேமகம் செய்யப்பட்டால், அவர் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ்செய்யப்படவேண்டும்.

ஒரு அபேக்ஷகருக்கு மேற்பட்டு நேமகம் செய்யப்பட்டால், சபைத்தலைவரானவர்-மெம்பர்களுக்குக் காகிதத் துண்டுகளைக் கொடுக்கவேண்டும்; ஒவ்வொரு மெம்பரும் தாம் யாருக்கு வோட் கொடுக்கிறாரோ அந்த அபேக்ஷகரின் பெயரைத் தமக்குக் கொடுக்கப்பட்ட காகிதத்துண்டின்மேல் எழுதவேண்டும்.

பிறகு சபைத்தலைவர்-அந்தத் துண்டுகளை வாங்கிக்கொண்டு வோட்டுகளை எண்ணவேண்டும். எந்த அபேட்சகருக்கு மற்றவர்களைக்காட்டிலும் அதிகமான வோட்டுகள் கிடைத்திருக்கின்றனவோ அவர் தெரிந்தெடுக்கப்பட்டதாக பிரசித்தஞ்செய்யப்படவேண்டும்; மேலும், அவருடைய பெயர் ரெவினியு டிவிஷன் ஆபீஸருக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேக்ஷகர்களுக்குக் கிடைத்திருக்கும் வோட்டுகள் சமமாயிருக்கிற பட்சத்திலே, அவர்களில் இன்னார் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரசித்தஞ் செய்யப்படவேண்டுமென்பதைச் சீட்டுபோட்டு தீர்மானிக்கவேண்டும்.

விவரணம்:—இந்தவிதியின் காரியங்களுக்காக "மெம்பர்" என்பதின் இலக்கணசம்பந்தமான வேறுபாடுகளுடன் சபைத்தலைவர் என்பதும் அடங்கும்.

21. யாதொரு ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுத்தது விஷயமாய்ச்செய்யும் ஆட்சேபனைகளை, அவரைத் தெரிந்தெடுத்ததிலிருந்து ஏழு தினங்களுக்குள் ரெவினியு டிவிஷன் ஆபீஸரிடத்தில் செய்துகொள்ளவேண்டும். ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர்-அந்த ஆட்சேபனைகளைப்பற்றி விசாரித்து தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கவேண்டும் ரெவினியு டிவிஷன் ஆபீஸரின் உத்தரவு முடிவானதாகும்.

22. யாதொரு பஞ்சாயத்து கோர்ட் ப்ரெஸிடென்டின் உத்தியோக காலமானது அவர் மெம்பராயிருப்பது நின்றுபோகும்போது முடிந்துபோகும்.

---

* க்வோரம் என்பது ஒரு சபையில் எத்தனைபேர் வந்திருந்தால் காரியம் நடத்தலாமோ அதைக் குறிப்பதாகும்.

கோர்ட்டுகளின் சபைகள்.

23. கோர்ட்டின் சபைகளையெல்லாம் ப்ரெஸிடெண்ட் கூட்டவேண்டும்: மேலும், சபை கூடுவதற்கு ஸ்பஷ்டமாய் மூன்று தினங்களுக்கு முன்னதாக சபையைக் குறித்த நோடிஸ் சகல மெம்பர்களுக்கும் அனுப்பப்படவேண்டும். ஆயினும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி வாரத்தின் அல்லது மாதத்தின் குறிப்பிட்ட தினங்களில் சபைகள் கூடவேண்டுமென்று பொது சம்மதத்தின்மேல் தீர்மானிக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு; அந்த விஷயத்தில் மேலேகண்டபடி குறிப்பிட்ட தினங்களில் நடத்தப்படும் சபைகள் சம்பந்தப்பட்டமட்டில் மேற்படி வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட நோடிஸ் அவசியமாகாது. ப்ரெஸிடெண்டானவர் - கோர்ட்டுக்குமுன் இருக்கும் காரியத்தை விரைவாய்ச் செய்துமுடிப்பதற்கு எத்தனைமுறை சபை கூட்டுவது அவசியமாயிருக்குமோ அத்தனை முறை சபை கூட்டவேண்டும்.

24. யாதொரு கேஸ் அல்லது வேறே விவகாரத்தின் விசாரணை ஆரம்பிக்கப்படும்போது வராதிருக்கும் எந்த மெம்பரும்-அந்தக்கேஸின் அல்லது விவகாரத்தின் விசாரணையில் பிற்பட்ட எந்த தசையிலும் கலந்துகொள்ளக்கூடாது.

25. யாதொரு கேஸ் அல்லது விவகாரத்தின் விசாரணை நடந்துகொண்டிருக்கையில் தீர்ப்புசொல்லுவதற்கு முன்பாக எந்த காலத்திலாகிலும்மேற்படி கேஸை அல்லது விவகாரத்தை விசாரணை செய்துகொண்டிருக்கும் கோர்ட்டின் யாதொரு மெம்பர் இறந்துபோய்விட்டாலும் வேறே எந்தக் காரணத்தினாலாகிலும் வராமற்போய்விட்டாலும், அந்த விசாரணையானது மற்ற மெம்பர்களின் சங்கியை மூன்றுக்குக் குறைவாயிருந்தாலன்றி மற்றப்படி, அந்த மெம்பர்களைக் கொண்டே நடத்தப்படவேண்டும். மேற்படி சங்கியை மூன்றுக்குக் குறைவாயிருக்கும் பட்சத்தில், பரிசீலனையைப் புதிதாய் ஆரம்பிக்கவேண்டும்.

26. (ரத்துசெய்யப்பட்டது.)

2. ஷை ஆக்ட் 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின் (d), (e), (f), - அடையாளமிட்ட பகுதிகளின்படிக்கான விதிகள்.

27. எந்தக் கோர்ட்டாரும் தங்களால் விசாரணை செய்யப்படக்கூடிய யாதொரு குற்றத்தை, (a) எந்த சங்கதிகள் சேர்ந்து அப்படிப்பட்ட குற்றம் எற்படுகிறதோ அந்த சங்கதிகளைக் குறித்துப் பிராதுசெய்யப்படுவதன்மேலாவது (b) அப்படிப்பட்ட சங்கதிகளைக் குறித்துப் போலீஸார் ரிபோர்ட் செய்வதன்மேலாவதன்றி மற்றப்படி பிடிக்கலாகாது.

மேற்படி பிராது அல்லது ரிபோர்ட்டைக் கோர்ட்டார் கூடியிருக்கும் போது அவர்களிடத்தில் செய்துகொள்ளலாம் அல்லது கொடுக்கலாம்; கோர்ட்

டார் கூடியிராதபோது, அந்த பிராது அல்லது ரிபோர்ட்டை ப்ரெஸிடெண்டினிடத்திலாவது அவர் இராவிட்டால் இது விஷயமாய் அவரால் நியமிக்கப்பட்ட வேறே பஞ்சாயத்துதாரரிடத்திலாவது செய்துகொள்ளலாம் அல்லது கொடுக்கலாம்.

28. பிராது வாய்மொழியாகச் செய்யப்பட்டால், கோர்ட்டாராவது ப்ரெஸிடெண்டாவது அவர் இராத காலத்திலே பிராது பெற்றுக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் வேறே பஞ்சாயத்துதாரராவது அதைச் சரியாய் எழுதிக்கொண்டு, பிராதுதாரருக்கு அதைப் படித்துக்காட்டி அதில் அவருடைய கையெழுத்து பெறவேண்டும்.

29. கோர்ட்டாரிடத்தில் யாதொரு பிராது செய்துகொள்ளப்பட்டால், கோர்ட்டார் பிராதுதாரரை உடனே பிரமாணத்தின்மேல் விமரிசை பண்ணவேண்டும். பிராதுதாரரை விமரிசை செய்தபிறகு, நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரம் இருப்பதாகக் கோர்ட்டாருக்கு தோற்றாவிட்டால், அவர்கள் பிராதைத் தள்ளிவிடவேண்டும்; நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரம் இருப்பதாக அவர்களுக்கு தோற்றுகிறபோதும் போலீஸ் ரிப்போர்ட்டுகளின்மேல் பிடிக்கப்படும் கேஸுகளிலும், அவர்கள் கேஸை விசாரிப்பதற்காக ஒரு தினத்தை நிஷ்கரிஷைசெய்து, குற்றஞ்சாட்டப்பட்டவரும் பிராது தரப்பு சாக்ஷிகளும் ஹாஜராவதற்காக ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்.

30. பிராதாவது ரிப்போர்ட்டாவது கோர்ட்டாரிடத்தில் கொடுக்கப்பட்டுவிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ப்ரெஸிடெண்டாகிலும் வேறே பஞ்சாயத்துதாரராகிலும்-பிராதுதாரரைக் கோர்ட்டார் விமரிசை பண்ணுவதற்காக, பிராது பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு எழு தினங்களுக்கு மேற்படாமல் ஒரு தினத்தை சாதாரணமாய் நிஷ்கரிஷைசெய்து, அந்தப்படி நிஷ்கரிஷைசெய்யப்பட்டதினத்தில் கோர்ட்டின் சபை கூட்டுவிக்கவேண்டும். நியமிக்கப்பட்ட தினத்தில் கோர்ட்டார்-பிராதுதாரர் ஹாஜராயிருந்தால் அவரைப் பிரமாணத்தின்மேல் விமரிசை செய்யவேண்டும். பிராதுதாரரை விமரிசை செய்தபிறகு நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரம் இருப்பதாகக் கோர்ட்டாருக்கு தோற்றாவிட்டாலும், பிராதுதாரர் ஹாஜராயிராவிட்டாலும், அவர்கள் பிராதைத் தள்ளிவிடவேண்டும்; நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்தரம் இருப்பதாக அவர்களுக்கு ஏற்படும் விஷயத்திலும் போலீஸ் ரிப்போர்ட்டுகளின்மேல் பிடிக்கப்படும் கேஸுகளிலும், அவர்கள் கேஸை விசாரிப்பதற்காக ஒரு தினத்தை நிஷ்கரிஷைசெய்து, குற்றஞ்சாட்டப்பட்டவரும் பிராது தரப்பு சாக்ஷிகளும் ஹாஜராவதற்காக ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்.

30-A. ஒரே குற்றத்துக்காகவாவது ஒரே விவகாரத்தில் செய்யப்பட்ட வெவ்வேறு குற்றங்களுக்காகவாவது ஒருவரல்லாமல் பல நபர்கள்மேல் குற்றம்

சாட்டப்பட்டாலும், ஒரு நபர் யாதொரு குற்றத்தைச் செய்ததாகவும் வேறொரு நபர் அப்படிப்பட்ட குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததாகவும் குற்றம் சாட்டப் பட்டாலும், கோர்ட்டாருக்கு தகுதியாகத் தோற்றுகிறபடி அவர்கள்மேல் கூட் டாகவோ அல்லது தனித்தனியாகவோ பிராது தயார்செய்து விசாரணை பண்ண லாம்.

30-B. ஒரே விவகாரமாய் ஏற்படும்படி ஒரே தொடர்ச்சியாய்ச் சேர்ந்திரு க்கிற செய்கைகளில் ஒரே நபர் ஒன்றல்லாமல் பல குற்றங்கள் செய்திருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் அவர்மேல் பிராது தயார்செய்து ஒரே தடவையில் அவரை விசாரணை பண்ணலாம்.

30-C. யாதொரு நபரின்மேல் யாதொரு குற்றத்துக்காகப் பிராதுகொண்டு வரப்பட்டிருந்து, சங்கதிகள் ருஜுவாவதன்மேல் அந்தக் குற்றம் ஒரு சிறிய குற் றமாக ஏற்படுகிற பட்சத்திலே, அந்த சிறிய குற்றத்துக்காக அவர்மேல் பிராது கொண்டுவரப்படாதிருந்தபோதிலும், அதற்காக அவரைக் குற்றவாளியென்று தீர்மானிக்கலாம்.

31. விசாரணைசெய்வதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தினத்திலாவது கேஸ் தள்ளிவைக்கப்படக்கூடிய வேறே யாதொரு தினத்திலாவது பிராதுதாரர் ஹாஜராகத் தவறிப்போய்விட்டால் பிராதைத் தள்ளிவிடலாம்.

32. விசாரணைசெய்வதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தினத்தில், குற் றஞ்சாட்டப்பட்டவர் ஹாஜராகாமலிருந்து அவருக்கு ஸம்மன் சேர்ப்பிக்கப்ப டவில்லையென்று தெரியவரும் பட்சத்தில், விசாரணையை மற்றொரு தினத்துக் குத் தள்ளிவைத்துக்கொண்டு அந்த தினத்தில் ஹாஜராகும்படி குற்றஞ்சாட்டப் பட்டவருக்குப் புதிதாய் ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்.

33. ஸம்மன் சேர்ப்பிக்கப்பட்ட பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவர் ஹாஜரா கத் தவறிப்போய்விட்டாலும், அவர் ஸம்மன் சேர்ப்பிக்கப்படாதபடி தப்பித்துக் கொண்டிருக்கிறாரென்று தெரியவந்தாலும் அவரைப் பிடிப்பதற்கு வாரண்டு பிற ப்பிக்கலாம். சாதாரணமாய் முதலில் ஜாமீன் வாங்கத்தக்க வாரண்ட் பிறப்பிக்க வேண்டும்.

34. குற்றஞ்சாட்டப்பட்டவர் விசாரணைக்காக நிஷ்கரிஷைசெய்யப்பட்ட தினத்தில் ஹாஜரானால், ப்ரெஸிடென்டானவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிராது அல்லது போலீஸ் ரிபோர்ட்டின் முக்கியமான அம்சங்களையும், அவர்மேல் சாட் டப்பட்டிருக்கும் குற்றத்தின் தன்மையையும் அவருக்கு விவரமாய் எடுத்துச் சொல்லி, அந்தக் குற்றத்தை அவர் ஒப்புக்கொள்ளுகிறாரா அல்லது மறுக்கிறாரா வென்று அவரைக் கேட்கவேண்டும்.

35. குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், கோர்ட்டார்-அவரைக் குற்றவாளியென்று தீர்மானம்செய்து, சட்டப்படி அவருக்கு தண்டனை விதிக்கவேண்டும்.

36. அவர் குற்றவாளியல்லவென்று வாதஞ்செய்தாலும் வாதஞ்செய்ய மறுத்தாலும், கோர்ட்டார் பிராதுகாரர் எவராகிலும் இருந்தால் அவரையும் பிராது தாரப்பு சாட்சிகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சாட்சிகளையும் விமரிசைசெய்யத் தொடங்கவேண்டும்.

37. பிராதுதாரராவது குற்றஞ்சாட்டப்பட்டவராவது கேட்டுக்கொள்வதன்மேல் கோர்ட்டார் நிர்ணயிக்கப்பட்ட சமூமுறைப்படி சாட்சிகளுக்கு ஸம்மன் பிறப்பிக்கவேண்டும்.

38. கோர்ட்டார்-கேஸை நியாயமாய்த் தீர்ப்புசெய்வதற்கு எந்த நபர்களுடைய சாட்சியம் அவசியமென்று தங்களுக்குத் தோற்றுகிறதோ அந்தநபர்களுக்குங்கூட ஸம்மன் அனுப்பி அவர்களையும் விமரிசை செய்யலாம்.

39. கோர்ட்டார் 36-வது விதியில் சொல்லியிருக்கும் சாட்சியத்தையும் தாங்களாகவே ஹாஜர் செய்விக்கக்கூடிய (எதாவது) பின்னும் சாட்சியத்தையும் வாங்குவதன்மேலும், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே குற்றஞ்சாட்டப்பட்டவரை விமரிசைசெய்வதன்மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியல்லவென்று கோர்ட்டார் தீர்மானித்தால், அவர்கள் விடுதலைசெய்கிற உத்தரவை எழுதிவைக்கவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியென்று கோர்ட்டார் தீர்மானித்தால், அவர்கள் சட்டப்படி அவருக்கு தண்டனை விதிக்கவேண்டும்.

40. முந்திய எந்த தசையிலாவது கோர்ட்டார் எவையேனும் காரணங்களைக்கொண்டு கேஸ் ஏற்படவில்லையென்று அபிப்பிராயப்படும்பட்சத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதற்கு மேற்படி விதியிலுள்ள தெதனுலும் தங்களுக்குத் தடை ஏற்படுவதாக எண்ணக்கூடாது ; மேற்படி காரணங்களை எழுத்து மூலமாய் ரெகார்ட்செய்து வைக்கவேண்டும்.

41. குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு விரோதமாக சாட்சியத்தில் ஏற்படும் எந்த விஷயங்களைக் குறித்தாகிலும் அவர் சமாதானம் சொல்லக்கூடியவராயிருக்கும்பொருட்டு, கோர்ட்டார்-அவரை விசாரணையின் எந்த தசையிலாகிலும் தங்களுக்கு அவசியமாகத்தோற்றுகிற கேள்விகள் கேட்கலாம் ; அன்றியும், மேலே கண்ட காரியத்துக்காக அவர்கள்-பிராது தாரப்பு சாட்சிகளை விமரிசை செய்தான பிறகும் அவரை எதிர்வாதஞ்செய்ய அழைப்பதற்கு முன்னும் பொதுப்பட கேஸ் விஷயமாய் அவரைக் கேள்விகள் கேட்கவேண்டும்.

42. குற்றஞ்சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஜவாப்புகளைப்பற்றி அந்த விசாரணையில் ஆலோசிக்கலாம்.

43. குற்றஞ்சாட்டப்பட்டவர் - மேற்படி கேள்விகளுக்குஜவாப்பு சொல்ல மறுப்பதனுலாவது அவைகளுக்குப் பொய்யான ஜவாப்பு சொல்வதனுலாவது தண்டனை விதிக்கப்படுவதற் குள்ளாகமாட்டார்; ஆனுல், கோர்ட்டார் அந்தப்படி மறுப்பதிலிருந்தாகிலும் அப்படிப்பட்ட ஜவாப்புகளிலிருந்தாகிலும் தங்களுக்கு நியாயமாகத்தோற்றுகிற சங்கதியை ஊகித்துக்கொள்ளலாம்.

44. குற்றஞ் சாட்டப்பட்டவரைப் பிரமாணம் செய்விக்கக்கூடாது.

45. கோர்ட்டார் தங்களுக்குள் ஒரே மாதிரியான அபிப்பிராயம்கொள்ளாவிட்டால், கோர்ட்டைச்சேர்ந்த மெம்பர்களில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயப்படி தீர்ப்பு செய்யவேண்டும். கோர்ட்டார் அபிப்பிராயத்தில் சமமாக வேறுபட்டால், ப்ரெஸிடென்டுக்கு (காஸ்டிங்) முடிக்கும்படியான வோட் உண்டு. கோர்ட்டாரின் தீர்ப்பைச்சொல்வது ப்ரெஸிடென்டின் கடமையாகும். கோர்ட்டைச்சேர்ந்த மெம்பர்களில் தீர்ப்புக்குச் சம்மதிக்கிறவர்கள் அதில் கையெழுத்து செய்யவேண்டும். அபிப்பிராயபேதமுள்ள யாதொரு மெம்பர் அந்தத் தீர்ப்பினின்றும் பேதப்படுவதற்குத் தம்முடைய காரணங்களை எழுதிவைக்கலாம்.

46. போதுமான காரணத்தைக்கொண்டு யாதொரு கேஸை அப்போதைக்கப்போது தள்ளிவைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

47. மேற்படி ஆக்ட் 76-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b), (d) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிட்டிருக்கும் குற்றங்களின் விஷயத்தில்தவிர மற்ற விஷயங்களிலே, பிராதுதாரர் எந்ததசையிலாவது தம்முடைய பிராதை வாபஸ் வாங்கிக்கொள்ளவோ அல்லது துன்பமடைந்த நபருடன் ராஜி செய்துகொள்ளவோ அவருக்கு சுதந்தரமுண்டு. யாதொரு குற்ற விஷயமான பிராதை வாபஸ் வாங்கிக்கொண்டாலும் அது சம்பந்தமாய் ராஜிசெய்துகொண்டாலும் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுதலை யடைந்ததாய் எற்படும்.

48. கோர்ட்டார் அனுமதிகொடுத்தால், பிராதுதாரருக்காவது குற்றஞ் சாட்டப்பட்டவருக்காவது பிரதிநிதியாக கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற எஜென்ட் பிரவர்த்திக்கலாம்; ஆனுல், வக்கில் குமாஸ்தாவாகிலும் மனு எழுதுகிறவராகிலும் வக்கிலுக்கு கேஸ் பிடித்துக்கொடுக்கிறவராகிலும் ஹாஜராவதற்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. போலீஸ் ரிபோர்ட்டின்மேல் பிடிக்கப்பட்ட யாதொரு கேஸ் விஷயத்தில் ஹெட்கான்ஸ்டேபிலின் அந்தஸ்துக்குக்குறையாத ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் பிராது நடத்தலாம்; ஆனுல், அவர் அந்தக் கேஸின் முதல் விசாரணையில் சம்பந்தப்பட்டவராய் இருக்கக்கூடாது.

49. கோர்ட்டின் அதிகாரப் பிரதேசத்துக்கப்பால் இருக்கும் யாதொரு நபருக்கு ப்ராஸெஸ் என்னும் கட்டளையைச் சேர்ப்பிப்பதாவது அவர்மேல் அதை நிறைவேற்றுவதாவது அவசியமாயிருக்கும்போதெல்லாம் அதை மேற்படி நபர் எந்த ஸ்டேஷனரி ஸப்-மாஜிஸ்ட்ரேட்டின் அல்லது தாலூக்கா மாஜிஸ்ட்

ரேட்டின் அதிகார எல்லைக்குள் வாசஞ்செய்கிறாரோ அந்த ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அல்லது தாலூகா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும். அந்த மாஜிஸ்ட்ரேட்டானவர்-அது தம்மாலேயே பிறப்பிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அதைச் சேர்ப்பிக்கும்படியாவது நிறைவேற்றும்படியாவது செய்யவேண்டியதுமல்லாமல், மேற்படி ப்ராஸெஸ் எந்தக் காலத்திலும் எந்தமாதிரியாகவும் எந்த நபராலும் சேர்ப்பிக்கப்பட்டது அல்லது நிறைவேற்றப்பட்டதென்பதைக் குறிப்பிட்டுள்ள ஒரு ரிடர்ன் ஸஹிதமாக அதைப்பிறப்பித்த கோர்ட்டுக்குத் திரும்ப அனுப்பவும்வேண்டும். அப்படிப்பட்ட ரிடர்னானது அதில் கண்டிருக்கும் சங்கதிகள் விஷயமாய்ப் பிரத்தியக்ஷமான சாட்சியமாகும்.

49.-A. (i) யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படத்தக்க குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எந்த நபரையாகிலும் பஞ்சாயத்து கோர்ட்டாரின் பிரதேச எல்லைகளுக்குள் பிடிப்பதற்காக அவர்களால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு வாரண்டையும், சாதாரணமாய்க் கடிதங்கள் முதலியவை கொண்டுபோகும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் கிராம ஊழியக்காரருக்காவது இது காரியத்துக்காக நியமிக்கப்பட்டிருக்கும் வேறே உத்தியோகஸ்தருக்காவது அனுப்பவேண்டும்.

(ii) ஜாமீன் வாங்கத்தக்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்து மேற்படி வாரண்ட் ஒப்புவிக்கப்பெற்ற உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாக ஜாமீன்கொடுக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே, பிடிக்கப்பட்ட நபரை எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவருவது சௌகரியமாயிருக்குமோ அவ்வளவு சீக்கிரத்தில் கோர்ட்டுக்கு முன் கொண்டுவரவேண்டுமென்று அந்த உத்தியோகஸ்தருக்கு அதில் கட்டளையிடவேண்டும்.

(iii) பிடிக்கப்படும் நபர் அதற்கு உடன்பட்டு காவலுக்கு வந்தால் அல்லது வருகிறதாய்ச் சொன்னாலன்றி மற்றப்படி, பிடிக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் - அவருடைய தேகத்தின்மேல் வாஸ்தவத்தில் கை வைக்கவாகிலும் வேண்டும், அவரைக் காவற்படுத்தவாகிலும் வேண்டும்.

49-B. யாதொரு ஜாமீன் பத்திரத்தில் கண்ட ஷரத்து நிறைவேறவில்லை என்று கோர்ட்டாருக்குத் தோற்றினால், கோர்ட்டார்-அதிற்கண்ட தண்டத்தொகையைச் செலுத்தும்படியாவது, அது ஏன் செலுத்தப்படக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படியாவது அந்தப் பத்திரத்தினால் பிணைப்பட்டிருக்கும் யாதொரு நபருக்கு உத்தரவு செய்யவேண்டும். போதுமான காரணம் காட்டப்படாமலும் தண்டத்தொகை செலுத்தப்படாமலுமிருந்தால், கோர்ட்டார் - மேற்படி பத்திரத்தில் கண்டிருக்கும் தண்டத்தொகை இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின் [பிரகாரம் பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அதை வசூலிக்கவேண்டும்.

50. தம்முடைய கிராமம் எந்தக் கோர்ட்டின் அதிகாரவரம்புக்குள் இருக்கிறதோ அந்தக் கோர்ட்டின் ப்ரெஸிடெண்ட் கேட்டுக்கொள்ளும்போதெல்லாம் கிராமப் பெரியதனக்காரரானவர் பரிசீலனை நடந்துவரும் யாதொரு க்ரிமினல் கேஸுக்குச் சம்பந்தப்பட்ட எதேனும் சொத்தைத் தம் வசத்தில் ஒப்புவித்துக் கொண்டு அதை பந்தோபஸ்துசெய்து வைத்திருந்து கேட்கும்போதெல்லாம் அதை அப்போதைக்கப்போது ஹாஜர்ப்படுத்தும்படி செய்வது அவருடைய கடமையாகும்.

51. தேசாசாரப்படிக்கும் வழக்கப்படிக்கும் பஹிரங்கத்தில் வந்து ஹாஜராகும்படி நிர்ப்பந்திக்கப்படக்கூடாத ஸ்திரீகளும், கோர்ட்டில் நேராய் ஹாஜராவதினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் நபர்களும், வியாதிகாரணமாகவாவது தேக துர்ப்பலம் காரணமாகவாவது பிரமாத அசௌகரியம் உண்டாகாமல் ஹாஜராக முடியாதவராயிருக்கும் யாதொரு நபரும் கோர்ட்டில் நேராய் ஹாஜராவதினின்றும் நிவாரணையாவார்கள்; ஆனால், அப்படிப்பட்ட யாதொரு நபரின் சாட்சியம் அவசியமாயிருந்தால், அப்படிப்பட்ட நபரைக் கோர்ட்டார் அவருடைய வாசஸ்தலத்திலேயே விமரிசை செய்யவேண்டும்.

3. மேற்படி ஆக்ட் 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின் (h) அடையாளமிட்ட பகுதியின்படிக்கான விதிகள்.

52. பஞ்சாயத்து கோர்ட்டுகளின் டிக்ரிகளை நிறைவேற்றுவதற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பத்தை ப்ரெஸிடெண்டுக்காவது இதுவிஷயமாய் அவரால் நியமிக்கப்பட்ட வேறே யாதொரு மெம்பருக்காவது செய்துகொள்ள வேண்டும்.

53. (a) பஞ்சாயத்து கோர்ட்டால் பிறப்பிக்கப்படும் சகல ஸம்மன்களிலும் நோடிஸுகளிலும் நிறைவேற்றுவதற்கான ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளிலும் பஞ்சாயத்து கோர்ட்டின் ப்ரெஸிடென்டாவது, அவர் கையெழுத்துப் போடமுடியாவிட்டால் இதுவிஷயமாய் அவரால் நியமிக்கப்பட்ட வேறே யாதொரு மெம்பராவது கையெழுத்து போடவேண்டும்.

(b) நிறைவேற்றுவதற்கான சகல உத்தரவுகளையும் நிறைவேற்றுவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி கிராமமுன்ஸிப் அல்லது பஞ்சாயத்துக்கோர்ட் ப்ரெஸிடெண்டின் கடமையாகும்.

53-A. 53-வது பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டின் டிக்ரியை நிறைவேற்றுகையில் வாஸ்தவத்தில் கைப்பற்றி ஜப்தி செய்யப்பட்டிருக்கும் சொத்தை ஷை பிரிவின்படி தீர்ப்பான கடனாளியின் வசத்தில் விட்டுவைக்க முடியாவிட்டாலும், 58-வது பிரிவில்கண்ட விலக்குநிபந்தனைகளின்படி விற்பனை செய்யமுடியாவிட்டாலும் அதை ஷைகோர்ட்டின் ப்ரெஸிடென்டானவர் கிராமப் பெரியதனக்காரர் வசத்தில் விட்டுவைக்கலாம்.

குறிப்பு:—இந்த விதியில், 'கிராம முன்ஸிப்' என்னும் சொற்றொடரில் பஞ்சாயத்து கோர்ட் ப்ரெஸிடெண்ட்' என்பது அடங்காது.

4. மேற்படி ஆக்ட் 78-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின் (i). (j) அடையாளமிட்ட பகுதிகளின்படிக்கான விதிகள்.

54. பஞ்சாயத்து கோர்ட்டின் ரெகார்டுகளைப் பஞ்சாயத்து கோர்ட்டின் ப்ரெஸிடெண்ட் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். பைசல்செய்யப்பட்ட கேஸுகளின் ரெகார்டுகளை அவர் எந்தக் கால் வருஷத்தில் அந்த கேஸுகள் பைசல்செய்யப்பட்டனவோ அதற்கு அடுத்த கால்வருஷம் முடிவதற்குள், அவை க்ரிமினல் கேஸுகளாயிருந்தால் அந்த கிராமக் கோர்ட் எந்த ஸப் மாஜிஸ்ட்ரேட்டின் அதிகார வரம்புக்குள் இருக்கிறதோ அந்த ஸப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கும், ஸிவில் கேஸுகளாயிருந்தால் அந்தக் கிராமக்கோர்ட் எந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபின் அதிகார வரம்புக்குள் இருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டுக்கும் அனுப்பவேண்டும்; ஆனால், யாதொரு கேஸ் அல்லது வியாஜ்ஜியத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களால் தாக்கல்செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளை மேற்படி கேஸ் அல்லது வியாஜ்ஜியம் பைசல்செய்யப்பட்ட பிறகாவது புனராலோசனை செய்யவேண்டுமென்று மனுசெய்துகொள்ளப்பட்டிருக்கும் விஷயத்திலே புனராலோசனை மனு பைசல்செய்யப்பட்ட பிறகாவது அறுபது தினங்கள் கழித்தபிறகு அவர்கள் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் அவர்களுக்கு வாபஸ்செய்துவிடவேண்டும்.

55. யாதொரு விசாரணை முடிந்தவுடனே, கோர்ட்டார் - தங்களுக்குமுன் ஹாஜர்படுத்தப்பட்டோ அல்லது தங்களுடைய வசத்திலோவுள்ள யாதொரு சொத்து அல்லது தஸ்தவேஜையாகிலும், எந்தசொத்து அல்லது தஸ்தவேஜு விஷயமாய் யாதொரு குற்றம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறதோ அல்லது யாதொரு குற்றம் செய்வதற்காக எந்தசொத்து அல்லது தஸ்தவேஜு உபயோகப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொத்து அல்லது தஸ்தவேஜையாகிலும் ஒருவகைசெய்வதற்காகத் தங்களுக்குத் தகுதியாகத்தோற்றுகிற உத்தரவு செய்யலாம். மேலும், இந்த விதியின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரும் காரியத்துக்காக கோர்ட்டார் வாரண்ட் பிறப்பிக்கலாம்.

விவரணம்—இந்த விதியிலே, 'சொத்து' என்னும் வார்த்தையில், எந்த சொத்து விஷயமாய் யாதொரு குற்றம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறதோ அந்த சொத்தின் விஷயத்திலே யாதொரு கட்சிக்காரரின் சுவாதீனத்திலாவது மேல் விசாரணையின் கீழாவது பிரதமத்தில் இருந்திருக்கிற சொத்து என்பது அடங்குவதுமாத்திரமேயல்லாமல் தன்மையாகிலும் மற்றப்படியாகிலும் அது எந்த சொத்தாகவோ சொத்துக்காகவோ மாற்றப்பட்டிருக்கக் கூடுமோ அல்லது

பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்கக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு சொத்து என்பதும், அந்தப்படி மாற்றுவதனுலாயினும் பரிவர்த்தனை செய்வதனுலாயினும் அடையப்படும் யாதொன்று என்பதும் அடங்கும்.

56. யாதொரு கிராமக்கோர்ட்டின் ரெகார்டுகள் ஸப்-மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபின் வசத்தில் இருக்கும் விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களிலே,மேற்படி ரெகார்டுகளுக்கு நகல்கள் வேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பத்தை கிராமக்கோர்ட்டுக்குச் செய்துகொள்ளவேண்டும். முன்னே சொல்லப்பட்ட விஷயங்களிலே சந்தர்ப்பத்துக்கேற்றபடி கிராமக்கோர்ட்டுக்காவது ஸப்-மாஜிஸ்ட்ரேட்டுக்காவது டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபுக்காவது விண்ணப்பம் செய்துகொள்ளலாம். கிராமக் கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால், அந்தக் கோர்ட்டார் - அவசியமான (ஸ்டாம்புகளை) முத்திரைகளைக்கொண்டுவரச்சொல்லி, முத்திரைகள் சகிதமாகவும் ரெகார்டுகள் தங்கள் வசத்திலிருந்தால் அந்த ரெகார்டுகள் சகிதமாகவும் மேற்படி விண்ணப்பத்தை, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தக் கிராமக் கோர்ட் எந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் அல்லது ஸப்-மாஜிஸ்ட்ரேட்டின் அதிகார வரம்புக்குள் இருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்புக்காவது ஸப்-மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அனுப்பவேண்டும். அந்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் அல்லது ஸப்-மாஜிஸ்ட்ரேட்டானவர் தம்முடைய சிப்பந்திகளைக் கொண்டு மேற்படி நகல்கள் தயார்செய்வித்து, ரெகார்டுகள் எவையேனும் வரப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவை சகிதமாக அந்த நகல்களை கிராமக்கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும்; அதன்மேல் கிராமக்கோர்ட்டார் மேற்படி நகல்களை விண்ணப்பதாரர்களிடத்தில் ஒப்பிக்கவேண்டும். ஆனல், யாதொரு விண்ணப்பதாரர் தமக்கு வேண்டியிருக்கும் நகல்களை டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபாவது ஸப்- மாஜிஸ்ட்ரேட்டாவது நேராய்த் தம்மிடத்தில் ஒப்பிக்கவேண்டுமென்றாகிலும் தம்முடைய செலவில் சாதாரண தபால் மூலமாகவோ ரெஜிஸ்டர் தபால் மூலமாகவோ அனுப்பவேண்டுமென்றாகிலும் தம்முடைய விண்ணப்பத்தில் விரும்பும் பட்சத்திலே, அவைகளை அந்தப்படியே ஒப்புவிக்கவேண்டும் அல்லது அனுப்பவேண்டும்.

* 57. கிராமக் கோர்ட்டின் அதிகாரப் பிரதேசத்துக்கு அப்பாலிருக்கும் பிரதிவாதிகளுக்கு மேற்படி ஆக்ட் 27-வது பிரிவின்படி ஸம்மன் சேர்ப்பிப்பதற்கு அடியிற்கண்ட கட்டணத்தொகைகள் விதித்து வாங்கப்படும்; அவையாவன:—

ஒவ்வொரு ஸம்மனுக்காகவும்—

(a) ஒரு பிரதிவாதிக்கு ... ... 8 அணு

---

* கிராமக் கோர்ட்டுகளால் வசூலிக்கப்பட்ட கோர்ட் கட்டணங்களைக் குறித்துக் கணக்கு சொல்லும்விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை சம்பந்தமாய் 57, 58, 60, 61-விதிகளுக்கு சேர்க்கவேண்டிய அடிக்குறிப்பை இந்த விதிகளுக்கு பிறகு 58-ம் பக்கத்தில் துடர்ச்சியாய் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(b) ப்ராஸெஸ் என்னும் கட்டளைக்காக ஏககாலத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால் அதே கிராமத்தில் வசிக்கும் அதிகப்படியான ஒவ்வொரு பிரதிவாதிக்கும். 4 அணா.

* 58. கிராம ஊழியக்காரராலன்றி மற்றப்படி சேர்ப்பிக்கப்படுகிற மேற்படி ஆக்ட் 25-வது, 40-வது பிரிவுகளின்படிக்கான ஸம்மன்களுக்கு அடியிற் கண்ட கட்டணங்கள் விதித்து வாங்கப்படும்.—

(I) கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் வசிக்கும் ஒவ்வொரு சாட்சி அல்லது பிரதிவாதிக்கும் ... ... 1 அணா

(II) கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைகளுக் கப்பால் வசிக்கும் ஒவ்வொரு சாட்சிக்கும். 2 அணா

குறிப்பு—சாட்சியானவர் ஸம்மன் பிறப்பிக்கும் அல்லது சவால் அனுப்பும் கிராமக்கோர்ட்டின் அதிகார வரம்புக்கு வெளியில் வாசஞ்செய்யும் விஷயங்களிலே மேலே (II) குறிப்பிட்ட விதியின்படி இரண்டணா கட்டணம் விதித்து வாங்கப்படும். ஸம்மன் அனுப்பப்படும் அல்லது சவால் அனுப்பப்படும் கிராம முன்ஸிபினிடத்தில் ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்காக பிரத்தியேகமான சிப்பந்தியிருந்தால் ஸம்மன் சேர்ப்பிப்பதற்காவது எந்த சாட்சிக்கு சவால் அனுப்பப்பட்டிருக்கிறதோ அவருக்கு ஸம்மன் பிறப்பிப்பதற்காவது (I) குறிப்பிட்ட விதியின்படி ஒரு அணா கட்டணம் வாங்கப்படும். ஸம்மன் பிறப்பிக்கும் அல்லது சாவல் அனுப்பும் கிராமக்கோர்ட்டானது அந்த ஸம்மன் அனுப்பப்படும் அல்லது சாவல் அனுப்பப்படும் கிராம முன்ஸிபுக்கு இந்தத் தொகையைக் கொடுத்துவிடவேண்டும். ஸம்மன் அனுப்பப்படும் அல்லது சவால் அனுப்பப்படும் கிராம முன்ஸிபினிடத்தில் பிரத்தியேகமான சிப்பந்தியிராவிட்டால் மேற்படி ஸம்மனானது சாதாரண கிராம சிப்பந்தியினால் இலவசமாய்ச் சேர்ப்பிக்கப்படவேண்டும்; மேலும், ஸம்மன் பிறப்பித்த அல்லது சவால் அனுப்பின கோர்ட்டார் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

59. க்ரிமினல் கேஸுகளில் சாட்டப்பட்ட குற்றமானது இந்தியன் பினல் கோட் 277, 283, 379-வது பிரிவுகளின்படிக்கான குற்றமாயிருந்தாலும் பட்டணங்களில் நடக்கும் அசிங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறித்த சென்னபட்டணத்து ஆக்டின்படிக்கான குற்றமாயிருந்தாலும், சாட்சிகளாவது குற்றஞ் சாட்டப்பட்டவராவது கோர்ட்டின் அதிகாரவரம்புக்குள் வாசஞ்செய்து கொண்டிருந்தாலும், அந்த சாக்ஷிகளுக்காகிலும் குற்றம் சாட்டப்பட்டவருக்காகிலும் ஸம்மன் சேர்ப்பிப்பதற்காக கட்டணம் எதுவும் விதித்து வாங்கப்படமாட்டாது.

*60. இதர விஷயங்களிலே அடியிற்கண்ட கட்டணத்தொகை விதித்து வாங்கப்படும் :—

(a) குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவருக்காவது ஒரு சாட்சிக்காவது ... ... 4 அணு.

(b) ஸம்மனுக்காக ஏககாலத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால், அதே கிராமத்தில் வசித்துக்கொண்டிருக்கும் குற்றஞ் சாட்டப்பட்ட அதிகப்படியான ஒவ்வொரு நபருக்குமாவது அதிகப்படியான ஒவ்வொரு சாட்சிக்குமாவது ... 2 அணு.

*61. டிக்ரிகளை நிறைவேற்றுவதற்கான கட்டணம் 8 அணு.

62. (ரத்துசெய்யப்பட்டது.)

63. சகல கட்டணங்களையும் ரொக்கமாய்ச் செலுத்தவேண்டும்.

5. பொது.

64. யாதொரு பஞ்சாயத்து கோர்ட்டிலாவது அது சம்பந்தமாகவாவது நடத்தப்படும் எந்த நடவடிக்கையாயினும் காரியமாயினும் - அந்தக் கோர்ட்டின் அமைப்பில் ஏதேனும் குறைவு இருப்பது காரணத்தினுல் மாத்திரமேயாகிலும், அந்தக் கோர்ட்டின் யாதொரு மெம்பர் அப்படிப்பட்ட மெம்பராகப் பிரவர்த்திக்கவோ அந்தக் கோர்ட் சம்பந்தமாய் யாதொரு உத்தியோகம் வகிக்கவோ யோக்கியதையற்றவராயிருந்தார் அல்லது அந்தப்படி பிரவர்த்திக்க அல்லது வகிக்க பாத்தியதையற்றவராயிருந்தார் என்னும் காரணத்தினுல் மாத்திரமேயாகிலும், அந்தக் கோர்ட்டின் ப்ரெஸிடென்ட் உத்தியோகத்திலாவது மெம்பர் உத்தியோகத்திலாவது யாதொரு காலி ஏற்பட்டிருந்தபோது அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கை அல்லது காரியம் நடத்தப்பட்டது என்னும் காரணத்தினுலேயாகிலும் சட்டசம்மதமற்றதாக எண்ணப்படமாட்டாது; ஆனுல், அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கையினுலாகிலும் காரியத்தினுலாகிலும் பாதிக்கப்பட்ட யாதொரு கட்சிக்காரர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அதை ஜில்லா கலெக்டர் ரத்துசெய்யலாம்.

விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக, "நடவடிக்கை" என்பதில் தீர்ப்புகள், டிக்ரிகள், உத்தரவுகள் என்பவைகளும் அடங்கும்.

6. ஷை ஆக்ட் 46-வது பிரிவின்படிக்கான விதி.

65. கட்சிக்காரராவது அவருடைய ஏஜென்ட் யாராவது ஹாஜராயிருந்தால் அவரிடத்தில் 46-வது பிரிவின்படிக்கான டிக்ரியின் நகலை ஒப்புவிக்கலாம்; அவர் ஹாஜராயிராவிட்டால், அதை அவருடைய செலவில் அவருக்குத் தபால் மூலமாய் அனுப்பவேண்டும்.

கிராமக் கோர்ட்டுகளால் வசூலிக்கப்பட்ட கோர்ட் கட்டணங்களைக் குறித்துக் கணக்குச்சொல்லும் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை. (57, 58, 60, 61-ம் விதிகளைப் பார்க்கவும்.)

1. சென்னபட்டணம் 1920-ம் வருஷத்து 2-வது ஆக்டினுல் திருத்தப்பட்டபடிக்குள்ள 1888-ம் வருஷத்திய சென்னபட்டணத்து கிராமக் கோர்ட்டுகளாக்டின்படி செய்யப்பட்டு, 1922-ம் வருஷம் மார்ச்சுமீ 2வ. லா (ஜெனரல்) டிபார்ட்மெண்டில் பிறந்த 579-ம் நெ. கவர்ன்மெண்ட் உத்தரவில் வெளியிடப்பட்ட விதிகளில் 57, 58, 60, 61-வது விதிகளின்படி வாங்கப்படத்தக்க சகல கட்டணங்களையும் கிராமக் கோர்ட்டுகள் வசூலிக்கவேண்டும்; மேலும், அவைகளைச் செலுத்துகிறவருக்கு ரசீது கொடுக்கவேண்டும்.

2. அந்தப்படி வசூலிக்கப்பட்ட கட்டணங்களைச் சிறிதும் காலதாமதமில்லாமல் கிராமப் பெரியதனக்காரரிடம் கொடுத்துவிடவேண்டும். அவர் - அந்தக் கட்டணங்களை, நிலத்தீர்வை அல்லது வேறே வசூல் தொகைகளின் அடுத்த இரிசாலோடாவது மேற்படி பணம் கிராமப் பெரியதனக்காரரிடம் கொடுக்கப்பட்ட பிறகு தாலூகா ஆபீஸுக்கு முதலில் அனுப்பப்படும் கிராம வேலைக்காரரிடமாவது ஸப்-ட்ரெஷரிக்கு அனுப்பிவிடவேண்டும். பெரியதனக்காரரே மேற்படி கோர்ட்டின் ப்ரெஸிடெண்டாயிருந்தால், அதே விதி பிரயோகப்படும். அதாவது, அவர்-அந்தப்பணத்தை அடுத்த இரிசாலோடாவது அடுத்தாற்போல் தாலூகா ஆபீஸுக்கு அனுப்பப்படும் கிராம வேலைக்காரரிடமாவது அனுப்பிவிடவேண்டும். வரவு வைக்கப்படும் கட்டணங்கள் ஸிவில் கேஸுகளுக்கோ அல்லது க்ரிமினல் கேஸுகளுக்கோ சம்பந்தப்பட்டிருப்பதை அனுசரித்து "xvii. நீதிபரிபாலனம்-ரொக்கமாய் வசூலிக்கப்பட்ட கோர்ட் கட்டணங்கள்—ஸிவில் கேஸுகளில் கிராமக் கோர்ட்டுகளால் வசூலிக்கப்பட்ட கோர்ட் கட்டணங்கள் - க்ரிமினல் கேஸுகளில் கிராமக் கோர்ட்டுகளால் வசூலிக்கப்பட்ட கோர்ட் கட்டணங்கள்" என்னும் தலைப்பின்கீழ் மேற்படி கட்டணத்தை மாகாண வருமானங்களுக்கு வரவு வைக்கவேண்டும்.

ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணங்களின் விஷயத்தில், ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்காக வாஸ்தவத்தில் வசூலிக்கப்பட்ட கட்டணங்களை, மேற்படி கட்டளைகளைச் சேர்ப்பிப்பவர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால், அந்தப்படி ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் தொகையானது மாதம் ஒன்றுக்கு 8 ரூபாய்க்கு மேற்படக்கூடாது. கட்டணங்கள் மூலமாய் வசூலிக்கப்பட்ட தொகைகள் குறித்த யாதொரு மாதத்தில் செய்யப்பட்ட செலவுக்கு அதிகமாயிருந்தால், அந்தப்படி அதிகமாயிருக்கும் தொகையை, வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் செலவுக்கு வேண்டியிருக்கும் அதம தொகைக்குக் குறைவாய் எந்தமாதங்களில் இருக்கக்கூடுமோ அந்த மாதங்களில் உபயோகித்துக்கொள்வதற்காகச் சேமத் தொகையாய் வைத்துவைக்

கலாம். ஆயினும், ஸர்க்கார் வருஷ முடிவில் மீதியாயுள்ள வரவுத் தொகைகளைக் கஜானாவில் செலுத்திவிடவேண்டும்.

கஜானாவுக்கு இரிசால் செய்யாமல் வருஷத்திலே எந்தக் காலத்திலாவது கிராமக்கோர்ட்டின் ப்ரெஸிடெண்ட் கையில் வைத்திருக்கக்கூடிய தொகையானது 15 ரூபாய்க்கு மேற்படக்கூடாது.

3. கிராமக் கோர்ட்டார் - கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட தேதிகளையும் அவை கஜானாவுக்கு இரிசால் செய்யப்பட்ட தேதிகளையும் காட்டும் (காஷ்புக்) ரொக்கக் கணக்கு புஸ்தகம் ஒன்றையும் இரிசால் புஸ்தகம் ஒன்றையும் வைத்து வரவேண்டும்.

ரொக்கக் கணக்கு புஸ்தகத்திலே, பூர்த்தியாய் வரவுகளையும், அவைகளிலிருந்து செய்யப்பட்ட செலவுகள் எவையேனும் இருந்தால் அவைகளையும் முறையே வரவு செலவுக்குரிய பக்கங்களில் ஸ்பஷ்டமாய்க் காட்டவேண்டும். கஜானாவுக்கு இரிசால் செய்யும் தொகைகளையும் செலவுப் பக்கத்தில் காட்டவேண்டும்.

4. கட்டணம் விதித்து வாங்கக்கூடியதாயிருக்கும் ஒவ்வொரு ப்ராஸெஸ் என்னும் கட்டளையின்மேலும், கிராமக் கோர்ட்டார் - அதற்குச் சரியான கட்டணம் விதித்து வாங்கப்பட்டதென்று எண்டார்ஸ்மெண்ட் எழுதவேண்டும். மேலும், ஒவ்வொரு விஷயத்திலும் தொகை இவ்வளவென்று குறிப்பிடவேண்டும்.

5. ஒவ்வொரு வருஷமும் மேமீ 15உயன்றைக்காவது அதற்கு முன்பாவது, டிஸ்ட்ரிக்ட் ட்ரெஷரி ஆபிஸரானவர் (ஜில்லா கஜானா உத்தியோகஸ்தரானவர்)-முந்திய ஸர்க்கார் வருஷத்திலே ஸிவில் கேஸுகளில் கிராமக் கோர்ட்டுகளால் வசூலிக்கப்பட்டு கஜானாவுக்கு இரிசால் செய்யப்பட்டிருக்கும் கோர்ட் கட்டணங்களைக் குறித்த ஸ்டேட்மெண்ட் ஒன்றை டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்கு அனுப்பவேண்டும். க்ரிமினல் கேஸுகளின் விஷயத்தில் இதே மாதிரியான ஸ்டேட்மெண்ட் ஒன்றை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

குறிப்பு.—ஸிவில் கோர்ட்டுகளின் அதிகாரவரம்பும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளின் அதிகாரவரம்பும் ஒன்றுகவே யிராத விஷயங்களில், ட்ரெஷரி ஆபிஸர்கள்-பற்பல கோர்ட்டுகளுக்காக தனித்தனி கணக்குகள் வைத்து, ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளைச் சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுக்காவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அனுப்பவேண்டும்.

6. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர்-தம்முடைய ஜில்லாவிலுள்ள கிராமக் கோர்ட்டுகளால் வைத்துவரப்படும் கணக்குகளைத் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களைக்கொண்டு அரை வருஷத்துக்கு ஒருமுறை பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

7. பஞ்சாயத்து கோர்ட்டுகள் 78-வது (2) g உட்பிரிவுப்படி அடியிற்கண்ட ரெஜிஸ்டர்கள் வைத்துவர வேண்டும் :—

1.—கேசுகளைக்குறித்த ரெஜிஸ்டர்.

கேஸின் வரிசைக் கிரமமான நம்பர்.	குற்றம் செய்யப்பட்ட தேதி.	ரிபோர்ட் அல்லது பிராதின் தேதி.	பெயர், வமிசம், வாசஸ்தலம்.		சாட்சிகள்.	
			பிராதுதாரர்	குற்றஞ் சாட்டப்பட்டவர்	பிராது தரப்பு	பிரதிவாதி தரப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6) a	(6) q

பிராது செய்யப்பட்ட குற்றமும், 76-வது பிரிவைச்சேர்ந்த 1 குறிப்பிட்ட உட்பிரிவின் (b), (c) அடையாளமிட்ட பகுதிகளின்படிக்கான கேஸுகளில் திருடிக்கொண்டுபோகப்பட்ட சொத்தின் மதிப்பு அல்லது உண்டாக்கப்பட்ட சேதத்தின் மதிப்பு.	குற்றஞ் சாட்டப்பட்டவரின்வாதமும் அவர் வாக்குமூலம் ஏதாவது கொடுத்திருந்தால் அதுவும்.	தீர்ப்பும், குற்றவாளியென்று தீர்மானம்செய்யும் விஷயத்தில் அதற்குள்ள காரணங்களின் சுருக்கமான குறிப்பும்.	விதிக்கப்பட்ட அபராதத் தொகை.	முடிவான உத்திரவின் தேதி.
(7)	(8)	(9)	(10)	(11)

அபராதங்களைக் குறித்த ரெஜிஸ்டர்.

ஜில்லா தாலூகாவைச் சேர்ந்த

கிராம பஞ்சாயத்து கோர்ட்டால் விதித்து வாங்கப்பட்ட அபராதங்களைக் குறித்த ரெஜிஸ்டர்.

அபராதம் விதிக்கப்பட்ட தேதி.	கேஸ் நம்பர்.	குற்றஞ் சாட்டப்பட்டவரின் பெயர்.	விதிக்கப்பட்ட அபராதத் தொகை.	வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை.	வசூலிக்கப்பட்ட தேதி.	கஜானாவில் வரவு வைத்த தேதி (இங்கே சலான் நம்பரையும் கஜானாவின் பெயரையுங்கூட பதியவும்.)	அபராதத்தைவசூலிக்க நடத்தப்பட்ட நடவடிக்கையையும், அபராதம் செலுத்தத் தவறிப்போயிருந்தால் ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரெகார்டை அனுப்பியதேதியையும் இங்கே பதியவும்.	ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டால் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.	ஷரா.
(1)	(2	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)

அபராதத்தைச் செலுத்த வாயிதா கொடுத்திருந்தாலும் அல்லது தவணையாக கொடுக்கும்படி உத்திரவு செய்திருந்தாலும் இவைகளை ஷராகலத்தில் குறிக்கவேண்டும்.

சொத்து ரெஜிஸ்டர்.

ஜில்லா தாலூக்காவைச் சேர்ந்த

கிராம பஞ்சாயத்து கோர்ட்டுக்கு முன் நடந்த விசாரணைகளிலாவது பரிசிலனைகளிலாவது ஹாஜர்ப் படுத்தப்பட்ட சொத்தை ஒருவகை செய்ததைக் காட்டும் ரெஜிஸ்டர்.

கேஸ் நம்பர்.	சொத்து விவரம்.	ஒருவகை செய்வதற்கான உத்தரவின் விவரங்கள்.	ஹாஜர்ப்படுத்தும் கட்சிக்காரருக்காவது அவருடைய ஏஜெண்டுக்காவது வாபஸ் செய்யப்பட்டிருந்தால் கையெழுத்தும் தேதியும்.	ஏலத்தில் விற்கப்பட்டிருந்தால், ஏலத்தின் தேதியும் கைக்குவந்த தொகையும்.	ஷரா. (விற்றுவந்த பணத்தை கஜானாவுக்கு இரிசால் செய்த தேதியை எழுதவும்.)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

பஞ்சாயத்து கோர்ட்டின் நடவடிக்கைகளைக் குறித்த ரேஜிஸ்டர்.

தேதி (1)	ஹாஜராயிருந்த பஞ்சாயத்துதாரர்களின் பெயர்கள். (2)	எடுத்துக்கொள்ளப்பட்ட கேஸ் நம்பர். (3)	செய்யப்பட்ட வேலையைப்பற்றிய சுருக்கமான குறிப்பு. (4)	ஷரா. (5)

பிராது முதலியவைகளைப்போன்ற வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட சகல தஸ்தாவேஜுகளையும் அனுப்பப்பட்ட சகல தஸ்தாவேஜுகளையும் குறித்த போது ரிஜிஸ்டர்.

வரிசைக்கிரமமான நம்பர். (1)	வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட தேதி. (2)	விஷயம். (3)	இன்னாரிடமிருந்து வரப்பெற்றுக்கொள்ளப்பட்டதென்பது. (4)	அனுப்பப்பட்ட தேதி ஏதாவதிருந்தால் அது. (5)	ஷரா. (6)

ரிடர்ன்கள் (விவரக்கணக்குகள்.)

1—வரப்பெற்றுக்கொள்ளப்பட்டும் பைசல் செய்யப்பட்டுமுள்ள கேஸுகளைக்குறித்த ஸ்டேட்மேன்ட்.

(பிரதிவருஷம் ஜனவரிமீ 15உயிலும் ஒவ்வொரு கால் வருஷம் முடிவில் 15உயிலும் ஸப்-டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் மூலமாக டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்படவேண்டும்.)

19 -ம்வருஷத்துக்காக அல்லது கால் வருஷத்துக்காக ஜில்லா தாலூகா வைச் சேர்ந்த பஞ்சாயத்து கோர்ட்டாரால் செய்யப்பட்ட க்ரிமினல் பரிசீலனைகளின் சங்கியையும் பொது முடிவையும் காட்டும் ஸ்டேட்மென்ட்.

ஜில்லாவின் பெயர்.	தாலூகாவின் பெயர்.	கோர்ட்டின் பெயரும் அதன் அதிகார வரம்புக்குள்ளிருக்கும் கிராமங்களின் பெயரும்.	பைசல் செய்யப்படுவதற்காக. நபர்களின் சங்கியை.			பைசல் செய்யப்படுவதற்காக. கேஸுகளின் சங்கியை.			பைசல் செய்யப் பட்டவை. நபர்களின் சங்கியை.			பைசலாகாமல் இருப்பவை.		அபராதங்கள்.			ஷரா.
			சென்ற வருஷ அல்லது கால்வருஷ முடிவிலிருந்து பைசலாகாமலிருப்பவை.	பிரஸ்தாப வருஷத்தில் அல்லது கால் வருஷத்தில் வரப்பெற்றுக் கொள்ளப்பட்டவை.	மொத்தம்.	சென்ற வருஷம் அல்லது கால் வருஷ முடிவிலிருந்து பைசலாகாமலிருப்பவை.	பிரஸ்தாப வருஷத்தில் அல்லது கால் வருஷத்தில் வரப்பெற்றுக் கொள்ளப்பட்டவை.	மொத்தம்.	குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டது, அபராதம் விதிக்கப்பட்டது.	தள்ளிவிடப்பட்டது.	மொத்தம்.	கேஸுகளின் சங்கியை.	நபர்களின் சங்கியை.	பிரஸ்தாப வருஷத்தில் அல்லது கால் வருஷத்தில் விதிக்கப்பட்டவை.	பிரஸ்தாப வருஷத்தில் அல்லது கால் வருஷத்தில் வசூலிக்கப்பட்டவை.	கஜானாவில் வரவு வைக்கப்பட்டவை.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)

ii—அபராதத்தைக் குறித்த ஸ்டேட்மெண்ட்.

கோர்ட்டின் மாதத்திய

அபராதத்தைக் குறித்த ஸ்டேட்மெண்ட்.

பாக்கி.	ரூ	அ	ப.	ஷரா.	நடைமுதல்.	ரூ	அ	ப.	ஷரா.
1. டிமாண்ட்—					1. டிமாண்ட்—				
(a) கவர்ன்மெண்டாருக்கு வரவு வைக்கப்படவேண்டிய அபராதங்கள்.					(a) கவர்ன்மெண்டாருக்கு வரவு வைக்கப்படவேண்டிய அபராதங்கள்.				
(b) கடைசியாய் லோகல் மியுனிசிபல், அல்லது பஞ்சாயத்து நிதி முதலியவைகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய அபராதங்கள்.					(b) கடைசியாய் லோகல் மியுனிசிபல் அல்லது பஞ்சாயத்து நிதி முதலியவைகளுக்கு வரவு வைக்கப்படவேண்டிய அபராதங்கள்.				
2. வசூல்.					2. வசூல்.				
3. (ஸப் ட்ரெஷரியில்) கீழ்க் கஜானாவில் வரவு வைக்கப்பட்ட தொகை-					3. (ஸப் ட்ரெஷரியில்) கீழ்க் கஜானாவில் வரவு வைக்கப்பட்ட தொகை-				
(a) கவர்ன்மெண்டாருக்கு.					(a) கவர்ன்மெண்டாருக்கு.				
(b) கடைசியாய் லோகல் மியுனிஸிபல், அல்லது பஞ்சாயத்து நிதி முதலியவைகளுக்கு வரவு வைக்கப்படவேண்டியது.					(b) கடைசியாய் லோகல் மியுனிஸிபல், அல்லது பஞ்சாயத்து நிதி முதலியவைகளுக்கு வரவு வைக்கப்படவேண்டியது.				
4. வசூலிக்க முடியாததென்று கணக்கிலிருந்து அடித்து விடப்பட்ட தொகை.					4. வசூலிக்க முடியாததென்று கணக்கிலிருந்து அடித்து விடப்பட்ட தொகை.				
5. நிலுவை.					5. நிலுவை.				

திட்டங்கள் :—(1) 2-வது, 3-வது பாபத்துகளுக்கு எதிரில் கண்டிருக்கும் தொகைகள் ஒத்துவராவிட்டால், அதற்குள்ள காரணத்தை ஷரா கலங்களில் விவரித்துச் சொல்லவேண்டும்.

(2) யாதொரு தொகையைக் கணக்கிலிருந்து அடித்துவிடும்படி செய்திருக்கும் உத்தரவை ஷரா கலத்தில் குறிப்பிடவேண்டும்.

ப்ரெஸிடெண்ட்.

டை. ஸ்டேட்மெண்டானது 19 -ம் ஸூ மாதத்திலே என்னுடைய கோர்ட்டில் விதிக்கப்பட்டும் வசூலிக்கப்பட்டும் வசூலிக்க முடியாதவையென்று கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்டுமுள்ள அபராதங்களைச் சரியாய்க் காட்டியிருக்கும் ஸ்டேட்மெண்ட் என்று உறுதிமொழி கூறப்படுகிறது.

ப்ரெஸிடெண்ட்.

மாதத்தில் கஜானுவுக்கு அல்லது கீழ்கஜானுவுக்கு இரிசால் செய்யப்பட்டிருப்பதாக இந்த ஸ்டேட்மெண்டின் இரண்டு பக்கங்களிலும் கண்டிருக்கும் தொகைகள் அந்தப்படியே இரிசால் செய்யப்பட்டனவென்று உறுதிமொழி கூறப்படுகிறது.

இடம் கீழ்கஜானு உத்தியோகஸ்தர்.

தேதி. கஜானு உத்தியோகஸ்தர்.

நமூனுக்கள்.

I.—சாட்சிக்கு ஸம்மன்.

(குற்றஞ்சாட்டப்பட்டவருடைய பெயரை இங்கே எழுதவும்)

மேல்

ஆகப் பிராது செய்யப்பட்டிருக்கிறபடியாலும், நீர் முக்கியமான சாட்சியம் சொல்லக்கூடுமென்று தெரியவருகிறபடியாலும்,

இதனால் உமக்கு உத்தரவு செய்கிறதென்னவென்றால்,—

-ம் ஸூ மீ உ (இங்கே மணி நேரத்தை எழுதவும்) க்கு நீர் இந்தக் கோர்ட்டுக்குமுன் ஹாஜராகவேண்டும்; மேலும், கோர்ட்டாருடைய அனுமதியில்லாமல் நீர் அவ்விடத்தை விட்டுப் போகக்கூடாது.

-ம் வருஷம் மாதம் தேதி.

ப்ரெஸிடெண்ட்.

II.—குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு ஸம்மன்.

பஞ்சாயத்து கோர்ட்டில்.

19 -ம் ஸூத்து -ம் நெ. காலெண்டர் கேஸ்.

க்கு.

பிராதுக்கு உத்தரவு சொல்ல நீர் அவசியம் ஹாஜராகவேண்டியிருக்கிறபடியால், 19 -ம்ஸு மீ உ நாலை அல்லது மாலை மணிக்கு ல் இருக்கும் பஞ்சாயத்து கோர்ட்டுக்கு முன் நேரில் ஹாஜராகவேண்டுமென்று உமக்கு இதனால் உத்தரவு செய்யப்படுகிறது.

19 -ம் ஸு மீ உ.

முத்திரை.

ப்ரெஸிடெண்ட்.

III.—ஆளைப்பிடிப்பதற்காக வாரண்ட்.

A.

(வாரன்டை நிறைவேற்றவேண்டிய நபர் அல்லது நபர்களின் பெயரும் உத்தியோக விபரமும்)

இதனால் உமக்கு (அல்லது உங்களுக்கு) உத்தரவு செய்கிறதென்னவென்றால்,—

ல் இருக்கும்

மேல் (குற்றம் இன்னதென்று கண்டெழுதவும்) குற்றம் சாட்டப்பட்டிருப்பதால், நீர் (அல்லது நீங்கள்) ஷை பிடித்து அவனை எனக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டும். நீர் (அல்லது நீங்கள்) அந்தப்படி செய்யத் தவறக்கூடாது.

இந்த வாரண்டின்மேல் அடியிற்கண்டபடி எண்டார்ஸ் செய்யலாம்:—

ஷை எனக்குமுன் -ம்ஸு மீ உ ஹாஜராகிறதாகவும் மற்றப்படி என்னால் உத்தரவு செய்யப்படுகிற வரையில் அப்படியே ஹாஜராய்க்கொண்டிருப்பதாகவும் தொகைக்கு அவனும், தொகைக்கு ஒரு ஜாமீன்தாரரும் (அல்லது ஒவ்வொருவரும் தொகைக்கு இரண்டு ஜாமீன்தாரர்களும்) ஹாஜர் ஜாமீன் கொடுத்தால், அவனை விட்டுவிடலாம்.

19 -ம் ஸு மீ உ.

(கையொப்பம்)

B

(வாரன்டை நிறைவேற்றவேண்டிய நபர் அல்லது நபர்களின் பெயரும் உத்தியோக விவரமும்) க்கு

இதனால் உமக்கு (அல்லது உங்களுக்கு) உத்தரவு செய்கிறதென்னவென்றால்,—

ல் இருக்கும்
மேல் (குற்றம் இன்னதென்று கண்டெழுதவும்)
குற்றம் சாட்டப்பட்டிருப்பதால், நீர் (அல்லது நீங்கள்) ஷை பிடித்து அவனை எனக்கு முன்பாகக் கொண்டுவரவேண்டும், நீர் (அல்லது நீங்கள்) அந்தப் படி செய்யத் தவறக்கூடாது.

19 -ம் ஷை மீ ௳.

(கையொப்பம்)

IV.—வாரன்டின்படி பிடிக்கப்பட்ட பின்பு முச்சலிக்காவும் ஜாமீன் பத்திரமும்.

ல் இருக்கும் (பெயர்)
ஆகிய நான் பிராதுக்கு
உத்தரவு சொல்ல ஹாஜராகவேண்டுமென்று என்னை நிர்ப்பந்திப்பதற்குப் பிறப்பிக்கப்பட்ட வாரன்டின்படி . ன்
க்கு (அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி க்கு)
முன்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறேன்; ஆகவே, ஷை பிராதுக்கு உத்தரவு சொல்ல அடுத்த 19 -ம்௵
மீ ௳யில் ன் பஞ்சாயத்துக் கோர்ட்டிலே முன்பாக ஹாஜராவதற்கும், கோர்ட்டாரால் மற்றப்படி உத்தரவு செய்யப்படுகிற வரையில் அப்படியே அவன் ஹாஜராய்க்கொண்டிருப்பதற்கும் அவனுக்கு நான் ஜாமீனென்று இதனால் உறுதியாய்ச் சொல்லுகிறேன்; அவன் அப படி செய்யத் தவறிப்போகிற பட்சத்தில், மாட்சிமை தங்கிய இந்தியா சக்ரவர்த்தியாகிய மஹாராஜா அவர்களுக்கு ரூபாய் தண்ட மிறுக்க நான் பிணைப்படுகிறேன்.

19 -ம்௵ மீ ௳

பிரெஸிடென்ட்.

V.—அபராதம் வசூலிப்பதற்கான வாரண்ட்.

கிராமத்தின் பெரியதனக்காரருக்கு.

(குற்றஞ் சாட்டப்பட்டவரின் பெயர்) 19 -ம்வருஷ மீ° உ குற்றஞ் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

அபராதம் செலுத்தும்படி அவருக்கு சிட்சை விதிக்கப்பட்டிருக்கிறபடியாலும், அவர் அதைச் செலுத்தாதிருக்கிறபடியாலும், இதனால் உமக்குக் கட்டளையிடுகிற தென்னவென்றால்,—நீர் ஷை தொகையைக் கேட்கவேண்டும்; அது செலுத்தப்படாவிட்டால், ஷை அவருடைய அசையும் பொருளில் அபராதத் தொகைக்குச் சரியாயிருக்கும்படி போதுமானதை ஐப்திசெய்யவேண்டும்.

பிரெஸிடென்ட்.

VI.—55-வது விதியின்படிக்கான உத்தரவை அமலுக்குக் கொண்டுவருவதற்காக வாரண்ட்.

(வாரன்டை நிறைவேற்றவேண்டிய நபர் அல்லது நபர்களின் பெயரும் உத்தியோக விவரமும்) க்கு.

55-வது விதியின்படி உத்தரவு (உத்தரவின் தன்மையைக் கண்டெழுதவும்) பிறப்பிக்கப்பட்டிருக்கிறபடியால், (இன்னது செய்யவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்க் கண்டெழுதவும்) படி உமக்கு (அல்லது உங்களுக்கு) இதனால் கட்டளையிடப்படுகிறது.

நீர் (அல்லது நீங்கள்) அந்தப்படி செய்யத் தவறக்கூடாது.

-ம் வருஷ மீ° உ

பிரெஸிடென்ட்.

VII.—அபராதம் செலுத்தினதற்கு ரசீது (இரட்டைப்பிரதியாக.)

பஞ்சாயத்து கோர்ட் பாலில் -ம்வருஷத்து -ம் நெ. காலெண்டர் கேஸில், ஜில்லா காலுகாவைச் சேர்ந்த கிராமத்திலுள்ள டைய குமாரராகிய க்கு விதிக்கப்பட்ட அபராதம் பொத்தமாகிய / அபராதத்தின் பாகமாகிய

ரூ ( ) எழுத்தால் ரூபாயாகவுள்ள தொகை பெற்றுக் கொள்ளப்பட்டது.

பிரெஸிடென்ட்.

அனுபந்தம்.

1. நெ. நோட்டீஸ்.

-ம் நெம்பர் ஜாமீன்தாரருக்கு :—

19 -ம் வருஷத்திய நெ. வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியினிடமிருந்து ஜப்திசெய்து உம்முடைய ஸ்வாதீனத்தில் வைக்கப்பட்ட ஜங்கமசொத்துக்களுடன் இந்தக் கோர்ட்டார் முன்பாக 192 -ம் வருஷ மீ உ பகல் மணிக்கு நீர் ஹாஜராகவேண்டியது.

நீர் அப்படி ஹாஜராகத் தவறினால் சட்டப்படி உண்டான நடவடிக்கை உம்மேல் எடுத்துக்கொள்ளப்படுமென்று அறியவும்.

இன்றையதினம் நம்முடைய கோர்ட்டு முத்திரையும் கையொப்பமும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

பிரெஸிடெண்ட்.

2. நெ. ஜப்தி வாரண்ட்.

ஓரத்தில் குறித்திருக்கிற தொகை (இத்தனை ரூபாயை வாதிக்கு செலுத்தும்படி, 19 -ம் வருஷத்து -வது நெம்பர் வியாஜ்ஜியத்தில் 19 -ம் வருஷ மீ உயில் இந்தக் கோர்ட் டிக்ரியினாலே (இன்னாருக்கு) உத்திரவு செய்யப்பட்டிருக்கிற படியாலும்; மேற்படி தொகை (இத்தனை) ரூபாய் செலுத்தப்படவில்லையென்று வாதி நாடுகிற விண்ணப்பத்தின் மூலமாய் தெரியவருகிறபடியாலும், இதனால் உமக்குக்கட்டளை யிடுகிறதென்னவென்றால் :—

டிக்ரி :—	ரூ.	அ.	பை.
அசல்	...	...	
வட்டி	...	...	
செலவு	...	...	
நிறைவேற்றுவதற்கான.			
செலவு	...	...	
பின்னும் ஏற்பட்டவட்டி.			
மொத்தம் ...			

இதனுடன் சேர்க்கப்பட்ட ஜாபிதாவில் கண்டிருக்கிற அல்லது மேற்படி (இன்னாரால்) உமக்கு காட்டப்படுகிற மேற்படி (இன்னாருடைய) அசையும் பொருள்களை (ஸிவில் ப்ரொஸீஜர்கோடு 60-வது பிரிவில் ஜப்தி செய்வதனின்றும் நிவாரணை செய்யப்பட்டவைகளொழிய) நீர் ஜப்தி செய்யவேண்டும். மேலும், மேற்படி

